பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

செப்டெம்பர் 2024



## தெலுங்கானாவில் தமிழ் எழுத்தாளர்

## மைதிலி சம்பத்



வடிவமைப்பு சேவைகள்
DESIGN GLITZ
GRAPHIC DESIGN
எமது சேவைகள்
Logo Design
Banner Design
Designing Business Cards
Flyer Designs
Brochure Design
Certificate/Invitation Designs
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0753761731 / 0779998608

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – செப்டெம்பர் 2024

633


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



நெஞ்சோடு நெஞ்சம்

அன்பான தமிழ்நெஞ்சங்களே! எப்படி இருக்கிறீர்கள்? அனைவரும் நலமா?

காலத்தின் சுழற்சி படுவேகமாக இயங்க, மீண்டுமொரு திங்களில் உங்களை நாடி வந்திருக்கிறோம்.

வருகிற எட்டாம் திகதி உலக எழுத்தறிவு தினமாக அமைந்திருக்கிறது. எழுத்தறிவுதான் நம்மைப் போன்ற எழுத்தாளர்களை எல்லாம் ஒன்று சேர்க்கும் மையப்புள்ளி என்பது சாலப்பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன். எழுத்தறிவின் மூலமே ஒரு நாட்டின் தலையெழுத்தும் நிர்ணயிக்கப் படுகிறது. அதனால் நாம் ஒன்று திரண்டு எழுத்தறிவின் மேம்பாட்டுக்காக உழைப்போம்.

1994 ஆம் வருடம் ஐக்கிய நாடுகள் சபை செப்டம்பர் 16ஆம் திகதியை 'சர்வதேச ஓசோன் தினமாக' அறிவித்ததால், அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 16ஆம் திகதி ஓசோன் தினத்தன்று ஓசோன் துளையின் பாதிப்புகளையும், அதனை மீட்டெடுக்கும் வழிமுறைகளையும் அனைத்து மக்களிடமும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில், பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.இயற்கையைக் காக்க நாமும் நம்மாலான பங்களிப்பினை நல்கி, அரணாக நின்று பாதுகாப்போமாக!

இதுபோலவே, ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மனிதநேயம் வளர்ப்பதும் நம் கடமையாகும்.

வழமை போலவே இம்மாதமும் பல்வேறு படைப்புகளைத் தாங்கி தமிழ்நெஞ்சம் மலர்ந்துள்ளது உங்களனைவரின் நேசமும் வாழ்த்துப் பூத்தூவல்களின் சுகந்தமும் தான் என்னையும் வழிநடத்திச் செல்கிறது. இதுவரை நிறைவாகவே இதழைத் தந்து வருகிறேன் என்ற நம்பிக்கையில் வாழ்த்துகளை கூற விழைகிறேன்.நெஞ்சம் மகிழ்கிறேன்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

தமிழ்நெஞ்சம் அமின் – ஏடி வரதராசன்

# பொருள் நிறைந்தாருக்கே இவ்வுலகு

அமின்

ஏழ்மையிலும் வாழ்வை எழிலாக வாழ்ந்துவிட்டால்
சூழ்நிலைகள் எல்லாம் சுகமாகும் – பாழ்மனத்தில்
எல்லாம் பணமென்று இதயம் நினைத்துவிட்டால்
தொல்லைதான் வாரும் தொடர்ந்து.

.

ஏடி

சூழ்நிலைகள் எல்லாம் சுகமாய் இருப்பதற்கு
ஏழ்மைதான் என்றுரைத்தால் இவ்வுலகில் – போழ்தெல்லாம்
ஓடி உழைப்பதேன் உள்ளம் பணமெண்ணி
வாடிடுதல் ஏனாம் வதைந்து.

.

அமின்

காசு பணமெல்லாம் காலம் முழுக்கவே
பேசுபொருள் மட்டும்தான் பித்தனே – ஆசையின்றி
மண்ணில் மனத்தால் மகிழ்ந்துவிட்டால் அஃதன்றோ
எண்ணில்லா செல்வத்திற் கீடு .

.

ஏடி

மண்ணில் மனத்தால் மகிழ்வுற்றால் போதுமா
விண்வரைக்கும் காசுனக்கு வேண்டாமா – எண்ணிப்பார்
உன்னை உயர்த்துவதும் உன்னை இகழ்வதுவும்
எண்ணுகின்ற காசாகும் இங்கு.

.

அமின்

எண்ணும் பணத்தால் இவனுயர்வு; தொல்லுலகில்
எண்ணும் பணத்தால் இவன்தாழ்வு – என்றுரைத்தால்
இல்லம் எதற்கிங்கே இல்லாளும் பிள்ளையெனும்
செல்வமும் ஏனிங்கே செப்பு?

.

ஏடி

இல்லமும் பிள்ளையும் இந்த உலகத்தில்
செல்வமிருந் தால்தான் சிரிக்குமையா – இல்லையெனில்
நாள்முழுக்க ஏழ்மை நலிவில் மனமுடைந்துன்
கோள்முழுக்க வீணாகும் கொள்.

.

அமின்

கோளுயர்த்திக் காசுதான் கோபுரத்தில் ஏற்றுமென்றால்
நாளும்நம் வாழ்வில் நலமோடு – கோளுயர்த்த
நல்ல முயற்சியிங்கோ நாசமாய் ஆக்குமா
சொல்லடா சொல்லடா சொல்.

.

ஏடி

நல்ல முயற்சிமட்டும் நாம்வளர்த்து வைத்திருந்தால்
செல்லாது செல்லாது செல்லாது – செல்வமெனும்
ஒன்றால் உயரும் உயர்வுக்கு இணையாக
வென்றவர்யார் இங்கே விளம்பு.

.

அமின்

எண்ணுகின்ற காசினால் ஏற்படும் வெற்றியினை
மண்ணோடு சேர்ந்தால் மறந்திடுவார் – விண்முட்டும்
ஆற்றலும் நல்ல அறிவும் இருந்துவிட்டால்
போற்றலுக்கு நீதானே பொன்.

.

ஏடி

ஆற்றலை வைத்திங்கு அழத்தான் முடியுமன்றி
வேற்றுயர்வு இங்கே விளையாது – போற்றும்
மனமெல்லாம் இங்கே மனிதனிடம் உள்ள
பணத்திற்கே நிற்கும் பணிந்து.

.

அமின்

பணத்திற்கு மட்டுமே பாசமெல்லாம் என்றால்
குணமெல்லாம் கொல்கின்ற கூற்றா? – மனமெல்லாம்
அன்பை நிறைத்துவை ஆசை ஒதுக்கிவை
இன்பம் அடைவாய் இனி.

.

ஏடி

.

அன்பும் மனத்தில் அவாவும் இருந்துவிட்டால்
இன்புவரும் என்றால் எலாம்கனவே – நன்மையும்
தீமையும் காசுதான் தீர்மானம் செய்யுமிதை
பூமியில் நெஞ்சுணர்ந்து போ.

.

அமின்

.

நன்மையும் தீமையும் நம்மனம் சார்ந்ததப்பா
என்றுமிது காசால் இசைவதில்லை – உன்மனம்
என்றாசை தன்னை இலாததாய் ஆக்குமோ
அன்றுதான் வாழ்வே அழகு.

.

ஏடி

.

வாழ்வின் அழகுக்கும் வாழ்வின் சிரிப்புக்கும்
பாழ்மனம் ஒன்றுதான் பாலமென்றால் – ஏழ்மையில்
துன்பம் விளைந்துத் துயர்விளைந்து நாளெல்லாம்
இன்பம் கிடைக்காத தேன்.

.

அமின்

.

இன்பமே இல்லையென ஏழ்மையை சாடாதே
அன்புறவே நண்பா அகம்கொள்ளாய் -– துன்பமும்
இன்பமும் சில்லறையில் இல்லை இதையறிந்தால்
நன்மை விளையும் நகைத்து.

.

ஏடி

.

நல்ல மனம்வைத்து நாளும்நம் வாழ்வினிக்க
இல்லானால் வாழ இயலுமெனில் – சில்லரையை
வைத்துள்ளோர் வாழ்வுக்கும் வைக்கார்க்கும் வித்தியாசம்
தைக்கிறதா நெஞ்சில் தனித்து.

.

அமின்

.

வித்தியாசம் உண்டுதான் விண்முட்டும் செல்வத்தால்
எத்திக்கும் உண்டுதான் எல்லாமும் – எத்தருணம்
அந்த பணமின்றி ஆகிறாயோ அனறுனக்கு
எந்த உறவும் இலை.

.

ஏடி

.

எந்த உறவுமே இல்லை எனும்போதும்
அந்தப் பணமெனக்கோர் ஆள்போலாம் – இந்த
உலகத்தில் காசே உறவென்று நெஞ்சில்
கலந்தேன் கலைக்காதே கண்டு.

.

அமின்

.

அன்பே உடன்வாரும் அன்பேகண் நீர்துடைக்கும்
அன்பே உனக்கென்றும் ஆறுதலாம் – அன்புடன்
ஒன்றான நட்புறவே உன்றன் துணையன்றி
என்றும் பணமில்லை இங்கு.

.

ஏடி

.

மன்னியுங்கள் ஐயா மனமுணர்ந்தேன் என்னிடத்தில்
சொன்னதெல்லாம் கேட்டுச் சுகம்பெற்றேன் – இன்றுமுதல்
நித்தம்என் வாழ்வில் நினைக்காமல் ஆசையினை
அத்தனை யும்தொலைத்தேன் ஆய்ந்து.



# மூதி

## கருமலைப்பழம் நீ

பதுங்கிப் பாய்ந்த
முதுமை என்னை
பற்றிக்கொண்டு
படாதபாடு படுத்துகிறது

பகலென்றும் பாராமல்
அடிக்கடி தூக்கம்
கண்களைச் சாய்க்கிறது
இரவில் தூக்கம் வராமல்
புரண்டு படுக்க வைக்கிறது

அடிக்கடி மூளைக்கு
வேலை கொடுக்கணும்
முடிந்தவரை நடக்கணும்
இப்படியெல்லாம்
அறிவுரை அம்புகள்
பாய்ந்த வண்ணம் உள்ளன

தைரியமா இருக்கணும்
முதுமையில் தள்ளாட்டம்
வந்துதான் தீரும்
தன்னம்பிக்கை முக்கியம்
குடும்ப மருத்துவரின்
ஆறுதல் வார்த்தைகள்

அங்காடி செல்ல
தள்ளாடி நடக்கையில்...
எங்கே போகிறது
இந்தச் சாலை
எங்குநான் செல்ல வேண்டும்

விடைதெரியாத வினாக்கள்
விதவிதமாய் எழுகின்றன

தூக்கம் வாரா இரவில்
சிந்தனைகள் தொடர்கின்றன
காலை என்ன சிற்றுண்டி
மதியம் என்ன உண்டேன்
மாத்திரைகள் எடுத்துக் கொண்டேனா
சந்தேகங்கள் சுரக்கின்றன

இளமைக்கால நினைவுகள்
நீங்காமல் இருப்பது போல் ஏன்
முதுமையில் இருப்பதில்லை
ஏனிந்த தடுமாற்றங்கள்

இப்போது கூட ஓர்மனிதர்
என்முன்னே வந்து வணங்குகிறார்
ஏதேதோ பேசுகிறார்
யார் இவர்...இதற்குமுன் இவரை
எங்கு பார்த்திருக்கிறேன்
மூளையைப் போட்டுக் கசக்குகிறேன்
இன்னும் கூட நினைவிற்கு
வரவில்லையே...என்ன சொல்ல?



# உளி பேசும் மொழி



18

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

புவியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஆதாரமானதாகவும், ஒவ்வொரு ஜீவராசிகளின் வாழ்க்கைக்கும் முக்கியமானதாகவும், கருதப்படுவது நீராகும். இக்கூற்றானது, சங்க காலத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் முதற்கொண்டு 'பா' இயற்றும் அறிவார்ந்த புலவர்கள் மட்டுமின்றி, நாட்டை ஆளும் மன்னர்கள் வரை நீரின் மகத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தனர் என்பதற்குச் சாட்சியாக இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகும் கம்பீரமாக இடைவிடாது இன்றும் தன்னுடைய பணியினைச் செய்து கொண்டிருக்கும் உலகில் உள்ள தொன்மையான கல்லணை என்ற அரிய பொக்கிஷமான நீர்த்தேக்கத்தைக் காணும் போது நம்மால் உணரமுடியும்.

இவ்வணையானது, முக்காலச் சோழர்களில் பிரசித்திபெற்ற கரிகால சோழனால் கட்டப்பட்டது என்பது நாம் அனைவரும் அறிந்ததே! அவ்வழி வகையில் கரிகாலனுக்குப் பின்வந்த கோச்செங்கணான் என்ற மன்னனால் நீரினை முதன்மைப் படுத்தி, அதற்கென்று ஒரு சிவாலயம் எழுப்பப்பட்டதுள்ளது. அவ்வாலயமே இன்றைய தமிழகத்தின் மையத்தில் அமைந்த திருச்சிராப்பள்ளி மாநகரத்தின் அருகே உள்ள திருவானைக் கோவில் அருள்மிகு. ஜம்புகேசுவரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவில் ஆகும். இத்திருத்தலமானது பஞ்சபூதங்களில் ஒன்றான நீரினை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. அவ்வழியே பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது.

பண்டைய காலங்களில் கோயில்களின் கட்டுமான கட்டிடக்கலையானது பல வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வகைகளில் ஒன்றான மாடக்கோவில் அமைப்புடன் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் ஜம்புகேசுவரர் ஆலயம் என்பது மிகச் சிறப்பான ஒன்றாகும்.

திருக்கோவிலின் கருவறையானது, படிகள் பல கொண்ட உயரமான இடத்தில் அமைக்கப்பட்டு, கட்டப்படும் முறைக்கு மாடக்கோயில்கள் என்று அழைக்கப்பட்டது. இவ்வகையான மாடக் கோவில்களின் அமைப்பில் 70க்கும் மேற்பட்ட சிவாலயங்களைக் கோச்செங்கணான் கட்டியுள்ளதைக் குறிக்கும் வகையில்

**“எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்டதாக”** எனத் திருமங்கையாழ்வார்ப் பாடியுள்ளார். அவ்வழியே சுந்தரர், பாடிய






திருத்தொண்டர்த் தொகையில் நாயன்மார் வரிசையில் கோச்செங்கணானும் சேர்க்கப் பட்டிருக்கிறார். இதன் மூலம் அவரது சிவத்தொண்டு மட்டுமல்லாது அவர் எழுப்பிய கலைநயமிக்க கோயில் கட்டிடங்கள் அதற்கு மேலும் பெருமைச் சேர்க்கிறது.

இத்திருக்கோவிலானது நீர்த்தலம் என்பதற்கேற்ப மூலவரான ஜம்புகேசுவரர் அப்புலிங்கமாகக் காட்சி அளிக்கிறார். 'அப்பு' என்பது வடமொழிச் சொல் அதற்கு 'நீர்' என்று பொருள். அந்த அப்புலிங்கத்தைச் சுற்றி எப்பொழுதும் நீர் சுழன்றவண்ணம் காணப்படுகிறது. மேலும், கோடைக் காலங்களில் ஈரப்பதத்துடனும், மழைக்காலங்களில் நீர்ச் சூழ்ந்தும் மூலவர்க் காட்சியளிக்கிறார். இத்திருத்தலமானது காவிரி ஆற்றிற்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் கட்டப்பட்டிருப்பதும், மூலவர் வீற்றிருக்கும் கருவறையானது தரைமட்டத்திற்குக் கீழ் இருப்பதாலும், அந்நிலப்பரப்பு நீரோட்டத்தின் மேல் அமையப்பெற்றிருப்பதாலும் அவ்விடம் எப்பொழுதும் நீர்ச் சூழ்ந்து காணப் பட்டிருக்கும். இது பல நூற்றாண்டுகள் கழிந்தும் தொடர்ந்து இன்றும் நடை பெற்றுக் கொண்டிருப்பது என்பது ஒரு ஆச்சரியமான விடயமாகும். ஏனெனில் புவியின் இயக்கத்தினாலும், இயற்கை பேரிடர்களாலும், எந்த விதமான தாக்கம் ஏதுவுமின்றி இன்றும் நீரின் இயக்கமானது மூலவரை வலம் வந்து கொண்டிருப்பது அதிசயமான ஒன்றாகும்.

இவ்வாலயமானது கோச்செங்கணால் கட்டப்பட்டிருப்பினும், அதன் பிறகு பல்வேறு மன்னர்களால் நூற்றாண்டுகள் இடைவெளியில் அடுத்தடுத்து நிலைகளில் விரிவுபடுத்தப்பட்டுமிகப்பிரமாண்டமான கோபுரங்கள் மற்றும் தூண்களைக் கொண்டு எழுப்பபட்டுள்ளது. நூற்றாண்டுகள் கால இடைவெளியில் பல கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பினும் திருக்கோவிலின் கட்டிட அமைப்பிற்கு எந்தவிதப் பாதிப்புமின்றி அனைத்துக் கட்டிடங்களும் ஒரே காலகட்டத்தில்



கட்டப்பட்டுள்ளதைப் போன்று அதே பொலிவுடன் காணப்படுகிறது. அதன் வழியே நம் முன்னோர்கள் கட்டிடவியலில் கொண்டிருந்த ஆர்வத்தையும் அவர்களின் நுண்ணறிவையும் நம்மால் உணர முடியும்.

இத்திருக்கோவிலானது ஐந்து பிரகாரங்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. இதில் ஐந்தாவது பிரகார மானது ராஜகோபுரத்துடன் கூடிய நுழை வாயிலுடன் கம்பீரமாகப் பக்தர்களை வரவேற்கிறது. இந்தக் கோபுரமானது ஆலயத்தின் மேற்குப் புறத்தில் முதன்மை வாயிலாக அமைக்கப்பட்டுள்ளது. நான்காம் பிரகாரத்தில் கிழக்குப் பகுதியில் சுந்தரபாண்டியன் கோபுரமும், மேற்கு பகுதியில் மல்லப்பன் கோபுரமும் அதனை அடுத்து அதே பகுதியில் கார்த்திகைக் கோபுரமும் எழுப்பப்பட்டுக் கோபுர வாயில்கள் அழகு மிளிர காட்சியளிக்கின்றன.

பிரகாரங்கள் ஐந்து அடுக்காக அமைந்திருப்பினும், திருக்கோயிலின் உள்ளே பல மண்டபங்கள் அமைக்கப் பட்டுள்ளன. மண்டபங்கள் யாவும் நூற்றுக்கணக்கான அழகிய வேலைப் பாட்டுடன் கூடிய சிற்பங்கள் பொறிக்கப் பட்டுப் பிரம்மாண்டமான கல்தூண்களால் நிறுவப்பட்டுள்ளது. மேலும் கோயில் முழுமையும் கருங்கற்களால் ஆன தூண்களே கட்டிடத்தின் ஆதாரமாக உள்ளது என்பது காண்போரைப் பிரமிக்க வைப்பதோடு மட்டுமின்றிப் பல நூற்றாண்டுகள் கடந்தும் இவ்வாலய மானது பலவித இயற்கைப் பேரிடர்களைத் தாங்கி இன்றும் அதன் தன்மைச் சிறிதும் குன்றாமல் வீற்றிருக்கிறது என்பது ஆச்சரியத்தையும் அளிக்கிறது. இதுபோன்று மேலும் பல சிறப்புகளைக் கொண்ட இந்த ஆலயத்தினைப் பற்றி அறிந்து கொள்ள உளியின் மொழியோடு தொடருங்கள்.

உளியின் மொழித்
தொடர்ந்து பேசும்...



# பழத்தவர் பகிர்வு

தாவரங்கள், விலங்குகளுடனான பண்டைத் தமிழர் உறவு முதல், கல்லணை கட்டுமானச் சிறப்பு வரை ஆழ்ந்த, செறிந்த தகவல்கள், கருத்துகள்... தற்போது பொன்னி நதியில் பாய்ந்து வரும் புதுவெள்ளத்தில் மூழ்கித் திளைப்பது போன்ற, பொதிகை மலையில் புரண்டெழுந்து வந்த தூய காற்று நெஞ்சம் நிறைப்பது போன்ற புத்துணர்வு. மனம் மகிழ்ந்த பாராட்டுகள்.

- திரு. பழனியப்பன் அவர்கள்-
(எடிட்டர்.எழுத்தாளர்
தினத்தந்தி - தேவதை )



## சாலைகளின் மீது அவ்வளவு கோபம்

வேகத் தடைகளை
ஏறி இறங்கும் போதும்
வாகன நெரிசலில்
சிக்கித் தவிக்கும் போதும்
முன்னால் செல்பவர் கவனத்தோடு
மெதுவாக செல்லும் போதும்
ஒரு பெரியவர் நடுக்கத்தோடு
சாலையை கடக்கும் போதும்
மாடுகளோ நாய்களோ
குறுக்கே ஓடும் போதும்
மனதால் வானத்தில் பறக்கலாம்
வாகனம் பறக்காதென
யார் சொல்வது
பெருத்த சத்தமெழுப்பி
சாலைகளின் மீது
அவ்வளவு
கோபம் கொள்பவர்களுக்கு!!!

- கி.கவியரசன்
செங்கம், திருவண்ணாமலை

## கண்ணன்

குழலூதும் கண்ணவன் கூடிய பெண்கள்
குழலை இழுப்பான் குழந்தை - அழகன்
கரியவண்ணன் காவலன் காரிருள் போக்கப்
பரிவாக வந்துதித்தான் பார்

வெண்ணெய் திருடியவன் வேடிக்கை காட்டிடுவான்
மண்ணையும் தான்தின்பான் வாசலில் - கண்ணன்
தவிக்கவும் செய்திடுவான் தாயை அணைப்பான்
மயங்கி அவளோ..மகிழ்ந்து

கோதையின் கண்ணனவன் கோபியரைக் கொஞ்சுவான்
ராதையைச் சீண்டுவான் ராதையும் - வாதையில்
உள்ளம் வெதும்ப உடன்வசியம் செய்திடுவான்
அள்ளி அணைப்பான்... அழகு



தென்றல் கவி
(தமிழ்ச்சிட்டு!)

## ஆசிரியரின் குழந்தை(கள்)

அடையாள அட்டையை அணியும் போது
அவதனிக்கின்றான்
காலணிகளை அணியும் போது
அழத் தொடங்குகின்றான்
கிரில் கதவினை திறக்க முயல்கையில்
கால்களை கட்டி அடம்பிடிக்கத் தொடங்குகின்றான்
அவனுக்கு எப்படி புரியவைப்பேன்?
எனக்காக குழந்தைகள் காத்திருக்குமென்று?

Dr. ரமேஷ் தங்கமணி MSc., PhD., SLET



விஞ்ஞானி, ஜி.எஸ். கில் ஆய்வு நிறுவனம், வேளச்சேரி – 42

# பொறுமை



**இதயமலர்**, சென்னை

பொறுமை தேவையான ஒன்றாக இருந்தாலும் தேடிப்பார்க்க வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது. காலத்தையும் நேரத்தையும் கட்டிப் போட முடியாது. ஆனால் பொறுமை காலத்தையும் நேரத்தையும் நன்றாக ஆக்கித் தரும். பொறுமையை கடைப் பிடிப்பவர்களுக்கு உடலும் மனமும் ஆரோக்கியமாகவே இருக்கிறது. படபடப்பு என்பது இந்த பரபரப்பான உலகத்தில் கூடவே வருகிறது. யாரால் படபடப்பின்றி வாழ முடியுமென்றால் பொறுமையுள்ளவனால் மட்டுமே என்பதே பதிலாகிறது. கோபத்தை புயலென்றால், பொறுமையை தென்றல் என்று சொல்லலாம். ஆனால் தென்றலை விரும்பாதவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றோம். எதிலும் அவசரம். நிதானம் என்பது யாருக்கும் எதிலும் இல்லை. நூறில் பயணப்பட்டு, நூற்றியெட்டில் விழுவது போல வாழ்வு விரைகிறது.

பொறுமையை இழந்து நிதானம் தவறி செய்கின்ற செயலெதுவும் வெற்றி காண்பதில்லை. திட்டமிடல் என்பது பொறுமைக்கு அவசியமான ஒன்றென புரிந்து கொள்ள வேண்டும். ஒரு இடத்திற்கு போக வேண்டும் என்று திட்ட மிட்டால் ஐந்து நிமிடம் முன்னதாக தயார் ஆவதில் தவறொன்றும் இல்லை. அவசர அவசரமாக பயணப்படும் போது முக்கியமான ஒன்றை மறந்து விட்டு படபடப்புக்கு ஆளாகின்றோம். எது முக்கியமோ அதையெல்லாம் எடுத்து வைத்துக் கொள்ள குறித்து வைத்துக் கொள்வதால் யாரும் குறைவாக மதிப் பிடப் போவதில்லை. பதறிய காரியம் சிதறும் என்பது அனுபவம் தருகின்ற பாடம். திட்டமிடல் தெளிவாக இருந்தால் செயலும் முடிவும் என்றும் தெளிவாகவே இருக்கும். அவசரமாகவே கிளம்ப வேண்டியிருந்தாலும் அத்தியாவசியமான பொருள்களை (மருந்து மாத்திரை உட்பட) எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

போகிற இடத்தில் பார்த்துக் கொள்ள லாம் என்ற நினைப்பு, நம்மை மோச மடையச் செய்துவிடும். ஒன்று கிடைக்கா மல் போகலாம். அல்லது வாங்க முடியாத நிலை ஏற்படலாம். பொறுமையாக யோசித்து இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. பொறுமை எங்கெல்லாம் மிகமிக அவசியம் என்றால் உன்னை யாரும் விமர்சிக்கும் போதோ, பாராட்டும் போதோ மனதை உன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். கோபம் வரும் போதும், தாமதம் ஏற்படும் போதும், பொறுமை மிகவும் அவசியம்.

உன்னை நிதானமிழக்கச் செய்வதற் காக, வேண்டுமென்றே கூட சிலர் சிலவாறு சொல்லலாம், செய்யலாம். அமைதியாய் இருந்தால் பொறுமையின் பலன் தெரியும். கோபம் வரும் நேரங்களில் மனதைக் கட்டுபடுத்துபவன் உறவுகளை யும் நட்பையும் சம்பாதிக்கின்றான். எதிர் வார்த்தைகளை எடுத்து வீசும் போது எதிரியாகவே ஆகி விடுவதையும் உணரலாம். பொறுமை என்பது நேரம் காலம் செயல் எல்லாவற்றிலும் முக்கியமாகிறது.

பொறுமை என்பதை பார்த்திட வழி யில்லை. நமக்குள் இருக்க வேண்டிய உணர்வு. பொறுமைக்கு அளவும் கிடை யாது. புரிதல் வேண்டும். சில விசயங் களுக்கு கால அவகாசம் தேவை யென்ற புரிதலும் வேண்டும். விதை யொன்றை விதைத்து விட்டு அடுத்த நாளே முளை விடும் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம். பால் உடனே கிடைக்கும், தயிர் வேண்டுமானால் காத்திருக்கத் தான் வேண்டும். மருந்து உடலில் சேர்ந்த பின் தான் நோய் முழுவதும் குணமாகும். எதற்கும் பொறுமை வேண்டும். பூ மொட்டாக இருந்தால் விரியும் வரை பொறுத்திருந்து தான், பூவை ரசிக்க முடியும்.

இங்கே பொறுமை, காத்திருப்பதில் கருவாக உள்ளது. அதே நேரம் காத்திருப்பு, பொறுமை இவைகளின் புரிதல் இல்லாமல் ''ஒன்றுமே செய்யாத சோம்பேறித் தனத்தை'' பொறுமையின் பொருளுக்குள் கொண்டுவரக்கூடாது.

நல்ல சூழலும் நல்லபடியான முன்னேற்பாடுகளும் இருந்தபோதும் நான் பொறுமையாக இருப்பேன் என்பது சோம்பேறித் தனமானது. எதையும் கண்டு அச்சப்படுபவன் எதையும் செய்ய முடியாது. அவனால் யாருக்கும் பயன் இல்லை. அவனது நிலையை பொறுமை யின் கணக்குள் கொண்டு வரக்கூடாது. உழைக்காமல் உயர்வடைய நினைப்பவன் வாழத் தகுதியற்றவன் தான்.

ஒருபரிசுச்சீட்டுவாங்கிகோடிசுவரனாக கனவு காண்பவனிடம் எதையும் எதிர் பார்க்கக் கூடாது. ஒருநாள் ஒருவன் கடவுளைப் பார்த்துக் கேட்டானாம். உனக்கு கோடி என்பதெல்லாம் ஒரு காசு மாதிரி தானே.அப்போ எனக்கு ஒரு காசு தரக்கூடாதா என்று கேட்க, கடவுளும் ஒரு யுகம் கூட. எனக்கு ஒரு நிமிடம் மாதிரி தான். ஒரு நிமிடம் பொறு என்று சொன்னாராம். படித்ததில் பிடித்தது தான் இது. புரிவது ஆண்டவனே ஆனாலும் உழைக்காமல் இருப்பவனை உயர்த்த மாட்டான்.

பொறுமை என்பது இறை குணம் ஆகும். பொறுமையென்பதை இளந்தளி ரோடு ஒப்பிட்டால், துன்பங்கள் பிரச்சனைகள் வரும்போது அலைபாய்ந்தாலும் சாதா ரணமான நிலையில் அழகோடு நிமிர்ந்து நிற்பதாகும். கடவுளை வேண்டி தொழு திடவும் பொறுமை அவசியம். பொறு மையைக் கடை பிடிப்பது கடினமான ஒன்றுதான். அதனால் தான் அதற்கு பயிற்சி வேண்டும். தவம் என்பது பொறுமையின் உச்சம் தான். தவத்திற்கு நிச்சயம் வரம் உண்டு. வரம் வாழ்வாகும் போது வளமையும் உண்டு. ஆனால் கடவுளைக் காண்பதற்குக் கூட பொறுமை யில்லாதவனை என்ன செய்வது? வரிசையில் நிற்பதை தரக் குறைவாக நினைப்பவனிடம் பொறுமையை பற்றி சொல்ல முடியாது.

பொறுமை எப்போது நம்மை வளப் படுத்தும் என்றால்,கோபம் அகங்காரம், ஆணவம், சலனம், சபலம் இவைகள் நம்மை விட்டுப் போகும் போதுதான் என்பதை உணர வேண்டும். பொறுமை

என்பதை தனியாக இருக்கும் போது உணர முடியாது. திருமணம் ஆன உடனே பொறுமையைப் பற்றிச் சொல்வதை அறியலாம். அதுவரை தெரியாத ஒன்று, மனைவியோ, கணவனோ, வந்ததும் தெரிய வரும். தனியாக இருந்தவரை அறியாத சில செயல்கள், நமக்கு ஒத்து வராததாகவோ அல்லது இதுவரை கண்டிராத ஒன்றாகவோ இருக்கலாம். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள பொறுமை அவசியமாகிறது. இல்லையேல் வாழ்க்கை இங்கே பொய்த்து விடுகிறது.

பொறுமை என்ற ஒன்றில் புரிதல் என்ற ஒன்று இருந்தாலும், காத்திருக்கும் புரிதலுக்கான பொறுமையான நேரத்தில் “நடந்து கொள்ள வேண்டிய முறையும்” முக்கியமாகிறது. சகிப்புத்தன்மை யில்லா தவனுக்கு பொறுமை பிடிபடாது.

பொறுமை என்பது பலமான ஆயுதம். சந்தேகம் இல்லை. ஆயுதம் என்று சொல்லும் போதே அதனை உபயோகிக்க வேண்டிய முறைகளையும் தெரிந்து கொள்ளுதல் அவசியம். கத்தியே என்றாலும் யாரிடம் இருக்கிறது என்பதில் அதன் பயன்பாடு இருக்கும், சிறக்கும்.

பொறுமையும் பல முகங்களைக் கொண்டது தான். ஏற்கெனவே சொன்னது போல், கோபம் இல்லா திருத்தல், சபலப்படாதிருத்தல், சஞ்சலம் கொள்ளாதிருத்தல், அகங்காரம் ஆணவம் இல்லாதிருத்தல் என பல முகங்கள்உண்டு. வேகம் என்பது தேவையான விசயங்களில் வேண்டும். அதே நேரம் அதிவேகம் ஆபத்தானது. அப்போது அவசியம் நிதானம் வேண்டும். ‘‘பொறுமையின்றி இருக்கும் போது நிதானம் இழந்து, உதிர்க்கும் வலியான வார்த்தைகளால் எத்தனையோ உறவுகள் தடயமே இல்லாமல் தனித்து விடப் பட்டுள்ளன”.

நமது பலவீனம் பொறுமையின்மை எனத் தெரிந்தால் விதண்டாவாதம் செய்வதற்கே பலர் வருவார்கள். வாதம் விவாதம் இவைகளை விட விதண்டா வாதம் நம்மை பழிவாங்கும் நோக்குடனேயே இருக்கும் என உணர்ந்து பொறுமையாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். பொறுமையைக் கடைபிடிக்கலாம். தவறில்லை. மௌனம் மாதிரியே பொறுமையும் வாழ்வை வளப்படுத்தும். லாவணி பாடுவதால் ஒன்றும் ஆகப் போவதில்லை. சில மணி நேர தாமதம் வாழ்வை சீராக்கவும் செய்யும். பொறுத்தார் பூமியாள்வார். பொன்மொழி அறிவீர். பொறுமையோடு புத்தியும் அனுபவமும் சேரும்போது புத்துணர்வாய் வாழ்க்கை அமையும்.



அருவிக் கரையில் அமர்ந்திருக்கும் சிட்டே
குருவியினம் தேடியிங்கு வந்தோம் - அரும்பாய்
மருண்டு மிரளாமல் வந்துவிடு; சற்றும்
சுருண்டு படித்திடாமல் வா

காடுமலை யேறி களைத்தே அமர்ந்துநீயும்
நாடா செயல்கள் நமக்கது - வேண்டாம்
நட்புடனே நாடுபோற்ற செய்வோம் நல்லதொரு
நற்செயல்கள் புரிவோமே நாம்.

தமிழுமின்

# ஹைக்கூ கவிதைகள்

நிலத்தில் ஊர்ந்து
நினைத்தவிடம் சேர்கிறது
இறைத்த நீர்

காவலாளியின் தகரக்கூண்டு
கூரையில் விழுந்தபடி
குளிர்ச்சி தரும் பழுத்தவிலைகள்

சூடு காணும் முன்
குளிரூட்டப்பட்டுகிறது
பெட்டியில் பிணம்

ஒரே மரம்
பல கனிகள்
மாறாத சுவை

வெள்ளப் பெருக்கு
காப்பாற்ற முடியவில்லை
ஆலயங்களை

தகப்பன் சொத்து
பிரித்ததும் துடிக்கும் பிள்ளைகள்
தனிக்குடித்தனம் போவதற்கு

நெருங்கிய நட்பு
சுருங்கிப்போனதும்
சுடுகின்றன சொற்கள்

வாசலுக்கு வருகை
தலையசைக்கும் பூம் பூம் மாடுகள்
ஓ…இது தேர்தல் காலம்!

பால் வியாபாரி
பிள்ளைகளுக்கு வீட்டில்
பசியாறத் திறைந்த பால்

குறையும் அன்பு
நிறைந்து விடும்
விழிகள்

தலையில் கனம்
தலைக்கனமின்றி அமைதியாக
சுமக்கும் மரம்

பிரித்து உண்பதற்கு
கற்றுக்கொண்டன
குப்பைத்தொட்டியில் விலங்குகள்

துன்பங்கள் யாவும்
மறைந்து போய் விட்டன
'ஹைக்கூ' எழுதப் பழகியதும்



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# தூங்கா நகரத்துப் பூங்கா

**வஃபீரா வஃபி**



வானத்தை உரசக் கங்கணம் கட்டிக் கொண்டு உயர்ந்து நிற்கும் கொங்க்ரீட் காடுகளின் மத்தியில், இரைச்சல்களோடு பயணிக்கும் வாகனங்களும், பச்சை, சிவப்பு,மஞ்சள் நிறங்களில் கண்சிமிட்டும் சமிக்ஞை விளக்குகளும், சாரை சாரையாய் பாதையைக் கடக்கும் மக்களுமாக கொஞ்சம் சுறுசுறுப்பாகவே, இரவிலும் இயங்கும் தூங்கா நகரமது. அங்கு தான் சற்று ஒதுக்குப்புறமாக தன் கணவர், மகன் சகிதம் சுப்பம்மா வாழ்ந்து கொண்டிருக்கிறாள். கணவன் ராமு ஓர் அடுக்குத் தொடர்மாடிக் கட்டடத்தில் காவலாளியாக பணி புரிய, சுப்பம்மா அங்குள்ள ஒரு பாலர் பாடசாலையில் ஒரு உதவியாளராகப் பணி செய்கிறாள். அவள் வீட்டின் முன்புறமாக, வெளிர் மற்றும் அடர் மஞ்சள் நிறத்தில் சரங்களாகப் பூத்துக் குலுங்கும் பொன்கொன்றை மலர்களைத் தாங்கிய மரம் வரவேற்க, பின்புறமாக ஒரு மரக்கறித் தோட்டம் காண்போரை வசீகரித்துக் கொண்டிருந்தது. அதைக் கூடுதலாக பராமரிப்பது மகன் சிவாதான். அவன் 24 வயது நிரம்பிய வாலிபன். படிப்பை முடித்து விவசாயத் துறையிலும் புலமை பெற்றவன். அவனது பராமரிப்பின் கீழ் அந்த சிறு தோட்டம் செழித்து, பசுமையை அணிந்திருந்தது. எங்கு திரும்பினாலும் கத்தரி, வெண்டி, மிளகாய்,

பாகல், புடலை, பீர்க்கு, கீரை வகைகள், வாழை என பூக்களும், பிஞ்சுகளும் காய்களுமாக காற்றில் ஆடியவண்ணம் இருந்தன. இத்தனை செழிப்புக்கும் காரணமாக இயற்கை உரம் கைகொடுத்தது. அவர்கள் வீட்டு சமயலறைக் கழிவுகள் தோட்டத்தின் ஒரு மூலையில் உரமாக உருமாற்றம் பெற்றுக் கொண்டிருக்க, தோட்டத்தில் இருந்த மகிழ மரமும் அதனடியில் இருந்த கிணறும் அந்த சுற்றாடலை அழகு படுத்தியதோடு, அதிக குளுமையையும் வாசனையையும் பரப்பிக் கொண்டிருந்தன. அந்த தூங்கா நகருக்கு கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லாதது போல் ஒரு கிராமிய சூழலை உருவாக்கிக் கொண்டிருந்தது இவர்கள் வீட்டுத் தோட்டம்.

இரசாயனம் கலந்த உரவகைகளும் பூச்சிநாசினிகளும் மரக்கறிகளில் விஷத்தை விதைத்து மக்களை நோயாளிகளாக மாற்றிக்கொண்டிருக்கும்தற்காலத்தில், ஏன் பழைய கால இயற்கை விவசாய முறையை நாடக்கூடாதென்ற எண்ணப்பாட்டின் விளைவே இன்று, சிவா அதில் முயற்சி செய்து வெற்றியும் கண்டிருக்கிறான். சுப்பம்மாவும் தன் வேலை தவிர்ந்த ஏனைய நேரத்தில், அயல் வீடுகளில் சேரும் சமையலறைக் கழிவுகளை வாங்கி வந்து தோட்டத்தில் சேர்ப்பாள். மண்புழு உரமும் இவளின் மேற்பார்வையில் தயாராகிக் கொண்டிருந்தது. இந்த சமய லறைக் கழிவுகளை மற்ற கழிவுப் பொருட்களுடன் சேர்க்காமல், தனி யாகப் பிரித்துப் போட்டால் தனக்கு பசளை செய்ய உதவியாக இருக்கும் என்ற வேண்டுகோளையும் ஊராரிடம் முன்வைத்திருந்தாள் சுப்பம்மா. இதனைப் புரிந்து கொள்ளாத ஒரு சிலரோ 'ஏம்மா, இது ஒண்ணுதான் நம்ம வேலையா? சரிதான் போம்மா' என கடுப்பாகவே சொல்லத்தான் செய்தார் கள். இப்படி கழிவுகளை சேர்ப்ப தாலேயே குப்பம்மா எனக் கேலி பேசிய வர்களும் உண்டு. இதையெல்லாம் அவள் பொருட்படுத்தியதே இல்லை. உணவு உற்பத்தியிலும் கலப்படம் வந்து விட்ட நிலையில், எங்கு திரும்பினாலும் பெயர் தெரியாத நோய்களாலும், நோயெ திர்ப்பு சக்திக் குறைவினாலும் நோயா ளிகளாகிப் போன குழந்தைகளும், வயதானவர்களு மாக சமுதாயமே அல்லல்பட்டுக் கொண்டிருப்பதை பார்த்தவள் அவள். அதிலிருந்து மீட்சி பெறத் தன்னாலான சிறு பங்களிப்பையாவது இந்த சமுதாயத்துக்கு செய்ய வேண்டுமென்ற அவளது நோக்கில் பொதுநலமே நிறைந்திருந்தது. உண்மை யிலேயே அவள் கணவனுக்கு வயது 67 ஆனபோதிலும் எந்த நோயாலும் இதுவரை அவதிக்கு உள்ளானதில்லை. அவளும் சிவாவும் கூட நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்கக் காரணம் அவர்களின் இரசாயனக் கலவையற்ற உணவு வகைகளும் அவர்களது ஆரோக்கிய மான வாழ்க்கை முறையும் தான்.

அதிகாலை எழுந்து, காலைக் கடன் களை முடித்து நகராட்சிப் பூங்காவைச் சுற்றி நடைப்பயிற்சியில் ஈடுபடும் ராமு வும், வீடு,வாசல், தோட்டம் பெருக்கி கோலமிடும் சுப்பம்மாவும் எப்பொழுதும் சுறுசுறுப்பெனும் இயந்திரத்தை தன்னோடு பூட்டிக் கொண்டவர்கள். சிவாவும் அவர்களுக்கு சளைத்தவனல்ல. காலையி லேயே மண்வெட்டி சகிதம் தோட்டத்திற்கு வரும் சிவா தாவரங்களுக்கு நீர் பாய்ச்சி, பாத்தி வெட்டி அணை கட்டுவான்; களை எடுப்பான்.அன்றும் அப்படித்தான் புதிய வகை மிளகாய்க்கான பாத்தியைத் தயார் செய்யும் போதே சுடச்சுட நேநீரும் கையுமாக ராமு வந்து சேர, கொஞ்ச நேரத்திலேயே காலைச் சாப்பாட்டுக்கென அவித்த மரவள்ளிக் கிழங்கும், கல்லுரலில் இடித்த மாசிச் சம்பலும் துருவிய தேங்காயுடன் சுப்பம்மா வந்து சேர்ந்தாள். தோட்டத்திலேயே

எல்லாம் எடுத்து வைத்து பரிமாறினாள். எப்போதுமே பறவைகளின் இன்னிசைக் கச்சேரியோடும் ஊர்ப் புதினங்களோடும் காலை உணவு களைகட்டும். சுப்பம்மா 'நாம இந்த இயற்கை உரத்தை பாக்கெட் பண்ணி விற்பனை செய்வதோடு, வீட்டுத் தோட்டச் செய்கையையும் எல்லா வீடுகளிலும் செய்வதற்கும் நாம் ஊக்கப்படுத்த வேண்டும்' என்றொரு யோசனையை முன்வைத்தாள். சிவாவும் அதை ஆமோதித்து 'ஆமாம்மா! இப்போதிருக்கும் பொருளாதாரப் பிரச்சினையில் இது நம்மவர்களுக்குப் பெரிதும் கைகொடுக்குமே!' என்று சொன்னான். ராமுவும் ' அது மட்டுமா, இரசாயனமின்றி இயற்கையாய் விளைந்த காய்கறிகளின் ருசியையும் நம் மக்கள் அறிந்து கொள்ள இந்த பயனுள்ள தோட்டச்செய்கை ஒரு வாய்ப்பாக அமையுமே!' என்றார்.

ஒவ்வொரு நாளும் விளைச்சலில் கிடைக்கும் மரக்கறிகள் சுப்பம்மா கைப்பக்குவத்தில் ஆரோக்கிய சமையலாக அவர்கள் சாப்பாட்டுத் தட்டில் இடம் பிடிக்கத் தவறுவதே இல்லை. ஒருநாள் இரவு செய்த கேழ்வரகு களியில் நீரூற்றி வைத்து, காலையில் மோரில் கரைத்து, சின்ன வெங்காயமும், பச்சை மிளகாயும், கருவேப்பிலையும் அரிந்து அளவாக உப்பிட்டு மண் கலயத்தில் ஊற்றி பரிமாறுவாள். அதன் சுவையும், குணமும் சொல்லில் அடங்காது. இன்னொரு நாள் உழுத்தம்பருப்பு, பயறு.வெந்தயம், பூண்டு சேர்த்து செய்த கஞ்சிக்கு தொட்டுக் கொள்ள, பறித்தெடுத்த கருவேப்பிலை, புதினா, இஞ்சி, தேங்காய், புளி சேர்த்து அம்மியில் அரைத்த துவையல் சுவை சேர்க்கும். அது உடல் அயர்ச்சிக்கும், வலிகளுக்கும் அருமருந்தாகிப் புத்துணர்வு கொடுக்கும். உணவே மருந்து என சும்மாவா சொன்னார்கள் நம் முன்னோர்கள்? கொள்ளுத் தோசை, நவதானிய இட்லி, எள்ளுச் சட்னி, பலாப்பிஞ்சு கட்லட், இராசவள்ளிக் கிழங்கு மில்க் ஷேக், கீரை பிரியாணி, இதுபோன்று அலுக்காமல் புது முயற்சிகளை சமையலில் செய்து வெற்றி கண்டவள், கூடியவரை சுவையூட்டிகள் நிறமூட்டிகளைத் தவிர்த்து இயற்கையாகவே பல வர்ணங்களில் கிடைக்கும் காய்கறிகளை பயன்படுத்தி, உணவு வகைகளுக்கு நிறமும் சுவையும் சேர்த்தாள். அதுவும் விறகடுப்பில் சமைக்கும் போது அந்த சாப்பாட்டிற்கே ஒரு தனிச்சுவை இருந்தது.

அன்று பாலர் பாடசாலையின் இறுதித் தவணைக்குரிய கடைசி நாள். அன்றைய தினம் குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டு, சமையல் பொறுப்பை சுப்பம்மாவிடம் கொடுத்திருந்தார்கள் நிர்வாகத்தினர். அவளும் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளைக் கொண்டு, சமையலில் தன் கைவண்ணத்தைக் காட்டியிருந்தாள். முள்ளங்கியும், தக்காளியும், சின்ன வெங்காயமுமாக துவரம் பருப்போடு மணக்கும் சாம்பார், கத்தரிப் பொரியல், வெண்டிக்காய் கூட்டு, கொஞ்சமாக பருப்பு சேர்த்து தாளித்த பசளிக்கீரை, வாழைப்பூ வடையோடு வீட்டிலேயே செய்த வல்லாரை அப்பளமுமாக தோட்டத் திலிருந்து வெட்டி வரப்பட்ட வாழையிலையில் பரிமாறிய அந்த மதிய போசனம் தேவாமிர்தமாக சுவைத்தது. உண்மையில் அனைவரும் ரசித்து ருசித்து சாப்பிட்டதோடல்லாமல், சுப்பம்மாவைப் பாராட்டவும் செய்தார்கள். அந்த சுவையின் ரகசியம் வீட்டுத்தோட்டத்தில் இயற்கை உரத்தின் உபயத்தோடு விளைந்த காய்கறிகளே என்ற உண்மையைப் போட்டுடைத்த சுப்பம்மா, மற்றவர்கள் தாமும் சின்ன அளவிலாவது தோட்டம் செய்ய வேண்டுமெனும் ஆர்வத்தையும் தூண்டினாள். தோட்ட வசதி இல்லாதவர்

# என்ன சொல்ல.. இனியவளே..

உன் காதுகளை அடைத்துக் கொண்டு
எத்தனை நேரம்தான் கேளாததுபோல் நடிப்பாய்?

உன் வாயைப் பொத்திக் கொண்டு
எத்தனை நேரம்தான் பேசாமல் இருப்பாய்?

உன் கண்களை மூடிக்கொண்டு
எத்தனை நேரம்தான் பார்க்காமல் தவிப்பாய்?

காதுகளைக் கொடுத்தவனை;
கேட்டுச் சுவைக்க வைத்தவனை; பழிப்பது நன்றா?

முகத்திலே வாயை வைத்தவனை;
பேசி மகிழச் செய்தவனை; வெறுப்பது நன்றா?

கண்களைப் படைத்தவனை;
கண்டுக் களித்திட அளித்தவனை; மறப்பது நன்றோ?

காந்தி தாத்தாவின் புதிய
பொம்மைகள் இன்று காலத்திற்கேற்ப
மாறியுள்ளதை கவனித்தாயா?

முதலாம் பொம்மை…
காதுகளை அடைத்துக் கொண்டு கண்களால் கண்டும்,
வாயினால் பேசிக் கொண்டும் இருக்கிறது.

இரண்டாம் பொம்மை….
வாயைப் பொத்திக் கொண்டு… கண்களால்
பேசிக் கொண்டும் காதுகளால் கேட்டுக்
கொண்டும் இருக்கிறது.

மூன்றாம் பொம்மையோ…
கண்களை மூடிக்கொண்டு வாயால்
பேசிக்கொண்டும், காதுகளால்
கேட்டுக் கொண்டும் இருக்கிறது.



இனியவளே……
இதை என்ன சொல்ல!

கருமலைப் பழம் நீ

களும் சிறு தொட்டிகளில் பயிர்களை வளர்க்கலாம்; சிரட்டையில் கூட புதினா, கொத்தமல்லி, கீரை வகைகளை வளர்க்கலாம். இவை மேலதிக வருமானத்தை ஈட்டித் தருவதோடு, சிறு அளவிலாவது பொருளாதாரச் சிக்கலை தீர்த்து வைக்கக் கைகொடுக்கும் என்று சுப்பம்மா சொன்ன உண்மை பலருக்கும் புரிய, அதற்கான விதையொன்று, அவர்களின் மனங்களில் முளை விடத் தயாரானது.

அன்றைய தினம் ஒருசிலர், அவளது தோட்டத்தைப் பார்வையிடவும் வந்திருந்தார்கள். பச்சைப் பசே லெனக் காற்றிலாடும் புதினாவும், கொத்த மல்லியும் அந்த இடத்தையே சுகந்தமாக மாற்றியிருந்தது. இடையிடை நடப்பட்டிருந்த ரோஜா, மல்லி, செம்பருத்திச் செடிகளிலுள்ள பூக்களால் ஈர்க்கப்பட்ட வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும், தேனீக்களும் மகரந்தச் சேர்க்கைக்கு உறுதுணையாக இருந்ததோடு, அவற்றின் அணிவகுப்பும், நடனங்களும் கண்ணுக்கு விருந்து படைத்துக் கொண்டிருந்தன.

வந்தவர்களுக்கு வாழை இலையில் சுற்றி வேக வைத்த மணக்கும் வாழைப்பழக் கொழுக்கட்டையும், இஞ்சித் தேநீரும் வழங்கினாள் சுப்பம்மா. அவர்கள் புறப்படுகையில், வாழை இலையில் சுற்றி சில காய்கறிகளையும் அத்தோடு சில மரக்கன்றுகளையும் கொடுத்தான் சிவா. வாங்கிக் கொண்டவர்கள் மனதிலும் முகத்திலும் பூரிப்பைக் காண முடிந்தது. வீடு தேடி வருபவர்களுக்கு நம் பாரம்பரிய விருந்தோம்பலும், வெறுங்கையுடன் அனுப்பாமல் பரிசில்களை மனமுவந்து கொடுப்பதும் பண்டைய காலந்தொட்டு நம் இரத்தத்தில் ஊறி, நம் கூடவே பயணிக்கும் பண்பாடல்லவா?

அன்றொரு நாள் கூட்டுறவுச் சங்கம்

சென்று திரும்பிக் கொண்டிருந்த சுப்பம்மா அரச மரத்தடி பஸ் நிறுத்தத்தில் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டாள். அருகில் சென்றவளுக்கு ஒரு 18 வயது மதிக்கத் தக்க இளம் பெண் மயங்கி விழுந்து கிடப்பது கண்ணில் பட, கூடவே சூழ இருந்தவர்கள் உதவி செய்ய முற்படாமல் தம் போன்களில் படமெடுப்பதும், வீடியோ எடுப்பதுமாக இருப்பதைக்கண்டு, கூட்டத்தை விலக்கிச் சென்று தன்னிட மிருந்த தண்ணீர் போத்தலைத் திறந்து தண்ணீரைத் தெளித்து எழுப்பி குடிக்கவும் கொடுத்தாள். எழும்பியவளை கைத்தாங்கலாகப் பிடித்து பாதையோர இருக்கையில் இருத்தினாள்.படமெடுத்துக் கொண்டிருந்த சில இளைஞர்கள் இவளது செய்கை தந்த உறுத்தலில் கொஞ்சம் அவமானப்பட்டு பின்வாங்கிய தென்னவோ உண்மைதான். அந்தப் பெண் பிள்ளையிடம் பேச்சுக் கொடுத்ததில், சித்தியின் கொடுமை தாங்காமல் தொலை விலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து ஓடி வந்திருக்கிறாள் எனத் தெரிந்து கொண்டாள். போதைப் பொருட்களுக்கு அடிமையாய் பலர் செய்யும் தவறான செயல்கள், தலைப்பு செய்திகளை அலங் கரித்துக் கொண்டிருக்கும் இன்றைய காலகட் டத்தில், இந்தப் பெண்ணை இப்படியே விட்டுச் செல்ல மனம் ஒப்பவில்லை, அவளையும் கூடவே அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தவள், முதல் வேலையாக அவளை குளிக்க வைத்து, அரக்கப் பரக்க சமைத்து சாப்பிடவும் வைத்தாள். தனக்கு பெண்குழந்தை இல்லாததால் அவள் மீது பாசம் ஊற்றெடுக்க, பரிவுடன் கவனித்துக் கொண்டாள்.

வந்த சிலநாட்களிலேயே பாரதியெனும் அவளும் இவர்கள் குடும்பத்தில் ஒருத்தி யாக மாறிப்போனாள்.ஆனால் என்ன காரணமோ சிவாவுடன் மட்டும் பேசவே சங்கோஜப்பட்டு மௌனமாகவே இருந் தாள் அதை சிவாவும் கண்டுகொள்ள வில்லை. காலமரம் பன்னிரண்டு மாதங் களை உதிர்த்துவிட்டு இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தது.

அன்றொரு நாள் சிவா தோட்டத்தில் தடுக்கி, மண்வெட்டி மேல் விழுந்ததில் கையில் பலத்த காயம் ஏற்பட்டு ரொம்பக் கஷ்டப் பட்டதும், அன்று முதல் பாரதி அவனின் பொறுப்புகளைத் தன் தோள்மேல் சுமந்து கொண்டதும் இறைசித்தம் என்பதா அனிச்சையான செயல் என்பதா சொல்லத் தெரியவில்லை. பாரதி தோட்டத்தின் அத்தனை பயிர்களை யும் கண்ணுங் கருத்துமாய் பார்த்துக் கொண்டாள்... சிவாவையும் தான்.

அவளின் பணிவிடைகளும் சிவாவின் மனதை இளக்கி, கொஞ்சம் கொஞ்சமாகக் காதலை விதைத்துக் கொண்டிருந்தன. அவளுக்குள்ளும் மனதில் பட்டாம்பூச்சிகள் பறக்க ஆரம்பித்தாலும், பாரதி மனதை ஒருநிலைப் படுத்திக் கட்டுப்பாட்டுடன் பணிகளைத் தொடர்ந்தாள்.

தாயறியாத சூல் உண்டா என்ன? சுப்பம்மா தன் மகனின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டாள். ஆனால் பாரதியின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமல் மேற் கொண்டு எதுவும் தீர்மானிக்க முடியாதே! ஆயினும், பருவக்கோளாறுகளால் வரும் விபரீதங்களை நன்கு உணர்ந்தவள் என்பதால் ராமுவிடமும் இதைப் பற்றி கலந்தாலோ சித்தவள், ஒருநாள் மெதுவாக பாரதியிடம் சிவாவை அவளுக்கு மணமுடிக்க தனக்கும் ராமுவுக்கும் ஒரு எண்ணம் இருப்ப தாகவும், இதில் அவள் விருப்பமே முக்கியம் எனவும் குறிப்பிட்டவளுக்கு பாரதியின் கால் பெருவிரல் கோலம் 'சம்மதம்' சொன்னது. ஊரில் உள்ள பாரதியின் அப்பாவை வரவழைத்து, அவரிடமும் சம்மதம் பெற்றுக் கொண்டதில் ஏக

சந்தோஷம் அவர்களுக்கு. பாரதியின் அப்பாவின் மனதில் தன் மகள் வந்து சேர்ந்துள்ள இடம், அன்பு மழை பொழியும் ஒரு கருணை இல்லம் என்பதில் ஆறுதலும் மகிழ்ச்சியும் நிலவ, அடுத்த மாதமே ஒரு சுப முகூர்த்த வேளையில் மிக எளிமையாக திருமணம் நடந்தேறியது. இந்த மங்கல நிகழ்வு மனதுக்கு நிறைவாக இருந்தது.அன்றைய தினம் பாரதியின் அப்பாவுடைய கூப்பிய கைகளும், கண்களில் வழிந்த கண்ணீரும் நன்றியை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தன.

பாரதியினதும் சிவாவினதும் புதிய வாழ்க்கை, அவர்களை மேலும் வலுப் படுத்த, இன்னும் உற்சாகமாக தோட்ட வேலைகளைக் கவனித்தார்கள். தம்பதி சமேதரரின் கடும் முயற்சியில் தோட்டத்து விளைச்சல் அமோகமாக இருந்தது. நகரசபையின் அனுமதியுடன் வீட்டோடு பாதையோரமாக ஒரு கொட்டிலை



அமைத்து, காய்கறி விற்பனை யையும் ஆரம்பித்தார்கள். நியாய விலையில், சரியான நிறுவையில் புத்தம் புது காய்கறிகளை வாங்குவதென்ன மக்க ளுக்குக் கசக்குமா என்ன? அதுவும் கலப்பட மில்லாத பசுமையான இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட மரக்கறிகள் கொள்வனவு செய்பவர்களின் மனதைக் கவர, வியாபாரமும் பல்கிப் பெருகியது.

தம் கடைக்கு வருபவர்களுக்கு மரக்கன்றுகளையும் ஆலோசனைகளையும் சிவா இலவசமாகவே வழங்கினான். ஒரு மரத்தை வெட்டுவதானால் குறைந்தது பத்து மரங்களாவது நடப்பட வேண்டுமென்று வாடிக்கையாளர்களிடம் குறிப்பிட்ட சிவா, மர வளர்ப்பையும் ஊக்குவித்தான்.

ஒருநாள் சில மங்குஸ்தான், ரம்புட் டான் கன்றுகளை வேலியோரமாக சிவா நட்டுக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த பக்கத்து வீட்டு சிறுமியோ விழுந்து விழுந்து சிரித்தாள்.காரணம் கேட்டபோது 'இப்போது நடும் மரங்கள் காய்க்க இன்னும் பல வருடங்கள் செல்லுமே! அதை நீங்கள் அனுபவிக்கவே முடியாமல் போகுமே! அப்புறம் ஏன் இந்த வீண் முயற்சி?' என்று கேட்டு மீண்டும் சிரிக்கத் தொடங்கினாள். அதற்கு சிவா கோபப்படாமல் பொறுமையாகவே பதில் சொன்னான்.' நாம் இப்போது பயன் பெறும் அனைத்து மரங்களும் எமக்குத் தெரியாத யாரோ ஒரு மூதாதையர் போட்ட விதையோ, நட்ட கன்றுகளோ தானேம்மா? உன்னைப் போல் அவங் களும் நினைத்திருந்தா நம்மளால இப்ப ஒரு பழமும் சாப்பிட முடியாமல் போயிருக்குமே! அவங்களுக்குப் புண்ணியம் கிடைக்க, அவங்கல்லாம் பொதுநலமா சிந்திச்சி மரங்கள் நட்டு வச்சிருப்பதால, இப்போ அதன் முழுப்

பயனையும் நாம அனுபவிக்கிறோம் இல்லையா?‘ அவன் கேட்டது சிறுமியை சிந்திக்க வைத்தது. அவள் சொன்னாள் ‘அண்ணா, நானும் இனி நிறைய மரங்கள் நடப்போகிறேன். என் நண்பர்களுக்கும் இது பற்றி சொல்லி, அவங்களையும் இந்த நல்ல விடயத்தை முயற்சிக்க சொல்வேன்‘ என.

திருமணத்துக்குப் பிறகு பாரதி-சிவா தம்பதியின் வியாபாரம் பெருகப் பெருக, பக்கத்துக் காணியையும் வாங்கி, அங்கும் கரும்பு, சர்க்கரை வள்ளி, மரவள்ளி, மூலிகைகள் என ஏராளமாகப் பயிரிட்டார்கள். இப்போதெல்லாம் சமயலறைக் கழிவுகளை யாரும் தூக்கி எறிவதில்லை. அவரவர் வீடுகளில் பசளையாக்கி, தமது வீட்டுத் தோட்டத்துக்கே பயன்படுத்துகிறார்கள்.

விளையும் காய்கறிகளைத் தமது தேவை போக, மிகுதியை உறவினர், நண்பர்களுக்கு கொடுத்து மனிதநேயத்தையும் வளர்த்துக் கொள்கிறார்கள். பண்டைக்கால பண்டமாற்று முறையும் புதுப்பிக்கப்பட்டு அவரவர் அறுவடை செய்தவற்றை பரிமாறிக் கொள்வதில் பரஸ்பரம் புரிந்துணர்வும், நேசமும், சமூக ஒற்றுமையும் ஏற்படுவதையும் மகிழ்ச்சி தரும் மாபெரும் சமூக மாற்றமாகக் கொண்டாடுகிறார்கள் ஊர்மக்கள். மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட, இயற்கையும் மக்களோடு சேர்ந்து சிரித்துக் கொண்டாட, குயில்களின் கீதமும், மரங்களில் பூத்துக் குலுங்கும் மலர்க் கொத்துக்களும், ஊரெங்கும் பசுமையைப் போர்த்து வசந்தகாலம் பிறந்து விட்டதைக் கட்டியங் கூற அந்த நகரமே பூங்காவாக மாறிக் கொண்டிருந்தது.

(முற்றும்)



# துவண்டு விடாதே மனிதா

தடம்மாறும் போதெல்லாம் தடுமாறும் மனிதா,
தோல்விகள் உந்தன் தோள்களை பலமாக்கும்,
பலவீனம் உனக்கே பாதைகளை கொடுக்கும்,
எப்போதும் மனிதா துவண்டு விடாதே.

ஏமாற்றம் எண்ணியே ஏமார்ந்த மனிதனே,
எல்லை யில்லாத கற்பனைச் சிறகினிலே,
சீறும் அலைகளிலும் உயரும் மலைகளிலே,
ஊக்கமாய் ஏறிடவே உன்னாலும் முடியுமே.

வஞ்சனை செய்யும் வஞ்சகர் உள்ளமே,
விம்மி அழுதிடவே விடியலும் வந்திடுமே,
நம்பிக்கை நாயகனும் நட்டாற்றில் விட்டிடவே,
நாள்தோறும் போராடு இருகரம் இருக்கையிலே.

சிந்தித்து செயலாற்று சிறப்பான வாழ்க்கையிலே,
சந்திக்க கூடாதொரு சங்கடத்தை சந்தித்தாலே,
உள்ளத்தில் நம்பிக்கை எப்போதும் இருந்திடவே,
ஒருகணமும் மனிதா துவண்டு விடாதே.

கொடிய நோய்களும் கொள்ளை கொண்டிடவே,
அழிவை எண்ணியே அனைத்தும் சென்றிடவே,
தீய எண்ணங்கள் தீயினில் எரிந்திடவே,
உழைத்து வாழ்ந்திடுக வாழ்வில் உயர்ந்திடவே.

காரணம் கூறியே கைநழுவிச் சென்றவரே,
என்றோ ஒருநாள் கைக்கூட வருவாரே,
அன்றோ அனைத்தும் மறந்து சென்றிடுக,
என்றும் மனிதா துவண்டு விடாதே.

கவிஞர்.செல்வ.சேதுராமன்.
திருப்புறம்பயம் .கும்பகோணம்

# 人生が輝く引き寄せパワー

奥平亜美衣

ஆமி ஒகுடைரா

## வாழ்க்கையைப் பிரகாசிக்கவும் ஈர்க்கவும் செய்யும் உங்கள் சக்தி

# எங்கே கடவுள்...??

கி. இரகுநாதன்

புன்னகை ஆடை உடுத்து..
புன்சிரிப்பால் முகத்தைப் பொலிவாக்கு.

உன்னைப் போல் மற்றவரை
உயர்வாக நினை.

ஊர் போற்ற வாழத் தேவையில்லை..
உனக்கே உண்மையாக இரு..

மகாத்மாவாக மாற வேண்டாம்
மனிதனாக இரு.. அதுவே போதும்.

மற்றவரின் சாதனையை
மனந்திறந்து பாராட்டு....!!

நன்மை செய்யாவிடினும்
தீமை எண்ணாதே...!!

நன்மை என்றென்றும் நல்லது..
தீமை என்றென்றும் தீயது...!!
நினைவில் கொள்ளல் யாவர்க்கும்
நல்லது...!!

பிறன் மனை நோக்கா
பேராண்மை கொள்..!

பிறர் துன்பம் கண்டு
துயருறும் உள்ளம்...
துரோகம் நினைக்காத மனம்...
துவள்கிற நேரத்தில்
சாய்ந்து கொள்ள உன் தோள்..

கண்ணீரைத் துடைக்கும் கரங்கள்..
பிறர் வலி கண்டு கலங்கும் கண்கள்..

குறைகளைக் கேட்கும் செவி...
மனம் நோகா வார்த்தைகளை
உதிர்க்கும் வாய்..

அனைத்தும் உனதாக்கு...!!!

அன்பே சிவம்..
அறிவே ஆயுதம்..
அறிவாயா..??

அன்பெனும் மதத்தில்
ஆயுதம் இல்லை
ஆயுதம் தாங்கினால்
அது மதமே இல்லை.

அழுக்காறு என்றும்
அமைதியைத் தராது..
ஆணவம் உன்னையே
அழித்து விடும்..
அகந்தை உன்னையே
அழ வைத்திடும்..
உணர்வாயா..??

ஏமாற்றுதல் என்றும்
ஏற்றம் தராது..
ஏற்பாயா..??

காதறுந்த ஊசி மட்டும் அல்ல
காமமும் குரோதமும் கூட
வாராது காண் கடைவழிக்கே..
கண்டு கொண்டாயா ..??

நட்டகல் பேசாது
நாதன் உன்னுள்ளிருக்கிறான்..
உணர்வாயா..??

இவ்வளவும் நீ செய்தும்
இன்னுமா நீ
கடவுளைக் காணவில்லை...??

தூணிலும்
துரும்பிலும்
கடவுளைத் தேடாதே..!

நிலைக்கண்ணாடியைப் பார்.
நீயே கடவுள்....!!!



**லிமர்புன் 1**

சுருக்கமாக, மழை, பனிப்பாறைகள் உருகுதல் போன்ற இயற்கை காரணங்களை நம்மால் தடுக்க முடியாது. இருப்பினும், அணைகள் உடைப்பு, மோசமான வடிகால் அமைப்பு, எச்சரிக்கை அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பல போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட காரணங்களை நாம் நிறுத்த முடியும். வருடத்தில் அதிக மழை பெய்தாலும் ஒருபோதும் வெள்ளத்தை சந்திக்காத சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து நாம் உத்வேகம் பெற வேண்டும்.

**மனிதப் பேராசைப் பிழை**
**இன்னதென்று அறியாமல் பாவிகளால்**
**சபிக்கப் படும் மழை**

.........................................................................

**லிமர்புன் 2**

கடந்த ஜூலை 14 ஆம் தேதி, உத்தரகாண்டில் உள்ள டேராடூனில் தங்கள் வீட்டில் பிரார்த்தனையில் ஈடு பட்டிருந்த கிறிஸ்தவர்கள் மீது இந்து மதவெறி தலைக்கேறிய ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் திட்டமிட்டு தாக்குதலை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் 7 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

தன்னுடைய வீட்டில் தனது குடும்பத் தினர்கள், உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் வாராந்திர பிரார்த்தனைக் கூட்டத்திற்கு தயாராகிக்கொண்டிருந்தார் தீக்ஷா பால். அப்போது அங்கு வந்த காவிக் குண்டர்கள் அவருடைய வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தது, அங்கு இருந்தவர்களை தாக்கியது. தீக்ஷா பால் மத மாற்றம் செய்யும் வேலையை செய்வதாக அக்குண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். எதுவாக இருந்தாலும் நாம் உட்கார்ந்து விவாதிக்கலாம் என்று அவர்களிடம் கூறியுள்ளார்கள் அங்கு இருந்தவர்கள். ஆனால் காவிக் கும்பலோ யார் பேச்சையும் கேட்காமல் அங்கு இருந்தவர்களை அருவருக்கத்தக்க வகையில் இழிவான சொற்களால் வசைபாடியுள்ளது.

**கதறித் துடிக்கும் சிறுபான்மை**
**நாளை எல்லோருக்கும் இதுவே என்றாலும்**
**வேடிக்கை பார்க்கும் பெரும்பான்மை**

.........................................................................

**தன்முனைக் கவிதைகள்**

•

மனதின் இருளில்
ஒரு பயணம்
மங்கிய பாதைகளில்
நினைவுகளின் எதிரொலி மட்டுமே

•

துண்டுகளாக சிதறி
தேய்ந்து கிடந்தேன்
அவற்றை சேகரிக்கும்போது
இன்னும் பலமான நான்

•

என்னை அறிவதில்
நான் ஜெயித்ததில்லை
ஆனாலும் நானென்னை
நம்ப கற்றுக் கொள்கிறேன்

•

எவ்வளவு சுதந்திரமாக
இருக்கிறேனோ நான்
அவ்வளவு அதிகமாக
சமரசம் செய்கிறேன்

•

வாழ்க்கையின் சிக்கல்களால்
என்னை அறிய முயல்கிறேன்
என் சொந்த ஆன்மாவின்
தீவிர ஆழத்தில்

**ராஜ் ஆரோக்கியசாமி**



# வறுமை...

# (இல்லாமை)




இல்லாமை என்ற வறுமை எப்போது முடியும். காலம் தொட்டு கனவாகவே இருக்கும் வறுமைக்கு முடிவுதான் எப்போது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கல்வி, என்ற ஐந்தை வறுமையின் இலக்கணம் வகுத்துள்ளனர். வறுமையை சரி செய்ய இதை இரு பெரும் கூறுகளாக்கி, முற்றிலும் வறுமை மற்றும் உறவினர் வறுமைஎனக்கோடிட்டுக்காட்டுகின்றனர். எதற்குமே வழியில்லாதவரை முற்றிலும் வறுமை என்றும், சிறிது மேம்பட்டு ஆனால் தேவையான அளவு அத்தியாவசியத்தை அடைய முடியாதவர்களை உறவினர் வறுமை (ஒப்பீடு வறுமை) என்றுரைத்தாலும், வறுமையின் விவரம் பற்றிய முழுமையான விவரங்களை உண்மையான புள்ளி விவரங்களை எந்தவொரு அமைப்பும் அரசுகளும் சொல்வது கிடையாது. தெரியவில்லையா என்பதை விட, தெரிந்தது என்று வெளியில் தெரிந்தால் அளவுக்கும் அதிகமான ஒதுக்கீடு இதற்காகவே போய்விடும் என்பதாலே சொல்லவில்லையா? சராசரியான விவரங்களை மட்டும் சொல்லிவிட்டு, வறுமையை ஒழிப்போம் என்று குரல் கொடுப்பதே வாடிக்கையானதாக இருக்கிறது.

ஒருவனுக்கு நோய் வருகிறது என்றால் எதனால் வருகிறது? இது எத்தகைய நோய். சரி செய்ய என்ன செய்வது என்றெல்லாம் சரியான விவரங்களைக் கண்டறியும் நம்மால் வறுமையும் நோய் தான் என்று அறிந்து விவரங்களை கண்டுபிடிக்காமல் இருப்பது வேதனை தான். வறுமைக் கோடு என்ற ஒன்று நாட்டுக்கு நாடு வேறுபட்டே இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன தான் தீர்வு? முறையான திட்டமிடல் இல்லையா இல்லை முற்றிலும் ஒழிக்க வழி இல்லையா? மதிப்பான கேள்விக்கு விடை தெரியவில்லை. வறுமையின் நிலையறிந்ததால் தான் வாக்குரிமை ஏலத்தில் வருகிறது. கொடுப்பவன் கோடிகளிலும் விற்பவன் தெருக்கோடியிலுமாக வாழ்ந்து வருகிறார்கள்.

வறுமையை ஒழிக்க வேண்டுமானால் அதற்கு ஒரு புரிதல் வேண்டும். அந்த புரிதலில் சொல்லும் காரணங்கள் தொழில் துறையில் முறையான வளர்ச்சி இல்லை, சமத்துவமின்மை, அதிகப் படியான மக்கள் தொகை, இயற்கை வளங்களை சரியாக பயன்படுத்தாமல் இருப்பது, கால நிலை மாற்றம், உள்கட்டமைப்பு வசதியில் குறைபாடு என பட்டியலிட்டாலும் பசி என்ற வலியை மறந்ததாகவே தெரிய வந்துள்ளது. ‘‘சோற்றுக்கே வழியில்லாதவனிடம் எந்த அறிவுரையும் எடுபடாது’’. இந்த புரிதல் வேண்டும். சோற்றுக்கே வழியின்றி ஒருவனும், மிதமிஞ்சிய வசதியால் உணவைக் குப்பையில் கொட்டுபவனும் கலந்தே இருக்கும் நாடு. அடிப்படைத் தேவையான

சோறு கிடைக்காத போது, அவன் துணிந்து விட்டால்.? யோசிக்க வேண்டாமா? பல இடங்களில் போராளிகள் உதயமாகக் காரணமே அடிப்படைத் தேவை இல்லாது இருப்பதும்... அது ஒரு சில இடங்களில் கொட்டிக் கிடப்பதும் தான்.

வறுமையை அழிக்கா விட்டால் வறுமை உங்களை அழித்துவிடும் என்பதை உணர்வது நல்லது. அரசும் பல வகையில் அடித்தட்டு மக்களுக்காக எத்தனையோ திட்டங்களைப் போட்டாலும், இலவச அரிசி கோதுமை தந்தாலும் ஒருவித செயல்பாடுகள் பயனாளிகள் மத்தியில் இருப்பது பயம்கொள்ள வைக்கிறது. ஒரு வேளையாவது உண்ணட்டும் என்று உணவுப் பொருள் வழங்கினால் அதையும் விற்றுவிட்டு அடுத்த வேளை சோற்றுக்கு பயப்படும் அளவு வறுமை குடி கொண்டுள்ளது. புரையோடிப்போன நோயாக வறுமை. திட்டங்கள் பல இங்கே இருக்கிறது. அத்திட்டத்தினை முழுமை யாக்க விடாமல் பயனாளிகளுக்கு பயன் கிடைக்க விடாமல் சிலர் பலவழிகளில் முட்டுக்கட்டை போடுவதும் இங்கு தான். ஒரு வேளை ஏழைகள் ஏழைகளாகவே இருந்தால் தான் தமக்கு நல்லது என்ற எதிர்பார்ப்பா? புரியவில்லை.

அது சரி இப்படியே போனால் எது தான் முடிவு? நேர்மறையான கேள்விதான். திட்ட ஒதுக்கீடு யாருக்காக ஒதுக்கப்பட்டதோ அவர்களுக்கே முழு பயனும் கிடைக்கும் வகையில் கண் காணிப்பு இல்லையா? திட்டங்கள் அரசியல் களத்தோடு ஒப்பிடப் படுகிறதா? அடிமட்டமாய் இருப்பவனுக்கு அரை வயிறு சோறு கிடைத்தால் தானே உழைப்பைப் பற்றி அவனிடம் பேச முடியும். பசிமயக்கத்தில் இருப்பவனுக்கு பாடங்கள் தேவையில்லை. அரசுதான் அதனைச்செய்ய வேண்டுமென்றால் அதுவும் முடியாது. காரணம் நிலை குலைந்து வறுமையில் இருப்பவர்கள் மிக அதிகம். தொண்டு நிறுவனங்கள் ஆன்மிக சேவை மையங்கள் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சோற்றின் அருமையை பசியுள்ளவன் தான் அறிவான். அப்படிப்பட்டவர்களின் ஆலோசனைகள் கூட நல்லதாக இருக்கும். கேட்டுக் கொள்ளலாம் தவறில்லை. அனைத்தையும் இலவசமாகவே கொடுத்துக் கொண்டே இருக்காது உழைக்கும் வழியை கொடுத்த லோடு சேர்த்து கொடுக்க வேண்டும். இல்லையேல் உழைப்பும் மறந்து விடும்.

கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை, என்பதை நாம் பார்த்தும் படித்தும் இருக்கின்றோம். பசியின் கொடுமை மனிதன் மனதை பல வகைகளில் பாதிப்பதை உணர வேண்டும். ‘‘மனம் பாதிக்கும்போது மன அழுத்தத்தை உருவாக்குவதாக அறிகின்றோம்’’. மன அழுத்தம் கோபமாக மாறும் போது, இணக்கத்தை எப்படி எதிர்பார்க்கமுடியும். ஏழையின் கோபம் எந்த எல்லைக்கும் போகும் என்பது உணர வேண்டிய ஒன்று. சோறில்லை என்றால் வாழ்வில்லை என்றே பொருள். வாழ்வா சாவா போராட்டத்தில் வரம்புகள் இருப்பதில்லை.

இன்று எங்கும் குறிப்பாக, உழைக்கும் களத்தில் வெளிமாநிலத்தவரின் படை யெடுப்பு அதிகமாகி விட்டதைக் கண்டு அச்சப்படும் நாம் இரண்டு விசயங்களை யோசிக்க மறுக்கின்றோம். ஒன்று அவன் கூலி குறைவாகப் பெறுகின்றான். வேலை நிறையச் செய்கின்றான் என்ற ஒன்றை மட்டும் பேசி வருகின்றோம். இதை அவனின் வறுமையின் கொடுமை என்ற கண்ணோட்டத்திலும் பார்க்க வேண்டும்.

வாழ்வதற்கான சோற்றை பெற்றிட எது கிடைத்தாலும் சரியென்று வந்து விட்டான். அவனுக்கு இந்த வேலைக்கு இந்த கூலி கணக்கெல்லாம் கிடையாது. சோறு கண்ட இடம் சொர்க்கம் என்ற நிலைப்பாட்டுக்கு அவனை தள்ளியது வறுமை தான்.

அறுசுவை உணவுக்காக மாறவில்லை. அன்றாட சோற்றுக்காக என்பதே வறுமை தந்த பாடம். அவனது இந்த பாடத்தால் உள்ளூர் மக்கள் புறக்கணிக்கப்பட்டு இவர்களையும் வறுமைக்குள் உள்ளாக்கு வதால் யாருக்கும் ஒரு பயனும் இல்லை.

சில இடங்களில் வறுமையால் இடம் விட்டு இடம் சென்று நாடு விட்டு நாடு சென்று அடிமை போல் வேலை பார்க்கின்ற நிலை. இதனால் வேறொரு கொடுமையும் உண்டு. வீடு வாசல் உற்றம் சுற்றம் என அனைத்தையும் விட்டுச் செல்லும் போது மனதில் உண்டாகும் வலி வறுமையை விடக் கொடியது என்பதை உணர வேண்டும்.

இதையெல்லாம் எப்படிப் பார்ப்பது? மொத்தமாக எதையும் வாங்க முடியாத வர்களுக்கு சில்லறையாக பகிர்ந்தளிக்க முடிவெடுப்பதும், சகிப்புத் தன்மையை யும், மனிதாபிமானத்தையும் மக்களிடம் உருவாக்கினால் வறுமையை ஒழிக்க முடியாவிட்டாலும் அதன் கடுமையைக் குறைக்க முடியும்.

வறுமை என்பது இல்லாமை என்ப தாக வைத்துக் கொண்டால் சில வழிகளில் வறுமையின் கொடுமையைக் குறைக்க லாம். முதல் வழி சிக்கனம், போதுமென்ற மனம், தேவையில்லாத பொருட்களை வாங்காதிருப்பது, இவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னொன்று உறவு சார்ந்த இனம் சார்ந்த உணர்வு. இதை மேல் எழுந்தது போல் பார்த்தால் தவறாகத் தெரிந்தாலும் உள்நோக்கம் சரியானதாகவே தெரிகிறது. தன்னைச் சார்ந்தவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்தி தொழில் கற்றுக் கொடுத்து தொழில் துவங்க வைத்து அவர்களை ஊக்கப்படுத்தி மேலெழுப்பும் முயற்சி. தனக்குத் தேவையானதை உருவாக்க பயிற்சி கொடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்ளும்போது வறுமை கொஞ்சம் குறையலாம். முக்கியமாக வாழ்வின் ஆதாரத்துக்கான வழி வகை களை வளர்த்துக் கொண்டால் வறுமையை விரட்டிடலாம்.

தேவைக்கு மீறி எதையும் வைத்துக் கொள்ளக்கூடாது. வறுமை தேவைக்கு அதிகமானதை மட்டுமில்லாது தேவை யையும் சேர்த்து பிடுங்கி விடும். அமைதியாய் இருக்கும் போது தான் அறம் கண்களுக்கும் புத்திக்கும் தெரியும். அமைதி நழுவிட்டால் அங்கே வேறுமாதிரி யான புயல் உருவாகி விடும். புயலுக்கு எதை வைக்க வேண்டும் எதை பிடுங்க வேண்டும் என்றெல்லாம் தெரியாது. புரிதல் வேண்டும்.

மனிதநேயப் பார்வையும், மற்றவன் கவலையில் பங்கெடுத்தலும், இருப்பதை பகிர்ந்து கொள்வதும் அவசியம் ஆகிறது. சமநோக்குப் பார்வை யாரையும் மதிப்போடு பார்த்தல் முறையான கல்வி இவைகளே வறுமையை விரட்டும் என்பதை உணர்ந்து ஒருவர் ஒரு நபரையாவது மேலேற்றினால் அனைவரும் மேம்பட்ட வாழ்வை அடைய முடியும்.

**பரணி சுப சேகர்**

மதுரை தமிழ்நாடு.

## மனிதனைத் தேடுகிறேன்

மனிதனைத் தேடுகிறேன் கண்டால் சொல்லுங்கள்
கோவிலில் சென்று தெய்வத்திடம் கேட்டேன்
வருத்தத்துடன் என்னிடம் தெய்வம் சொன்னது
நானும் முயற்சிக்கிறேன் அவனைக் காண
பக்தியின் பெயரால் பகல் வேடதாரிகளும்
முயற்சிக்காமல் வெற்றிக்கு வரம் கேட்பவனையும்
கூட்டம் கூட்டமாய் தினசரி பார்ப்பதால்
எனக்கும் சொல்வாயோ மனிதனைக் கண்டால்
ஏக்கத்துடன் கேட்டான் இறைவனும் என்னிடம்
தெரிந்தால் தெரிவிக்கவும் மனிதக் கூட்டமே

## குடித்தனம்

குடித்தனம் நடத்த திருமணம் செய்தனர்
குடியுடன் வாழ்வை நடத்துகிறார் தினமும்
அடிக்கிற கைதான் அணைக்கும் என்றார்
நம்பிக்கையுடன் வாழ்கிறேன் விடியல் வருமென்று
போதையுடன் வரும் கணவனை பார்த்தும்

## அழியா நினைவுகள்

டயர் வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்றது
கடன் வாங்கி ஐஸ் சாப்பிட்டது
வாங்கிய கடனுக்கு அடி கிடைத்தது
அம்மாவின் சேலையில் அழுக்கை துடைத்தது
அப்பாவின் சைக்கிளில் மணி அடித்தது
பள்ளி தலைவனாய் நெஞ்சை நிமிர்த்தியது
கல்லூரி வாழ்க்கையில் மகிழ்ச்சி அடைந்தது
முதல் சம்பளம் அப்பாவிடம் கொடுத்தது
இல்லற வாழ்வில் முதலில் நுழைந்தது
மறக்க முடியுமா அழியா நினைவுகளை

கவித்தென்றல்

பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து

## கோயிலுக்குப் போறேன் மச்சான் கும்பிட நீ வாரியா

ஆடிமாசம் பொறந்திடுச்சு
அம்மன்கோயிலும் அலங்காரமாச்சி

ஊருசனம்  கூடிடுச்சி
உருகியே வணங்கிடுச்சு

வேப்பிலை உடையணிஞ்சு
வேண்டுதல நிறைவேத்துறாங்க

கேட்டதெல்லாம் தந்துடுவா
வேப்பிலைக்காரி நிச்சயமா

செவப்பு பொட்டுவச்சி
பச்சச்சேல உடுத்திடுவாங்க

கூழுகாய்ச்சிதான் மனசார
ஊத்திடுவாங்க நமக்குதான்

மனசும் நெறஞ்சிடும்
வயிரும் குளிர்ந்திடும்

வேண்டிய வரமும்
சீக்கிரமாக கெடச்சிடும்

தாழம்பூ கொண்டையில
மல்லிகைப்பூ வச்சிருக்கேன்

கோயிலுக்கு போறேன் மச்சான்
கும்பிட நீ வாரியா

மாமா ஒன்னோட
வரவத்தான் எதிர்பாத்திருக்கேன்

வெரசா வந்திடு
சேர்ந்துதான் போகலாம்

வேறெந்த எண்ணமுமில்லை
மனசெல்லாம் நீதானே

கைகோர்த்து நடந்திடுவோம்
மகமாயியை வணங்கிடத்தான்

ஆவணியில கண்ணாலம்
நடந்திடும் நமக்குள்ளே

மாலையத்தான் மாத்திக்குவோம்
சந்தோசமா வாழ்ந்திடுவோம்

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்

# நிழல் தரிசனம்

## ஜார்ஜ் சந்திரன்

அலுவலகத்திலிருந்து கிளம்பும் வரை வேலையிலேயே மூழ்கிப் போனதால் விமலா சொன்னது முழுவதுமாக மறந்து போயிருந்தது. ரயிலில் ஏறிய போதுதான் திரும்பவும் நினைவிற்கு வந்தது.

«எவ்வளவு நாசூக்காக சொன்னாள். இவள் எத்தனை நாள் நினைத்துப் பார்த்து எப்படிச்சொல்ல வேண்டும் என்று ஒத்திகை பார்த்திருப்பாள். இருந்தாலும் விமலா எப்படி இந்த வியூகத்தில் என்னையும் கணக்கிட்டாள்» மனம் திரும்ப திரும்ப அவள் சொன்னதையே சுற்றி வந்தது.

«நோ... இதை நான் மறந்தே ஆக வேண்டும். நான் ஏன் இதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டு அதையே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்» என்றவாறு கையிலிருந்த வாரப் பத்திரிகையை விரித்து பட்டுக்கோட்டை பிரபாகரின் தொடர் கதையை வாசிக்க முனைந்தேன். முடிய வில்லை.

விமலா கேட்ட கேள்வியே என்னை சுற்றி சுற்றி வந்து வளைத்து போட்டது. நான் திருமணமானவன் என்றுதான் அவளுக்குத் தெரியுமே. ஏன் எனக்கு ஒரு பெண் குழந்தை கூட இருப்பது அவளுக்குத் தெரிந்த விஷயம்தானே. என் மகளுக்கு பெயர் சூட்டு விழாவிற்கு ஆபீசில் எல்லோருக்கும் மிட்டாய் கொடுத்த போது, அவளும்தான் கேட்டாளே, «என்ன விசேஷம்?' என்று.

பெண் என்பதால் நான் எப்போதோ கமென்ட் அடித்ததை மனதில் வைத்துக் கொண்டு இப்படி பேசினாளோ? நான் அப்போதே மனந்திறந்து மறுத்து பேசி யிருக்க வேண்டுமே? நான் ஏன் மறுத்து சொல்லவில்லை!

ஒரு வேளை எனக்கு அவள் மீது.... சே! மனசு ஏன் இப்படி அலைகிறது. நான் கண்டிப்பாக விமலாவிடம் மறுத்து சொல்லி அவளுக்கு அட்வைஸ் பண்ணி அனுப்பியிருக்க வேண்டும். நான் செய்ததுதான் பெரிய தவறு. கையி லிருந்த புத்தகத்தை மடித்து விட்டு அந்தச் சம்பவத்தை திரும்ப ஒரு முறை என் ஞாபகத் திரையில் திரையிட்டு அசை போட்டேன்.

«என்ன ராஜன் உங்கள் டிபார்ட்மென் டிலே ஒருத்தரையும் காணோம். தனியாகவா இருக்கிறீர்கள்?»

«யாரு விமலாவா? வாங்க. இன்றைக்கு



எங்க டிபார்ட்மென்டிலே எல்லோரும் சினிமாவிற்கு போயிருக்கிறார்கள். நமக்குதான் சினிமா அதிகமாக இன்ட்ரஸ்ட் கிடையாதே»

«நான் உங்களிடம் கொஞ்ச நாளா ஒண்ணு கேட்கணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வாய்ப்பேயில்லை. இப்போகேட்கலாம் என்று நினைக்கிறேன்»

«ஓ! தாராளமா! வாங்க உட்காருங்க»

«ராஜன் நீங்க தப்பா நினைக்க மாட்டீர்களே! உங்கள் சொந்த விஷயத்தில் தலையிட்டாலும்...»

«என்ன சொல்ல போறீங்க சொல்லுங்க»

«ம்.... ம்... ஏன்.... ராஜன் துக்கமாகவே இருக்கிறீர்கள்... உங்கள் முகம் கொஞ்ச நாளாக சோகமாகவே தென்படுகிறது»

«கொஞ்சம் பணப் பிரச்சினை... அவ்வளவுதான்».

«இல்லை. உங்கள் சொந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் என்னிடம் சொல்ல மறுக்கிறீர்கள்».

«அப்படியெல்லாம் ஒன்றுமில்லை»

«உங்கள் திருமண வாழ்வில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறிர்களா?» அவள் என்னை பார்த்துக் கேட்டு விட்டு தலையை குனிந்து கொண்டாள். எனக்கு இதயத்தில் யாரோ ஆணியால் அறைந்தது போல் இருந்தது.

எவ்வளவு மகிழ்ச்சியான வாழ்க்கை! என்னை போல் யாருக்காவது புரிந்து அனுசரித்துப் போகும் இவ்வளவு அழகான மனைவி கிடைப்பாளா? என் ஒவ்வொரு சுவையையும் அறிந்து என்னை மகிழ்விக்கும் அன்னையாய் மாறிய என் மனைவியைப் பற்றி.... ஏய்! விமலா வீண் கற்பனைக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறாயா? என்று சப்தம் போட்டு கேட்க வேண்டும் போலிருந்தது.

«என்ன ராஜன், மவுனமாகி விட்டீர்கள்? உண்மையிலே உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சி யாக இருக்கிறதா?»

«ஆமாம். விமலா நீங்க நினைக்கிற மாதிரி எந்த சோகமும் என் வாழ்க்கையில் கிடையாது»

«ராஜன் நான்... நான்... உங்களைத் திருமணத்திற்கு முன்னாலேயே கவனித்து கொண்டிருக்கிறேன். முன்னால் எவ்வளவு அழகாக டிரஸ் பண்ணி கொண்டு வருவீர்கள். ஆனால் இப்போதெல்லாம்... ஏனோ தானோ வென்று உடுத்துகிறீர்கள்... ராஜன் ஏனோ எனக்குள் உங்கள் சோகம் ஒரு பரிதாபத்தை ஏற்படுத்தி விட்டது»

«எனக்குள் சோகம் என்று யார் சொன்னது? விமலா நீங்கள் எதையோ தவறாக கற்பனை செய்து கொண்டு என்னைப் பார்க்கிறீர்கள் என்றுதான் தோன்றுகிறது»

«இல்லை ராஜன் எனக்குள் ஏற்பட்ட பரிதாபம் இப்போது எப்படியெல்லாமோ விரிந்து வேறு விதமாக வேரிட்டு கிளைவிட ஆரம்பித்து விட்டது. நீங்கள் விரும்பினால்... நான் உண்மையிலேயே பல நாள் யோசித்து முடிவெடுத்த பின்னால்தான் இதைப் பற்றி உங்களிடம் சொல்கிறேன். என்னாலே உங்களுக்கு மகிழ்ச்சி தர முடியும் என்றால்... என்னால் உங்கள் சோகங்களை கழுவி விட முடியுமானால்... நான் உங்களை என் புருஷனாக ஏற்றுக் கொள்கிறேன்» என்று சொல்லி விட்டு வேகமாக எழுந்து போய் விட்டாள்.

*ரயில் குர்லாவில் நின்ற பிறகுதான் சுய நினைவு வர வேகமாக இறங்கி வீட்டை நோக்கி நடந்தேன்.*

*என் மனைவி சொன்ன சப்பாத்திக்கல் ஒன்று வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்தபோது ஆவி பறக்க காபியோடு வந்தாள் என் மனைவி. குளித்து முடியைப் பறக்க விட்டு நான் வருவதை எதிர்பார்த்துக் காவல் இருந்து எனக்காகத் தன்னை அழகுப்படுத்திக் கொண்டு.... இந்த அழகியிடம் என்று குறை கண்டேன்?*

*காபியை கையில் வாங்கிக் கொண்ட நான் எதிர் பார்க்காமல் கன்னத்தில் முத்தத்தால் தாக்கப்பட்டேன். என் மகளைத் திரும்பிப்பார்த்தேன். அழகாகத் தூங்கிக் கொண்டிருந்தது அந்த சின்ன மலர்.*

*«என்ன அய்யாவிற்கு இன்று மூடில்லையோ» என்றாள் என் மனைவி கவிதா என்னைப் பார்த்து சிரித்து கொண்டு. அப்படியே அவளை மெதுவாக வாரி அணைத்தபோது வெளியே வேகமாகச் சப்தம் கேட்டு மெதுவாக எட்டிப் பார்த்தேன்.*

*கவிதா சொன்னாள், «பக்கத்து வீட்டுக்காரன் எப்போதுமே சின்ன வீட்டிலே இருந்து விடுகிறானாம். இன்று வந்திருக்கிறான் போலிருக்கிறது. அவனுடைய மகனும், மகளும் திட்டிக் கொண்டே இருக்கிறார்கள். பாவம் அந்தப் பொம்பிளை சம்பாத்தியத்தில்தான் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்» என்றாள்.*

*எனது மனம் தீர்மானம் செய்தது. நாளை காலையில் விமலாவிடம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று. அவளுக்கு எப்படி அறிவுரை சொல்ல வேண்டும் என்று.*

# என்னவனே!

என்னவனே நீ எங்கே!
உன்னைத் தேடி
நாட்களும் கரைகிறதே!

மொழித்தெரியாததைப்போல
விழிப்பிதுங்கிடுகிறேன்..
பேச்சுக்களில் உன்னை
தொடங்கி ஊசலாட்டம் எழுகையிலே!

யாரோ எங்கோ ஊரோ
பெயரோ அறியாமலே ..
வருங்காலமென எண்ணம்
முழுதிலும் ஓர் வசீகரம்..

காசுப்பணமோ சொத்து பத்தோ
அடுக்கிக் கொண்டு வருவதை
முகம் சுளித்து தள்ளிவிடுகிறேன்..

மனதிற்குப் பொருத்தமாய்
இயல்பை ஏற்கும் வண்ணமாய்த்
தேடல் தொடங்குதே!

என்னவா எல்லாமாய் நீயாகி
வந்தால் தான் என்ன
வடிவற்றுப் போகிற நாட்கள்
அலங்கரித்து விடட்டுமே..

பார்வைகள் கூட காவல்
இழக்காதிருக்க காவலாக
நீயாகி வந்தால் என்ன?

மனதின் சிணுங்களுக்கு
பாதுகாவலாய் வந்தால் என்ன?

ரசிக்கும் பார்வைக்கும்
சிணுங்கும் மூச்சுக்கும்
உரிமை வேண்டுமே..

வேண்டா நினைவையும்
வேண்டா சிந்தையும்
உள் நுழைக்காத போதும் ..
பாதுகாவல் வேண்டிக்
கொள்கிறது மனது..

**சஹ்னாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்



# துளிப்பா

♉

விழுந்து எழும் போது
பலம் பெறுகிறேன்
பயிற்சி

♉

என் கவலைக்கும் மகிழ்ச்சிக்கும்
நானேதான் காரணமாகிறேன்
வினைப்பயன்

♉

மனமுடைந்தேன்
விதியை உணர்ந்தேன்
தடுக்கவும் முடியுமா...

♉

அன்பும் உணர்வும் ஒருமித்து
ஒருயிர் மேல் ஒட்டிக்கொண்டது
காதல் தேசம்

♉

புலம்பலைக் கேட்க
ஆறுதலுக்கு ஒருவர் வேண்டும்
நட்பில் துணையாய்

பஹ்ரியா பாயிஸ்



விறகாய் எரிவது
ஒடை முள் ஆனாலும்
ஓங்கும் சந்தனம் ஆனாலும்
அடுப்புப் பானைக்கு
கொடுக்கும் தீ ஒன்றுதான்...

நெருப்பில் எறிவது
கொதிக்கும் நீரானாலும்
குளிரும் பண்ணீரானாலும்
அணைக்கும் தன்மையில்
இரண்டும் ஒன்றுதான்..

பந்தியில் அமர்பவர்
படித்தவர் என்றாலும்
படுமூடர் என்றாலும்
உண்டவர் எண்ணிக்கை
விருந்தில் ஒன்றுதான்..

இருப்பின் இடம்தான்
சிறப்பை உயர்வாக்கும்..
இறப்பின் நிலைதான்
பிறப்பை சிறப்பாக்கும்..

கமல. அருள் குமார்.

# நிலையாமைத் தத்துவத்தில் நின்றாடும் உலகமிது

நிலையாமைத் தத்துவத்தில்
நின்றாடும் உலகமிது
அலையாடும் மனங்களில்
அசைபாடும் கணங்களிது....

மலையாடும் தென்றலின்
இசைபாடும் களங்களிது
மனையாகும் நிலங்களின்
விளைச்சலெல்லாம் கேள்வியாகுது....

கடலாடும் படகதனிலே
வாழ்க்கையது தள்ளாடுது
சொல்லாடும் பெண்களின்
கண்களோ கேள்வியாகுது

நீதியுமிங்கு நிலையிலன்றி
பணத்திற்கே விலையாகுது
பாதியென்ற பெண்மையது
வேள்வியில் தீக்குளிக்குது...

கடையேழு சங்கங்கள்
சடைபிடியில் சண்டையிடுது
சலனங்கள் சஞ்சலத்தோடு
சந்தேகத்தின் வலம்வருது ....

மதியால் விதியழிக்கும்
போராட்டம் சதிராடுது
சதிகள் பலவாகி
சந்திகள் சிரிக்குது.....

ஆதிமுதல் அந்தம்வரை
அத்தனையும் சேறாகுது
மோதிப்பார்த்த முன்னவர்
காணாமற்போகும் செய்தியாகுது..

வானவில்லை வளைப்பதாய்
வாக்குறுதி உறுவாகுது
வாய்மொழியில் சொன்னதெல்லாம்
வாய்க்காலில் நீராடுது....

வெண்ணிலாவில் வீடு
கட்டிட கனவாகுது
செவ்வாய் கிரகத்தின்
காலடிக்கும் அடிபோடுது

வேலையின்மை திண்டாட்டம்
வேதனையாய் விரிவாகுது
வேடிக்கை பார்க்கும்
வீணர்கள் உருவாக்குது...

பாரினிலே லஞ்சமது
கரை புரண்டோடுது.
பாவங்கள் கரையும்
கங்கைகள் உருவாகுது....

தென்றலின் முகவரிகள்
தொலைந்தே போனது
தீயாக வெப்பநிலை
பூமியதை பந்தாடுது

கலைகள் எல்லாம்
கடைச்சரக்காய் ஏலம்போகுது
கலையாதக் கனவுகளில்
காலத்தின் ஓட்டமிது....

**கவிஞர் இரஜகை நிலவன்**
மும்பை

# நிம்மதி வேண்டும் வாழ்வில்

**கவித்தாரகை**
கற்பிட்டி

உம்மா உம்மா என்று சப்தம் கொடுத்தாள் மகள் மைமுனா இருங்க மகள் இதோ வறேன் என்றார் ஹாஜரா.

ஹாஜரா இளம் பெண் கணவனை இழந்தவள் ஒற்றை மகளை கண்ணும் கருத்துமாய் வளர்த்து அவளுக்காக பார்த்து பார்த்து செய்தவர். மகளுக்காக பாடுபட்டு திருமணத்தையும் செய்து வைத்து விட்டார்.

இனி என்ன செய்வது எப்போதுமே ஏதொன்றை போட்டு கிறுக்கி கொண்டிருப்பவர் தான். அவரும் படித்து கொண்டிருந்த சமயத்தில் தாயின் தாய் மரண படுக்கையில் வீழ்ந்த போது பாட்டியின் கடைசி ஆசை என்று திருமணம் நடந்தது தாய் மாமானின் மகன் பைசலுக்கும். அவனுக்கு பெரிதான பக்குவமிருந்தது இல்லை தோழமையோடு ஊர் சுற்றுவதும். உணவகங்கள் சென்று விதவிதமாய் உண்பதுமே பெரும் பகுதி யாகியது அவனுக்கு.

திருமணத்தின் பின் சில நாட்களே அவளோடும் உறவுகளோடுமென்று இருந்தவனோ. ஆறாவது மாதம் ஹாஜரா வயிற்றில் மைமுனா மூன்று மாத சிசுவாக இருந்த போதும் அவனுக்கு அது பெரிதான விடயமாகவே இருந்தது இல்லை.

தன் தோழர்களோடு ஊர் சுற்ற சென்று விட அந்நாளோ பலத்த இடி மின்னலோடு மழையும் கொட்டி தீர்க்க அவன் வந்த பாடுமில்லை. மழை விட்டபாடுமில்லை நேரம் விரைய விரைய வீடே கதிகலங்க பைசலின் தாயாரோ எல்லாமே இவள் நேரமென துவங்க, அவளோ ஓரமாக நின்று கண்ணீர் வடிக்கலானாள் ..

மறுநாளும் அதே தொடர மாலை நேரம் அவர்களுக்கு சேதியாகி போனது பைசல் இறந்தது தான். அவள் கேட்ட சேதியோடு உறைந்தே போக பைசலின் தாயாரோ அவளை அடித்து புலம்ப தடுப்பாரின்றி அடிகளை வாங்கினாள் ஹாஜரா.

தாயில்லா புள்ளை என்று தானே இவளை கட்டி வச்சேன் புள்ளையே இல்லை என்று நிற்கிறேனே என அழுதுதீர்த்து புலம்பினார் ..

காலம் கண்ணீரோடு கடந்தாலும் ஆடைகளை தைத்து தன் குழந்தையையும் கரை சேர்த்து விட்டார். இன்று மகளை புகுந்த வீட்டில் விட வேண்டும். ஏனோ மன வலி அவரைப்படுத்தியது.

கணவனில்லாது வாழ்ந்தவருக்கு ஆறுதலாகி போன பிள்ளையை இழக்க மனம் இல்லை அவருக்கு.

பிள்ளை பதினொன்றா வகுப்போடு படித்து விட்டு இதோடு போதும் மா உன்னோடே நான் இருக்கிறேன் என்று தாய்க்கு கைக் கொடுத்தவள்

இரண்டாண்டு தாயோடே தையலை நன்றாக கற்று தைத்தாள்.

கணவன் இல்லாமலே வாழ்வதென்றது நரகமானதல்லவா அவருமே பெரும் பாடோடு கடந்தாலும் வீண் பழியோடு அவப்பேரும் சேர தான் செய்யும்.

மகள் இல்லாத நாளை நினைக்க பயமாகிட அமைதியாக அமர்ந்து விட்டார் ஹாஜரா.

அக்கம் பக்கத்தினரால் தான் மைமுனாக்கும்சிறந்தவரன்வந்ததுதங்கமானவன் தான் குணத்திலும் பணத்திலும் குறையே இல்லாதவன் தான் மூஸின். மூஸினின் பெரியம்மா ஹாஜராவிடம் ஆடை தைக்க வந்து மைமுனாவை பிடித்து விட அக்கம் பக்கம் விசாரிக்க நலமாகவே சொன்னார்.

ஹாஜரா இறைவனை தினம் தொழுது மகளுக்கு நற்துணையை கொடென கேட்பது வழக்கமாகியது நிறைவுமாகியது..

உம்மா உம்மா வெளியிலே வாங்கமா என்ற மகள் பேச்சினில் இறைவனை பொறுப்பாக்கி விட்டு ரூம் விட்டு வெளியே வந்தார்.

தாயின் நிலமை புரிந்தாலும் அவள் அழுது வடித்து தாயை அழ வைக்க விருப்ப மில்லை. தாயை அணைத்து விட்டவள் உடம்பே பாத்துக்கொள்ளுங்க மா பத்திரமா இரிங்க மா என விடை பெறுகிறாள் மகள் .

அவ்விரவு ஹாஜரா அறையில் இருக்கையில் வெளியில் குசுகுசுக்கும் சப்தங்கள் கேட்டது. அவரோ அமைதியாக கேட்டும் இறைவனிடம் பிராத்தித்த வண்ணம் இருந்தார்.. இறையோனே பெரியோனே என் மானத்தை காத்தருள். என் மானத்தை சீரழிக்க நினைப்போரை விட்டு வைக்காதே என்று பிரார்த்தனை செய்தபடி இருந்தார் ..

மனதோ பதற்றமாகவே இருந்தது கணவனில்லாத ஓர்மையில் பெண்ணை நாறடித்திட துடிப்போரும் இங்கு பலருண்டு ..

மூஸீனுக்கு இரவு பதினொன்று போல அழைப்பு சட்டென்று எடுத்து சப்தத்தை குறைத்து விட்டான். ஆம் மைமுனா தாயைப்பற்றி வருந்தி புலம்பி இப்போது தான் ஏதேதோ சொல்லி தலைக்கோதி தூங்க வைத்திருந்தான் ..

மெதுவாக அறைவிட்டு வந்தவனோ அழைப்பை ஏற்று பேச தொடங்கினான். ஹலோ என்ன ஆச்சு எதற்கு இந்நேரம் அழைச்சிங்க என்று கேட்டான்.

அங்கு என்ன சொல்லப்பட்டதோ அவன் கண்கள் இரத்தமென மாறியது. இதோ வருகிறேன் வரும் வரை கவனமாக இருங்கள் என வைத்தான் ..

ஹாஜராவோ தொலைப்பேசியை வைத்துக்கொண்டு இலக்கத்தை தட்டுவதும் விடுவதுமாக இருந்தார். மகளை வழி அனுப்பும் போது தான் மருமகன் சிறு தொலைப்பேசியையும் எவ்வாறு பாவிப்பதென்றும் சொல்லி கொடுத்து எப்போதும் என்ன ஏது என்றாலும் அழைக்குமாறு மகளுடையதும் அவனுடையதையுமே இலக்கங்களை பதிவிட்டு சொல்லி சென்றிருந்தான் பைசல்.

ஹாஜரா பிரார்த்தனையோடு கண்ணயர்ந்த நேரம் வீட்டு கதவு உடைவது போல சப்தம் பதறி அவர் எழுந்த நேரம். யாரோ அழுவதும் கேட்க பயம் களைத்து ஓடோடினார். ஓட்டு வீடோடு ஓலைக்குடிசையே குசினியாக இருந்தது குசினி ஓலையென்றதால் இலேசாக

பிய்த்துக்கொண்டு உள் நுழைந்திட முடியும்.

அது போலவே நடந்திருந்தது. ஆனால் அவர்கள் உள் நுழைந்த நேரம் கார் ஒன்று வந்து நிற்க அக்கூட்டத்தில் உள்ள ஒருவன் ஓடோடி சென்று அக்காரை திறந்து வாங்கே சேர் இப்போதான் உள்ளே போக வேலியை பிய்த்தது என்றவனை கடந்து வந்தான் பைசல்

உள்ள வந்தவனோ வீட்டுக்குள் நின்ற மூவரையும் அடிக்கத் துவங்கினான். ஏன்டா பொம்புளை என்றா உங்களுக்கு என்னடா தனியா வாழ்ந்தால் உங்களால் நிம்மதி போயிடனுமா சொல்லுங்கனு தான் அடித்தான்.

அவர்களோ வலி பொறுக்காது நாங்க பணம் தந்ததுக்காக தான் வந்தோம். இந்தம்மாடே கணவருடைய உம்மா தான் இப்படி செய்ய சொன்னது என்று தப்பித்தோமென்று ஓடி விட்டார்கள்.

மூஸீனால் ஜீரணிக்க முடியவில்லை ஒரு பெண் இத்தனை காலம் எப்படியெல்லாம் தனியாளாக கஷ்டமும் கடினமும் தாண்டி பெண் பிள்ளையை கரை சேர்த்திருக்க முடியும்.

ஹாஜராவைப்பார்த்து உங்களிடம்சொல்லி தானே சென்றேன் ஏன் எனக்கு தகவல் தரவில்லை என்று கேட்க அவரோ சங்கடமாக பார்க்க நான் உங்க பிள்ளை என்று நினைத்திருந்தால் சொல்லிருப்பிங்க என்றதுமே ஹாஜரா விழிகள் பெரிதாக மனதும் தன் பிழையோ வென நினைத்திட ஒரு மனமோ தவறல்ல என உறைத்தது.

காருக்குள் இருந்து ஓடி வந்த மைமுனா வாசலோடு நின்று பார்த்தவள் நடந்ததை கிரகித்து விட்டு உம்மாவென கட்டி கொண்டு தேம்மி அழுதாள்.

மூஸீனோ திரும்பி அவளைப்பார்த்து திடமான கம்பிரமான பெண்ணுக்கு பிறந்தவள் நீ சந்தோசப்படவேண்டும் என்றவனோ இனி நானும் இங்கே தான் இருக்க போகிறேன் மகனாக என்றதும் பூரித்து போனார் ஹாஜரா.

அல்ஹம்து லில்லாஹ் என் மகளுக்கு சிறந்த துணை கேட்டேன் இறைவா மகனைப்போல செல்வத்தை தந்து விட்டாய் இனி நான் நிம்மதியா இருப்பேன்.

அங்கு மூஸீனுக்கு தகவல் சொன்ன வரிடம் பைசல் சென்று தக்க நேரத்தில் தகவல் தந்தீங்க நாநாஜஷாக்குமுல்லாஹு ஹைர் என்று நன்றியையும் தெரிவித்தான்.

ஆம் காலையிலே நஷிமை கண்டு கொஞ்சம் பார்த்துகொள்ளுமாறும் என்ன ஏதுமென்றாலும் சொல்லுமாறு சொல்லி சென்றிருந்தான் ..

அவரை வழி அனுப்பி விட்டு தன் நண்பன் ஹிசாமுக்கு அழைத்து ஹாஜராவின் மாமியாரை கொஞ்சம் கவனிக்க சொல்லி வைத்ததை கேட்டார் ஹாஜரா.. இத்தனை நாளும் இரா தூக்கத்தை நிம்மதியற்று செய்தவர் இவரா இவரும் பெண்ணா என்று நினைத்தவருக்கு பாசம் செய்த வினை என்று சொல்லி தேற்றிக் கொண்டார்.

இப்படித்தானே யாவரும் தன் பிடிப்புக்காக தியாகம் செய்வதும் துரோகம் செய்வதும். இறைவனின் பிடியிலிலிருந்து ஏதும் தவறுவதில்லை அமைதியாக இருப்பது விட்டு பிடித்தலுக்காகவே அன்றி கண்டுக்கொள்ளாது விட்டு விட அல்ல

முற்றும்

# இளைய முனி

இளைய முனியிடம்
சொல்லிப் போவது
எப்போதுமே சுகமானது.
எந்த இடத்திலும்
எந்த நேரத்திலும்
என்னைக் காப்பாற்றும்
என் சாமி-
ரத்தமாய்ச் சிவந்த
கண்களை உருட்டி
பயமுறுத்தும் வேடிக்கை
சிலநேரம் நிகழ்வதுண்டு.
ஆனாலும் என்சாமி-

எந்த விநாடியிலும்
பீடத்திலிருந்து
இறங்கி வருதல்
சாத்தியமாயினும்
அச்சமென் றேதுமில்லை.

புருஷனைத் தொலைத்த
ரஞ்சிதம்
என்னை இழுத்துமுயங்கி
தாபம் தணித்துக்
கொண்டிருந்த போது
கண்களை மூடிக்கொண்ட
வெட்கம்
விசித்திரமாயிருந்தது.

உலகத்துக் கவலைகள்
ஓராயிரம் உள்வாங்கி
யாரோ ஒருவன்
ஈமொய்க்கக் கிடந்த
போது
பூத்த புன்னகை
பூடகமானது.

சாயம்போன-
கன்னங்கள்-
கூர் மழுங்கிய-
வெட்டரிவாள்-
காரை பெயர்ந்த
முன் வயிறு-
இன்ன பிற என்றாலும்
இருக்கிறது உக்கிரம்
உருண்டைக் கண்களில்-

அண்மையில்
கிடாவெட்டு நடந்த
தடயம் ஏதுமில்லை.

தாயமாடும்
சோம்பேறிகளுக்குத்
துணை
தேவைப்பட்டதில்லை.
சாநித்யம் போன சாமி
குடமுழுக்குச்
செய்யவேண்டுமெனப்
பட்டியலிடும்
உள்ளூர்க் குருக்கள் வாக்கில்
வறுமையும் வேறு சிலவும்
தெரிந்தன.

தோளில் உட்கார்ந்து
அசிங்கமாய்க் கழிக்கும்
பறவைகளை விரட்டும்
எத்தனம் ஏதுமின்றி
மௌனமாய் நிற்கும
சாமி.

ஆனாலும்
போகும் போதும்
வரும் போதும்
இளைய முனியிடம்
சொல்லிப் போவது
பாதுகாப்பாய்த்தான்
இருக்கிறது இன்னமும்.

நா.விச்வநாதன்



# தாய்மை

தாய்மை என்பது தனி வரம்
தரணியில் நல்கிடும் தனித்துவம்

தாய்மை என்பது பெருந் தவம்
ஏழ்மையிலும் அது கருத்தனம்

உயிருக்குள்
உயிர் விளையும் அற்புதம்
பெண்மைக்கு பெருமை சேர்க்கும்
உன்னதம்

மலடி யென்றதொரு
மகாபழி நீக்கும் மகத்துவம்
மகிழ்ச்சி மண்ணில்
மலரவைக்கும் மலர்வனம்

முந்நூறு நாள் சுமக்கும் பாக்கியம்
கண்ணுறக்கம் கவலைகள் தனை
மறக்கும் வாக்கியம்

சுந்தர சுவனத்தை
அனந்தரமாக்கும் அதிசயம்
மந்திர வித்தையாய்
மனதினை ஈர்த்திடும் ஆனந்தம்

தந்தையெனும் அந்தஸ்தை
தன் துணைக்குப்
பரிசளிக்கும் பவித்திரம்
விந்தையான விசித்திரம்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.



# தெலுங்கானாவில் தமிழ் எழுத்தாளர்

# மைதிலி சம்பத்

நேர்கண்டவர்

**தமிழ்நெஞ்சம் அமின்**

மேலே படத்தில் கவிமாமணி இளையவன் அவர்களிடம் பரிசுபெற்ற தருணம். கூட இருப்பவர் இரா ஸ்ரீனிவாசன் அவர்கள்



மைதிலி அவர்களின் இசை நிகழ்வு

தெலுங்கானா தமிழ்ச் சங்க விழாவில்




***"வணக்கம் சார். நல்லா இருக்கீங்களா?"***

*"நல்லா இருக்கேன்மா.* ***நீங்க எப்படி இருக்கீங்க?"***

*"நல்லா இருக்கேன் சார். அயல் நாட்டிலிருந்து தமிழ் பத்திரிகை நடத்தி, தமிழ் வளர்த்து, தமிழ் எழுத்தாளர்களை வளர்த்து, தமிழே மூச்சாக நினைக்கும் உங்களுடைய தமிழ் பணிக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கங்கள். நீங்களே என்னை நேர்காணல் செய்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அதே சமயம் சற்று பதட்டமும் இருக்கிறது."*

***"நீங்கள் ஒரு நல்ல எழுத்தாளர்.. பதட்டம் எதற்கு? வாருங்கள், நம் நேர் காணலை ஆரம்பிக்கலாம். உங்களுடைய இளமைக்காலம் மற்றும் படிப்பு ஆகியவை பற்றி, அப்போது இருந்த சூழ்நிலை ஆகியவை பற்றி சொல்லுங்கள்."***

"நான் கலை வளர்த்த தஞ்சாவூரைச் சேர்ந்தவள். முதலில் நீங்கள் என்னை எழுத்துக்காக நேர்காணல் செய்தாலும், சிறு வயதில் எனக்கு இசையே முக்கியமாக இருந்ததால் அதைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டி இருக்கிறது. தஞ்சாவூரின் மண்ணுக்கே உரிய இசைஞானம் எனக்கும் இருந்தது. அங்கு இருக்கும் எல்லா பெண்களையும் போல் நானும் பாட்டு கற்றுக் கொண்டேன். ஒரு ஐந்து ஆறு வருடங்கள் கற்றுக் கொண்டேன். எனக்கு சிறு வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. திருமணத்திற்குப் பிறகு நான் புகுந்த இடத்திலும் என்னுடைய கணவரின் அக்கா பெரிய பாடகியாக இருந்ததால் என்னால் சங்கீதத்தை விருத்தி செய்து கொள்ள முடிந்தது. எனவே நிரம்ப வருடங்களாக எல்லா தரப்பினருக்கும் எல்லா வயதினருக்கும் பாட்டு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்றும் அயல்நாட்டில் உள்ள தமிழ் மாணவர் களுக்கும் தெலுங்கு மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். எல்லா தரப்பினரும் என்று நான் சொல்லும் போது கிறிஸ்துவ கன்னி யாஸ்திரிகள் கூட அதில் அடக்கம்



குமுதம் சிநேகிதி லோகநாயகியுடன் மைதிலி

***"அப்படியா? உங்கள் கணவர் என்ன செய்கிறார்?"***

"அவர் இந்தியன் பேங்கில் வேலையாக இருந்தார். பணி ஓய்வு பெற்று இப்போது எனக்காக பணி செய்து கொண்டிருக்கிறார்! எழுதுவதுதான் என் வேலையே தவிர, அதை தட்டச்சு செய்வது, அனுப்புவது ஆகியவை எல்லாம் அவர் தான் பார்த்துக் கொள்கிறார்.."

***"நீங்கள் ஆரம்பத்தில் இருந்து செகந்திராபாதில்தான் இருக்கிறீர்கள் இல்லையா ?***

இலக்கியத் திரு விழாவில் டெல்லி கணேஷ் மற்றும் கலை இலக்கியத் தொண்டர்களுடன்





**மைதிலி சம்பத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தில் உரை நிகழ்த்தியத் தருணம்**

"முதலில் சென்னையில், அதன் பிறகு சில வருடங்கள் மும்பையில் பிறகு திரும்ப சென்னையில், பிறகு செகந்திராபாத் தான். இங்கு வந்த பிறகு வேறு எங்கேயும் போகவில்லை. பணி ஓய்வும் இங்கேயே பெற்றார். அதனால் இங்கேயே நாங்கள் நிலை கொண்டு விட்டோம்."

**"நீங்கள் எப்போது எழுத ஆரம்பித்தீர் கள்?"**

"நான் சிறுவயதில் இருந்தே கையில் கிடைத்த புத்தகங்கள் எல்லாவற்றையும் படித்து விடுவேன். நிறைய தமிழ் வாராந்திர, மாதாந்திர புத்தகங்கள் தவிர, கையில் கிடைக்கும் ஆங்கில புத்தகங்கள் கூட. எங்களுடைய பள்ளிக்கூடம் மிக நல்ல பள்ளிக்கூடம் அங்கு ஒவ்வொரு குழந்தையின் மொத்த வளர்ச்சியையும் கவனிப்பார்கள். மிக நல்ல லைப்ரரி இருந்தது. அதை முழுவதுமாக பயன் படுத்திக் கொண்டேன். ஆக படித்தவை எல்லாம் மனதில் தேங்கி இருந்திருக்க வேண்டும். ஆனால் சின்ன வயதில் எழுதலாம், எனக்கு எழுத வரும் என்றெல்லாம் நினைக்கவில்லை. அதன் பிறகு தான் இந்த ஊருக்கு கவி மாமணி திரு இளையவன் அவர்கள் வந்தார். அப்போது நான் ஒன்று இரண்டு கதைகள் எழுதி வைத்திருந்ததை அவரிடம் காண் பித்தேன். 'கதைகள் எழுதி இப்படி உள்ளேயே வைத்திருப்பீர்களா? எல்லாம் பிரசுரமாக வேண்டாமா?' என்று சொல்லி லேடீஸ் ஸ்பெஷல் மாத பத்திரிகையில் என்னுடைய கதைகள் வர ஏற்பாடு செய்தார்.

கொஞ்ச நாட்களிலேயே திரு தீபம் திருமலை அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர் 'நீங்கள் நாவல் எழுதுங்கள். உங்களால் முடியும்' என்று உற்சாகப்படுத்தினார். என்னுடைய முதல் நாவல் "நெஞ்சின் அலைகள்". அது நல்ல வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. அந்த தைரியத்தில் "ஐயாறப்பன் வீடு" என்ற நாவலை எழுதினேன் இந்நாவலும் மிகுந்த வரவேற்பு பெற்றது. அது போல் நிறைய நாவல்கள். இதுவரை என் 17 நாவல்கள் வெளிவந்திருக்கின்றன"

**"அப்படியா? பாராட்டுக்கள் அம்மா. சிறுகதை தொகுப்புகள் ஆகியவை வெளி யிட்டு இருக்கிறீர்களா?"**



“ஆமாம். ஐந்து சிறுகதை தொகுப்புகள். அவற்றில், கிட்டத்தட்ட 120 கதைகள் உள்ளன.. ஐந்து கட்டுரை தொகுப்புகள், மூன்று மொழிபெயர்ப்பு புத்தகங்கள் ஆகியவையும் வெளிவந்திருக்கின்றன, கட்டுரை தொகுப்புகளில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் “சப்தகிரி” மாதப்பத்திரிகையில் ஆன்மீக கட்டுரைகள் அவ்வப்போது எழுதி வருகிறேன். அவை யும், மற்றும் இங்குள்ள சங்கீத சபாக்களில் ஆண்டு விழா மலர் போடும்போதெல்லாம் அவற்றிற்கு எழுதுகிறேன். அவையும் மற்றும் பொதுக்கட்டுரைகள் எல்லாமே இருக்கும் ராமானுஜரை பற்றியும் நிறைய எழுதி இருக்கிறேன்”

**“உங்கள் நாவல்களைப் பற்றி விரிவாக சொல்ல முடியுமா?”**

“என் நாவல்களின் சிறப்புத்தன்மை என்று சொன்னால் ஒரு நாவலை போல் ஒரு நாவல் இருக்காது. என் எல்லா நாவல்களுமே வேறு வேறு கருத்துக்கள் கொண்டவை. சொல்லப்போனால் உங்க ளுக்கு அலுப்பு தட்டலாம்.”

**“இல்லை அம்மா! சொல்லுங்கள்.”**

“முதல் நாவலில், கூடப்பிறந்தவர்



கம்பர் விழாவில் சாந்தா தத், ராஜம் கணேசன் ஆகியோருடன்

களுக்குள் நாமே வித்தியாசம் பார்த்து வளர்க்கக்கூடாது என்பது கரு. “பெண் எனும் தேவதை” எனும் அடுத்த நாவலில் சிறு வயதில் பெண்கள் வழி தவறிப் போகக்கூடாது. என்பது மையம். இதில் நான்கு முடிவுகள் கொடுத்திருந்தேன். உங்களுக்கு இந்த முடிவு பிடிக்காவிட்டால் இதை கடந்து போங்கள் இந்த முடிவு பிடிக்காவிட்டால் அதை கடந்து போங்கள் என்பது போல்.. முடிவை. வாசகர்களிடம் விட்டுவிட்டேன் அந்த எண்ணம் மிகுந்த பாராட்டை பெற்றது.

அடுத்த நாவல் “ஐயாறப்பன் வீடு” ஐந்து குடும்பங்கள் ஒருவருக்கு ஒருவர் உறவில்லை எனறாலும் ஒருவருக்கு ஏதோ பிரச்னை வந்தால் அவருக்கு தெரியாமலே கூட அடுத்தவர் எப்படி தீர்த்து வைக்கிறார் என்பது பற்றியது. அதன் பிறகு சுஜாதா வின் “விலை” என்ற சிறு கதையைப் படிக்க நேரிட்டது. அது என்னை மிகவும் பாதித்துவிட்டது. அன்று இரவெல்லாம் நித்திரை கொள்ளாமல் தவித்தேன். அந்த இரவில் தோன்றியது தான் “மல்லிகை பூ வீடு” என்ற முழு நீள நாவல். என்னுடைய அம்மா ஊர் ஸ்ரீரங்கம். ஆகையால் அவ்வப்போது போவது வருவது என்று சம்பந்தம் உண்டு. அதையும் மனத்தில் நிறுத்திக்கொண்டு சுஜாதாவின் கதாபாத்தி ரங்களையும் மனதில் வைத்து அந்த நாவலை எழுதினேன். அதற்கும் நிறைய

உரத்தசிந்தனை விழாவில்



பாராட்டுகள் வந்தன.

அதன் பிறகு டாக்டர்கள் சில வேளைகளில் செய்யும் தொழில் விரோத செயல்கள். அது "சின்ன ரோஜா பூவே" யாக உருவெடுத்தது. ரொம்ப சின்ன குழந்தைகள் மேல் நடக்கும் பாலியல் வக்கிரங்கள். அது "வாராது போல வந்த..." நாவல். முக்கியமான கதை "நீ அன்றோ என் ரதி" பெண் முகத்தில் ஆசிட் வீசினான் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். இந்த ஆசிட் வீசிய ரவுடியை யாராவது எப்படியாவது சிறையில் போடுகிறார்கள். தண்டனை கொடுக்கிறார்கள் ஆனால் அந்த ஆசிட்டினால் கோரமான முகத்தோடு நடமாட வேண்டிய பெண் வாழ்க்கை முழுவதையும் எப்படி கழிப்பாள்? அந்தக் கருத்தினை பெரியதாக்கி எழுதியது தான் அந்த "நீ அன்றோ என் ரதி" என்ற புத்தகம். இதுபோல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம் கைத்தொழில் மேம்படுத்தி ஒரு நாவல். பள்ளிக்கூடம் நடத்துவது எப்படி என்று ஒரு நாவல். இரண்டு வருடங்களுக்கு முன் லேடிஸ் ஸ்பெஷல் மாத பத்திரிகைக்காக வருடம் முழுவதும் மாதம் ஒரு வியக்கத்தக்க பெண்மணியை பற்றி எழுதி வந்தேன். நல்ல வரவேற்பு இருந்தது".

Mythili Sampath with SPM,
Justice Ramasubbramaniam



**"எப்படி எல்லாம் எழுதி இருக்கிறீர்கள்?! மிகவும் நன்றாக இருக்கிறது அம்மா. கதைகள் எல்லாம் அப்படி என்றால் நிறைய பரிசுகள் கூட வந்திருக்கும், இல்லையா?"**

"ஆமாம், சார்! நிறைய பரிசுகள் வந்திருக்கின்றன. பெரிய பத்திரிகைகளில் இருந்து எல்லாம் பரிசுகள் வந்திருக்கின்றன ஆரம்பத்தில் "நம் உரத்த சிந்தனை" மாதப்பத்திரிகையில் தான் என்னுடைய ஐந்து சிறுகதைகள் தொடர்ந்து பரிசு வாங்கியது. அதன் பிறகு நிறைய நாவல்களுக்கு அவர்களே பரிசு கொடுத்தார்கள். தொடர்ந்து மூன்று வருடங்கள் என் நாவலுக்குத்தான் பரிசு வந்தது அதன்பிறகு சிறந்த நாவலாசிரியர் என்று ஒரு விருது கொடுத்தார்கள். அதை நடிகர் சிவகுமார் கையால் கொடுக்க வைத்தார்கள். அது என்னுடைய வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சி அளித்த தருணம். சிறுகதை தொகுப்பிற்கும் பரவலாக பரிசுகள் வந்திருக்கின்றன. எனக்கு வந்த பரிசுகளில் கலைமகளில் "விடுதலை விடுதலை விடுதலை" என்ற என்னுடைய சிறுகதைக்கு பரிசு வந்து 2014ல் இலக்கியச் சிந்தனையில் அது இடம்பெற்றது எனக்கு மிக்க மகிழ்ச்சி தந்தது. "

**"மகிழ்ச்சி அம்மா! நீங்கள் உங்களுக்கு கிடைத்த பாராட்டுகளைப் பற்றி சொல்ல முடியுமா?"**

"சொல்லலாம் சார். குறிப்பாக சொல்வதென்றால் கனடாவில் இருந்து ஒருவர் போன் செய்து 'வயணமாக சாப்பிட்டான் என்று சொல்லி இருக்கிறீர்களே, அம்மா! அப்படி என்றால் என்ன?' என்று கேட்டார். அந்த ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் அவருக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டதாம், அதனால் அதை கேட்டார். சட்டமாக, சம்பிரதாயமாக

சாப்பிடுவது என்று சொல்வார்களே, அது என்று அவருக்கு புரிய வைத்தேன். அப்புறம் திருவனந்தபுரத்திலிருந்து ஒரு கிறிஸ்தவ ஃபாதர் ஃபோன் செய்து ஒரு கதையை மிகவும் பாராட்டினார். சிங்கப்பூரிலிருந்து ஒரு அம்மாள் 'தன்னுடைய அம்மா வயதானவர். பாரிச வாயு வந்து ஒரு கை தான் விளங்குகிறது. அந்த கையில் எப்போதும் "மல்லிகை பூ வீடு' நாவலை வைத்திருப்பார். அந்த கதை அவரை மிகவும் கவர்ந்து விட்டது' என்று சொன்னார். ஏனென்றால் அவர்கள் ஸ்ரீரங்கமாம். அது போல் எல்லாவற்றையும் விட மனநிறைவை கொடுத்தது எது தெரியுமா? கோயம்புத்தூரில் இருந்து ஒரு அம்மா போன் செய்தார்கள். அவருடைய பையன் ஏதோ ஒரு குற்றம் செய்து சிறையில் இருந்தான். அவன் பரோலில் வந்த போது சொன்னானாம். "'ஐயாறப்பன் வீடு நாவலை எனக்கு அங்கே படிக்கக் கொடுத்தார்கள். அதை படித்ததில் இருந்து இனிமேல் மனதால் கூட எவருக்கும் தீங்கு நினைக்க கூடாது, மிகவும் மாற வேண்டும் என்று நான் என்று மனதில் சபதம் எடுத்துக் கொண்டேன், அம்மா!" என்று சொன்னானாம். சொல்லிவிட்டு அந்த அம்மா பெரியதாக அழுதுவிட்டார்கள். எனக்கும் கண்கள் கலங்கிவிட்டன. ஏதோ ஒரு இடத்தில் சமூகத்தில் ஒரு சின்ன சீர்திருத்தம் நம்மால் ஏற்பட்டது என்றால் நமக்கு சந்தோஷம் தானே!. என்னுடைய கதைகள் எந்த அளவு யாரையாவது சென்று அடைந்தால் திருப்தியாவேன் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமானால், என்னுடைய உறவினர் ஒரு பெண்மணி. வயதானவர். மல்லிகை பூ வீடு நாவலில் ஸ்ரீரங்கத்தில் ஒரு வீட்டை வர்ணித்திருந்தேன். அவருக்கு சின்ன வயதில் ஸ்ரீரங்கத்தில் ஒரு வீடு இருந்ததாம். அவருக்கு அதிக விருப்பம் இல்லாமலே அந்த வீட்டை விற்று விட்டார்களாம். அவருக்கு கொஞ்சம் வயதானதினால் உள்ள தடுமாற்றம் இருந்தது ஒரு நாள் பார்த்தால், ஒரு மொண்டாளியில் தண்ணீர் வைத்துக் கொண்டு அந்த வீட்டைப் பற்றிய வர்ணனை இருந்த பக்கத்தை முழுவதுமாக அழிக்க பார்த்திருக்கிறார். அவரை எந்த அளவு அந்த வர்ணனை தொட்டிருந்தால் அப்படி செய்வார், சொல்லுங்கள்! இதெல்லாம்



உரத்தசிந்தனை விழாவில் நடிகர் சிவகுமார். மாலன் ஆகியோருடன்

VS ராகவன் அவர்களுடன் மைதிலி சம்பத்



தான் ஒரு எழுத்தாளருக்கு மிக்க மகிழ்ச்சி அளிப்பவை என்று நான் நினைக்கிறேன்

இன்னொன்று தூத்துக்குடியில் முடி திருத்தகம் வைத்திருக்கும் முத்து என்பவர் என்னுடைய "இளம் பெண்ணின் நாட்குறிப்பு" என்ற ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட முழு நீளக் கதையைப் பற்றி பேசினார். அவர் வைத்தி ருக்கும் முடி திருத்தகத்தில் ஜனங்கள் படிப்பதற்கு என்றே ஒரு சின்ன நூலகம் நடத்துகிறார். அந்த நூலகத்தில் இந்த கதையும் வைத்திருக்கிறார். தனக்கு மனச் சோர்வு ஏற்படும்போதெல்லாம் இந்த கதையை கண்டிப்பாக படிப்பேன் எந்த பக்கம் கிடைத்தாலும் அதை படிப்பேன்" என்று சொன்னார். இந்த விஷயத்தை அவர் பிரதமர் மோடியிடம் "மன் கி பாத்"



மைதிலி சம்பத் திருப்பூர் கிருஷ்ணன் மற்றும் இலக்கிய ஆளுமைககளுடன்

நிகழ்ச்சியில் சொன்னார், தற்செயலாக நான் அதை டிவியில் பார்த்தேன் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது"

**"அதில் அப்படி என்னம்மா விசேஷம்?"**

"அது நாஜிகளால் யூதர்கள் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டார்கள் என்பது பற்றிய உண்மைக் கதை ஒரு 13 வயது பெண் அன்றாடம் தன்னுடைய வீட்டில் நடந்த மற்றும் அந்த குழந்தைக்கு தெரிந்தவர்களுக்கு நடந்த எல்லா கஷ்டங்களையும், அவர்கள் அனுபவித்த துன்பங்களையும், எப்படி எல்லாம் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்தது என்பதையும் அதில் எழுதி இருக்கிறாள். அந்த புத்தகம் எத்தனையோ முறை மொழியாக்கம் செய்யப்பட்டாலும் என்னுடைய மொழியாக்கத்திற்கும் நல்ல வரவேற்பு இருந்தது. இவை எல்லாம் தவிர, "சப்தகிரியில் நான் எழுதும் ஆன்மீக கட்டுரைகளுக்கு மிகுந்த வரவேற்பு உண்டு. எங்கெங்கிருந்தோ தெரியாதவர்கள் எல்லாம் போன் செய்து வாழ்த்துவார்கள்." இப்பொழுது என்னுடைய புத்தகங்கள் அமேசானில் கூட கிடைக்கிறது. நிறை காலாண்டு இதழில் ஸ்ரீ இராமானுஜரை பற்றிய இதழுக்கு ஆசிரியராக இருக்கும் வாய்ப்பை எனக்கு நல்கினார் இளையவன் அவர்கள் அது எனக்குக் கிடைத்த பெரிய பேறாகவே பாவிக்கிறேன்.

**"உங்கள் சேவை பிரமிக்க வைக்கிறது. இங்கு ஹைதராபாத்தில் உங்களுடைய தமிழ் பணிகள் என்னென்ன?"**

"இங்கும் பல தமிழ் சங்கங்கள் உள்ளன. ஆரம்பத்திலிருந்து நான் எல்லா சங்கத்திலும் உறுப்பினராக இருக்கிறேன். ஹைதராபாத் மாநகர் தமிழ்ச் சங்கம், நம் ஊர் உரத்த சிந்தனையின் எழுத்தாளர் சங்கத்தின் கிளை, 'நிறை இலக்கிய வட்டம், திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம், தெலுங் கானா தமிழ் சங்கம், தமிழ் ஐக்கிய சங்கம் ஆகிய அனைத்திலும் நான் உறுப்பினர். கலாச்சார அமைப்புகளிலும் உறுப்பினர். எனக்கு மேடைப்பேச்சு என்பது மிகவும் பிடிக்கும், இந்த சங்கங்களில் நான் இருப்பதால் எனக்கு அதற்கான வாய்ப்பு அடிக்கடி கிடைக்கிறது. அதுவும் "நிறை" உரத்த சிந்தனை இரண்டிலும், தெலுங்கானா தமிழ்

சங்கத்திலும் நிறைய உரைகள் நிகழ்த்தி இருக்கிறேன். பட்டிமன்றங்களிலும், கருத்தரங்கங்களிலும் பேசியிருக்கிறேன் ஆங்கிலத்தில் சொற்பொழிவு என்றால் ரோட்டரி கிளப், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகியவற்றில் ஒரு மணி நேர சொற்பொழிவு நடத்தி உள்ளேன். இதெல்லாம் எனக்கு மனத்திற்கு மிகவும் மகிழ்ச்சி கொடுப்பவை. ஏனென்றால் பள்ளிக்கூட நாட்களிலேயே நான் பேச்சுப் போட்டிகளில் எல்லாம் கலந்து கொண்டவள் தான். அந்த ஒரு ஆர்வம் இன்றும் தணியவில்லை. அதற்கெல்லாம் எனக்கு நிறைய நினைவுப் பரிசுகள் கிடைத்துள்ளன.

எனக்கு நாடகத்திலும் ஒரு சுவை உண்டு யாமறிந்த மொழிகளிலே என்று மொழி குழப்பத்தை வைத்து ஒரு நாடகம் எழுதி நானும் அதில் நடித்தேன். அது ஹைதராபாத் மாநகர் தமிழ் சங்கத்திற்காக எழுதப்பட்ட ஒரு முழு நீள நகைச்சுவை நாடகம். பக்தி டிவியில் ஆண்டாளின் வாரணமாயிரம் பற்றி ஒரு மணி நேரம் தெலுங்கில் விளக்கம் கொடுத்துள்ளேன். விசுவின் அரட்டை அரங்கத்தில் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டேன். கல்யாண மாலையிலும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப் பட்டேன். கலைஞர் டிவியில் “இன்றைய விருந்தினர்” பகுதியில் மற்றும் பெப்பர்ஸ் டிவியில் “படித்ததில் பிடித்தது” ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றேன்.

மைதிலி சம்பத் மு.மேத்தா மற்றும் இலக்கிய ஆளுமைககளுடன்





பட்டுக்கோட்டை பிரபாகரன் அவர்களிடமிருந்து விருதினை பெற்றுக்கொண்ட தருணம்

**“உங்களுக்கு கிடைத்துள்ள விருதுகள் பற்றி சொல்லுங்கள்.**

“உரத்த சிந்தனையிலிருந்து “புதினச் சிற்பி”, நிறையும் லேடீஸ் ஸ்பெஷலும் சேர்ந்து “ஸ்பெஷல் லேடீ” அவார்ட், அதன் பிறகு நிறையில் இளையவன் ஐயா அவர்கள் தாய், தந்தை நினைவாக கொடுத்த விருது, கோயம்புத்தூர் “வசந்த வாசல்” இருந்து “பல்சுவை வித்தகர்” என்னும் விருது, இன்னும் சிலவும் கூட கிடைத்துள்ளன.” சமீபத்தில் திருவள்ளுவர் தமிழ் சங்கத்தில் எழுத்துச் சிற்பி என்று ஒரு விருதளித்தார்கள்


**“பொதுவாக உங்கள் நாவல்களில் சிறப்பு அம்சம் என்று நீங்கள் கருதுவது எது?”**



மைதிலி சம்பத் யார் கண்ணன்

"முன்பே சொன்னேன். ஒன்றைப் போல் ஒன்று இருக்காது. இன்னொன்று எதிலுமே இப்போது வரும் சீரியல் களில் நாம் காண்கிறோமே அது போல் கல்யாணத்தை நிறுத்துவது, கொலை செய்ய முனைவது, யாராவது கர்ப்பமானால் கலைக்க மருந்து கொடுப்பது, இதுபோன்ற சம்பவங்கள் நிச்சயமாக இருக்காது. ஏதோ ஒரு திருப்பத்திற்காக ஒருவர் வில்லத்தனமான வேலையை செய்யலாம். அதுவும் கூட இல்லாமல் இயல்பாகவே நடக்கும் கதைகளும் உண்டு. ஆகையால் அந்த மாதிரியான சூழ்ச்சி, சதி உள்ள கதைகளை நான் எழுதுவதில்லை.

காஞ்சி முத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவில்...




**"உங்களுடைய எழுத்துப் பணிக்கு உங்கள் கணவர் உறுதுணையாக இருக்கிறார் என்று முதலிலேயே சொன்னீர்கள். உங்களுடைய மற்றுமுள்ள குடும்ப உறுப்பினர்கள் கூட ஆதரிக்கிறார்களா?"**

"ஆமாம் நிச்சயமாக. என்னுடைய கணவர் என்னை உற்சாகப்படுத்துவது போல் அனைவருக்கும் கணவன்மார் அமைந்தால் எத்தனையோ பெண்கள் இன்னும் கூட முன்னுக்கு வருவார்கள் என்பது என் அபிப்பிராயம். அது தவிர, என்னுடைய மகன் கணினியில் வல்லவர் ஆகையால் கணினியில் எனக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்து கொடுப்பார். தவிர என்னுடைய மருமகளும் நான் எழுதுவதற்காக எத்தனை நேரம் எடுத்துக் கொண்டாலும் உற்சாகப்படுத்துவார். ஆக எனக்கு குடும்பத்தாரின் முழு ஒத்துழைப்பு இருக்கிறது.

இப்போது என்னுடைய வண்ணத் தேரில் வசந்தம் என்ற புதினத்தை ஜூலை 14ஆம் தேதி நம் உரத்த சிந்தனையின் இந்த ஆண்டு விழாவில் வெளியிட்டார்கள். "நாவல் திலகம்" என்ற விருதும் அளித்தார்கள்.

**ஆசிரியர் அமின் : நன்றி அம்மா! உங்களைப் பற்றி நிறைய சொன்னீர்கள். உங்களோடு உரையாடியதில் மிக்க மகிழ்ச்சி.**

மைதிலி சம்பத் : மிக்க மகிழ்ச்சி சார்! எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் தங்களுடைய இச்செயலுக்கு நாங்கள் அனைவருமே நன்றிக் கடன் பட்டுள்ளோம். வணக்கம்.



# தாயின் மாண்பு

கருவினில் உயிரைத் தாங்கிக்,
கவனமாய்ப் பேணும் அன்னை!
தருவெனத் தழைக்கும் சேய்க்குத் ,
தண்மையாய்க் கொடுப்பாள் தாய்ப்பால்!
கருவிழி இமையைப் போன்றே,
கனிவுடன் சேயைக் காப்பாள்!
கருணையும் அன்பும் கொண்டு,
கலையருள் தருவாள் தாயே!

உலகினில் உயர்ந்த உள்ளம்,
உடையவள் எங்கள் தாயே!
கலங்கிடும் நிலையைப் போக்கக்,
கார்முகில் போலத் தோன்றி,
நிலவிடும் துன்பம் நீக்கி,
நித்தமும் துயரம் ஏற்பாள்!
பலவிதப் பணிகள் ஆற்றும்,
பண்பினைப் பகிர்வாள் தாயே!

கல்வியில் உயர்வைக் காட்டும்,
கலங்கரை விளக்காய் நிற்பாள்!
வல்லமை வளர்க்க என்றும்,
வலிகளைத் தாங்கச் சொல்வாள்!
செல்வழி தவறாக் கொள்கை,
செழித்திடச் செய்யும் தங்கம்!
தொல்லியல் தமிழாம் பண்பைத்,
தொடர்ந்திடச் சொல்லும் நல்லாள்!

கிண்ணியா சபீனா



# எஞ்சிய வாழ்வு

அமுத கடல் எழுந்து
குமுத குளம் விரிந்து
கமுகு களம் நுழைந்து
கனகு மலை மறையும் ஞாயிறு..

கண்டு விழி கயல் நழுவ
வண்டு நிற முகில் தழுவ மலர்
தண்டு என புவி சுழல பகல்
உண்டு மலரும் திங்களில்..

கொஞ்சும் வளை வஞ்சியரின்
கெஞ்சும் விழி மிஞ்சு மொழியில்
கொவ்வைப் பழம் தோற்கும்
செவ்வாய் சிந்துமது முத்தம்
நஞ்செனினும் நாவினிக்கும்..

சஞ்சல வாழ்வெனினும்
தஞ்சமென வந்து உயர்
நெஞ்சகம் நிறைந்தாரின்
அஞ்சுக வார்த்தையில்
அகமகிழ்ந்திருத்தலே
எஞ்சிய வாழ்வின்
இன்புற்றிருத்தலாம்..

கமல. அருள் குமார்.

தொடர் 1



எழுத்தாக்கம்

**பாத்திமா நளீபா**

# சிரிப்பால் மறைத்த சோகம்

கணவன் - பாரிஸ்
மனைவி - ஸைனப்

கணவனின் குணம் எவ்வாறு எனின்

- வேலை செய்வதில் கெட்டிக்காரன்
- துடி துடிப்பானவன்
- அன்பானவர்

முக்கிய விடயம் என்னவென்றால் அனைத்து விடயங்களையும் விரிவாக இங்கு விவரிக்க முடியாது என்பதால் சில விடயங்களை ரத்தினச் சுருக்கமாக கூறுகின்றேன்.

ஸைனபின் தாய் வெளிநாட்டு செல்ல காரணம் ஸைனபின் தந்தை நோய் வாய்ப்பட்டு காணப்பட்டார். குடும்ப சூழ்நிலை காரணமாக தாய் வெளிநாட்டில் வேலைக்கு செல்ல காரணமாகிறாள். தன் கடன் சுமைகள் குறித்தும் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் இரவு நேரத்தில் தனிமையில் அழுது புலம்புவது வழக்கம்

ஓர் நாள் இரவு

ஸைனப் :- உம்மா என்ன பண்றீங்க இருட்டுல லைட் கூட போடாம (மரீனாவின் காதுகளுக்கு ஜைனம் பேசிய வார்த்தைகள் எட்டவில்லை) மீண்டும் உம்மா என்ன பண்றீங்க ரொம்ப நேரமா பேசுற விளங்கல்லயா?? என்று லைட் ஒன் பன்ன மரீனா ஆழ்ந்த சிந்தனையில் இருந்து வெளிவந்தாள்.

மரீனா :- என்ன. நீ தூங்கல்லயா டைம் பாரு ரெண்டு மணி இந்த நேரத்தில தூங்காம என்ன பன்ற. போய் தூங்கு என விடாமல் பேசினாள் மரீனா.

ஸைனப்:- மரீனாவை நெருங்கிச் சென்று ஏன் உம்மா அழுறீங்க வாப்பா அடிச்சாறா என கேட்டாள்

மரீனா :- இல்ல என்று கூறி (மீண்டும் அழுதாள்)

ஸைனப் :- என்ன அப்படி இல்லாட்டி ஏன் அழுறீங்க...

மரீனா:- (புலம்ப ஆரம்பித்தாள்)

கடன் கடன் எண்டு வாழ்க்க இப்படி போகுது இப்படி போனா குடும்ப நில என்னவாகும் தம்பி தங்கச்சீட படிப்பு செலவு ஒன்னோட படிப்பு செலவு மூனு நாலு வருஷம் கழிச்சு ஒனக்கு கல்யாணம் பேசணும்னு சொல்லி அழுது புலம்புவது ஸைனபை மிகவும் வாட்டியது.

ஸைனப் :- சரி உம்மா அழாதீங்க நான் வேணும்னா ஸ்கூல் போகாம தம்பி தங்கச்சிகளை பார்த்துக் கொள்றன். நீங்க வெளிநாடு போய் வாங்க உம்மா அப்ப எல்லாம் சரியாகிவிடும்.

(மரீனா எதிர் பார்க்கவில்லை இந்த வார்த்தைகள் ஸைனபிடமிருந்து வரும் என்று. அவள் ஒரு நிமிடம் திகைத்து நின்ற நிலையில் ஸைனபை வாரி அணைத்து முத்தமிடுகிறாள். என்ன இருந்தாலும் ஒரு தாயின் கண்ணீருக்கு முன்னாள் நம் ஆசைகள் தூசு போன்றது. ஸைனபின் கல்விக்கனவு கேள்விக்குறி யாக்கப்பட்டாலும் தன் தாயைத் திருப்திப் படுத்திய அவள் மனம் அனைத்தையும் அடைந்தது போல் மகிழ்ச்சி கொணாடாள்)

காலங்கள் பல உருண்டோடின. தாய் வெளிநாட்டில் வேலைக்கு செல்கிறாள் குடும்ப சூழ்நிலையும் சாதாரண நிலைக்கு கொண்டு வரப்பட்டது. ஸைனபின் திருமணம். திருமண வாழ்க்கை குறித்து முன்னைய பதிவில் கூறினேன்.

ஆம், கணவனின் அந்த குழந்தையின் பெயர் முஹமட். ஆண் குழந்தை இரண்டு வயது நிரம்பியவன். ஸைனபுக்கு அந்த குழந்தையின் மேல் அதிக அளவில் பாசம். முஹம்மடுக்கும் அவள் மீது அன்பு அதிகம் அவன் ஸைனபை உம்மா என்றே அழைப்பான். அவளும் தான் பெற்ற பிள்ளை போல் அவன் எந்த வித விதமான அலுப்பு சலிப்பு இன்றி வளர்த்தாள்.

உங்களுக்கு தோன்றும் இவ்வளவு பாசம் வைக்க ஒருகுழந்தை இருக்கும் போது அதுவும் சிறுவயதில் இருக்கும் போது எதற்காக இன்னும் ஒரு குழந்தை எதற்காக என்று. நிச்சயமாக ஸைனபிற்கு இது முதல் திருமணம். எப்படியும் அவளது வீட்டிலும் சரி கணவன் வீட்டிலும் சரி நிச்சயமாக குழந்தை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். அது புதிதாக கூறவேண்டிய ஓர் விடயமல்ல.

பல மாதங்கள் உருண்டோடின ஸைனபின் பிரசவ நாட்கள் நெருங்க பிரசவ வலி ஏற்பட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டு இருந்தால். அல்ஹம்து லில்லாஹ் சுகப்பிரசவத்துடன் ஓர் அழகிய பெண்பிள்ளையை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்துகிறாள். முதல் முறையாக தன் வாழ்வில் உச்ச கட்ட மகிழ்ச்சியில் அவள். சில நாட்கள் கழித்து வீடு திரும்பினாள் வீட்டில் அனைவரும் அவளை வரவேற்க காத்திருந்தார்கள். முஹமட் தான் தாயைக்கான ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருந்தான். அனைவ ரும் அவளை அன்புடன் வரவேற்கி றார்கள்.

அவளும் குளித்து விட்டு அறைக்குள் செல்ல முஹமட் தங்கையை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

ஸைனப் :- முஹமட் ஓடி வாங்க ஓடி வாங்க உம்மாகிட்ட என்று கூறிய தாமதம் ஓடிச்சென்று அவளைஅணைத்துக் கொள்கிறான். அவளும் கட்டி அணைத்து முத்தமிடுகிறாள். உம்மாவ தேடி நீங்களா. யாரு புள்ளக்கி ஏசினாங்க. சோறு தீண்டீங்களா வாய காட்டுங்க என்று கேட்க அவனும் தன் மழலை மொழியில் ஏதேதோ சொல்லி சுற்றி உள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்து விடுவான் அவளும் அவனை கொஞ்சித்தீர்த்தாள். அவள்

தாயின் வீட்டில் இருப்பதால் இரு குழந்தைகளையும் வளர்க்க மிகவும் உதவியாக இருந்தது. அவளைப் போன்றே அவள் உறவுகளும் முஹம்மட் உடன் அதீத பாசம். கணவனின் முதல் குழந்தை என்று யாரும் அவனை வேறாக பார்ப்பதில்லை அவ்வளவு அன்பும் பாசமும் அவனுக்கு கிடைத்தது.

எவ்வளவு தான் அவள் மகிழ்ச்சியாக இருந்தாலும் ஏதோ ஒரு விதத்தில் அவள் மனம் சோகத்தில் ஆழ்த்து காணப்பட்டது. அவ்வாறு அவளை ஆட்கொண்ட விடயம் தான் என்ன?

தொடர் 2



## சிரிப்பால் மறைத்த சோகம்

பிரசவம் என்பது பெண்களுக்கு மறுஜென்மம். அந்த காலப்பகுதியில் ஒவ்வொரு பெண்ணும் நிச்சயமாக தன் கணவனின் அரவணைப்பையும் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள மிகவும் தவிப்புடன் இருப்பார்கள் அதுவும் முதற் குழந்தை கூறவா வேண்டும்... நிச்சயமாக ஸைனபின் மனநிலையும் அவ்வாறே இருந்தது. தான் கர்ப்பமாக இருந்த அந்த காலப்பகுதியில் தன் கணவனின் அன்பு அரவணைப்பு ஆறுதல் எதுவும் அவளுக்குக் கிடைக்கவில்லை.. பிரசவத்திற்கு பின்னரும் அவ்வாறே தொடர்ந்தது.

அவளது மனநிலை எவ்வாறு எனின்

'தவிக்கும் ஒரு நெஞ்சம்
தடுமாறியது என் நெஞ்சம்
என் காலடி கெஞ்சும் உன் வருகைக்காக'

இது தான் அவளது கவலையா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை. ஸைனபின் குணாதிசயங்களில் முக்கிய மாக பொறுமை காப்பதில் சீதேவி. தன் அன்பானவர்களுக்காக எதையும் துணிந்து நிற்பவள்.

அவளது திருமணத்திற்கு முன். இத் திருமணம் குறித்து சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஸைனப் நீ எதுக்கு இப்படியான ஒரு ஆள கல்யாணம் முடிக்கபோற அதுவும் கல்யாணம் முடிஞ்சு ஒரு புள்ள இருக்கு ஒனக்கு வேற மாப்புள கிடைக்கல்லயா. அவர்ட கேட்ட பழக்கம் இருக்குண்டும் சொல்றாங்க நீ இது எல்லாம் தெரிஞ்சு தான் இப்படி சொன்னியா? என்று கேள்விகளை அடுக்கினார்கள். அவள் சில விடயங்கள் குறித்து அறிந்திருக்கவில்லை. ஆனால் மனதில் எண்ணிக் கொண்டாள். என்ட உம்மா வாப்பா தேடிப்பார்த்து தானே பேசி இருப்பாங்க என்று நினைத்து மனதை தளர விடாமல் பேச்சை திசை திருப்பினால்.

என்றாலும் சில விடயங்கள் அவளது மனநிலையை அடிக்கடி யோசிக்க வைக்கும். அப்படி அவர்கள் கூறுவது போல் இருந்தாலும் கல்யாணம் முடிஞ்சு சரி பண்ணலாம் என்று தனக்கு தானே ஆறுதல் கூறிக் கொள்வாள்.

ஹ்ம்ம் ஹ்ம்ம்..

அவர்கள் கூறியது சரி தான் ...

உண்மையில் அவளது கணவன் சிகரெட் மற்றும் மதுபான பாவனை

கொண்டவர். இது தெரிந்த நொடிகளில் இருந்து அவள் கொண்ட வேதனைகளுககு அளவே இல்லை.

இது குறித்து வீட்டுல எப்டி பேசுறது. அவங்க இது தெரிஞ்சு கஷ்டபடுவாங்க வேணாம் பாவம். கொஞ்ச நாள் போகட்டும் தப்ப உணர்ந்து கொள்வார் என்று தனக்கு தானே ஆறுதல் கூறிக் கொள்வாள்.

ஒவ்வொரு இரவுகளும் மிகவும் மோசமாகவே இருந்தது மது அருந்திவிட்டு அவன் இடும் கூச்சல் சத்தம் அவளை மிகவும் வாட்டியது. குடும்பத்தினரிடம் இருந்து இதனை மறைக்க மிகவும் போராடினாள்.

அன்று இரவு புதன்கிழமை. நல்லிரவைத் தாண்டி 3மணி அளவில் இருக்கும். பாரிஸ் மது அருந்திவிட்டு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். ஸைனம் சிந்தனையில் ஆழ்ந்து ஒரு மூலையில் இருந்தாள்.

பாரிஸின் தொலைபேசியில் அழைப்பு வருகிறது..

*Ring tone*

‘ என்னை கொல்லாதே...
தள்ளி போகாதே...
நெஞ்சை கிள்ளாதே...
கண்மணி...

சொன்ன என் சொல்லில்...
இல்லை உண்மைகள்...
ஏனோ கோபங்கள் சொல்லடி...

கண்ணை மூடி கொண்டாலும்...
உன்னை கண்டேன்...
மீண்டும் ஏன் இந்த ஏக்கம்...
வெள்ளை மேக துண்டுக்குள்...
எழும் மின்னல் போல்...
எந்தன் வாழ்வெங்கும் மின்னல்...

என் இதழ் மேல் இன்று...
வாழும் மௌனங்கள்...
என் மனம் பேசுதே...
நூறு எண்ணங்கள்...
சொன்ன சொல்லின் அர்த்தங்கள்...
என்னுள் வாழுதே...
தூரம் தள்ளி சென்றாலும்...
உயிர் தேடுதே...

ஆசை வார்த்தை எல்லாமே...
இன்று கீறலாய்...
எந்தன் நெஞ்சின் ஓரத்தில்...
பாய செய்கிறாய்...
என்னுள் நீ வந்தாய்...
இன்னும் வாழ்கின்றாய்...
உந்தன் சொல்லாலே...
தூரம் உண்டாக்கினாய்... ‘

அந்த வரிகள் அவளை இன்னும் சிந்தனையில் ஆழ்த்தியது. திடீரென்று நினைவு தெளிந்து *cal Atten* பண்றாள்.

*Hello....*
*Hello..*
*Hello....*

யாரும் பேசவில்லை. அழைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் ஒலிக்கின்றது...

எதிர் பக்கத்தில் இருந்து ஒருவர் பேசு கிறார். அதிர்ச்சியில் திகைத்து நிற்கிறாள்..

மின்சாரம் அதே நேரத்தில் துண்டிக்கப் படுகிறது...

நடந்தது என்ன? அழைபேசியில் அழைத்த நபர் யார்?

தொடரும்...

# அற்புதமான உளவியல் மற்றும் மன தந்திரம் !!!






அடுத்த முறை நீங்கள் வேலையிலோ அல்லது வீட்டிலோ விருந்து வைக்கும்போது, இதை முயற்சி செய்து நீங்களே பாருங்கள்.

முதல் முறை, இந்த எளிய/வழக்கமான நாப்கின் களை விருந்தினர்கள் பயன்படுத்துவதற்காக வைக்கவும்.

இந்தநாப்கின்களைஅவர்கள்தவறாகப்பயன்படுத்து வதைப் பாருங்கள். எப்படி வேண்டுமானாலும், எந்த எண்ணில் வேண்டுமானாலும் வெளியே இழுக்கவும். பெரும்பாலான மக்கள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றை எடுத்துக்கொள்வார்கள். இந்த நாப்கினைக் கவனிப்பு இல்லாமல் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு தேவைக்கு அதிகமாக எடுப்பார்கள்.



இரண்டாவது முறை, படத்தில காட்டியபடி ஒன்றை பயன்படுத்தவும். முந்தைய நாப்கினுடன் ஒப்பிடும்போது இங்கு உண்மையில் ஆடம்பரமாக எதுவும் இல்லை. அதே நாப்கின்தான் ஆனால் வித்தியாசமான பிரகாசமான நிறம் மட்டுமே !

இந்த முறை வித்தியாசத்தைக் கவனியுங்கள். மக்கள் அவற்றை சிறப்புடன் நடத்துவார்கள், ஒரு ஒன்றை மட்டுமே கவனமாக இழுப்பார்கள். மேலும் அதனை அதிக நேரம் பாதுகாத்து வைப்பார்கள்.

Karthika Ravi



ஏதாவது வித்தியாசமாகவோ அல்லது பழகியதை விட அதிநவீனமாகவோ தோன்றும்போது மக்கள் தானாகவே முக்கியத்துவத்தை இணைத்துக் கொள்கிறார்கள்.

நன்றாக உடையணிந்தவர்கள், நடந்து கொள்ப வர்கள் பொதுவாக சிறப்பாக நடத்தப்படும் விதமும் இதுதான்.

வித்தியாசமாக, நல்ல முறையில், சிறப்பான முறையில் நீங்கள் நடத்தப்பட வேண்டுமென்றால் உங்களுக்குள் மாற்றம் தேவை.

# இப்படியே நாமிருந்தால்!

கொண்டிருந்த செல்வமெலாம் கொள்ளையிங்கு போனதுபார்
கண்டிருக்கும் வேளையிலும் கண்முன்னே கொள்ளையன்றோ
அண்டை நாட்டுக்காரனுக்கு அகலவழித் திறந்துவிட்டு
திண்டிலின்று தூங்குகிறோம் தினந்தினமும் புலம்புகிறோம்!

தொழிற் போச்சு தொன்மை கலையும் போச்சு
விழியென்று நாம்கொண்ட விவசாயம் போச்சு
கழிவள்ளும் குத்தகைக்கும் கையேந்தி நிற்கின்றான்
அழிவடையும் நம்மவர்க்கு ஆறுதலாய் ஒன்றுயிலை!

அங்காடித் தொட்டடுத்து அடுமனை உற்பத்தியும்
தங்கையில் கொண்டுவிட்டான் தவிக்கநமை விட்டுவிட்டான்
பங்காளி யாரேனும் பாவித்து இருந்தாலும்
இங்கிருந்து பொருள்போகா இந்தியமும் வளர்ச்சியுறும்!

குண்டூசி ஊக்குமுதல் கொத்துமல்லி காய்கறியும்
அன்றாடத் தேவையுறும் அரிசிப் பருப்புவரை
எண்ணைப் புளிகடுகு ஏலம் கிராம்பு
தன்வணிகப் பட்டியலில் தவறாது சேர்த்தானே!

இப்படியே போகுமெனில் ஏழ்மையுறும் இந்தியமும்
அப்படித்தான் ஆகுமெனில் அடிமைநாம் உலகளவில்
எப்படியோ போகட்டும் என்றிருந்தால் நாளையிங்கு
அப்பன்சுப்பன் அண்ணனெலாம் ஆண்டியென அலையக்கூடும்!

பொன்மணிதாசன்

# வெண்பா போட்டி (பயணம்)

போட்டியின் கால அளவு : ஆகஸ்ட் 01 முதல் 12 வரை 2024



பேருந்தில் வந்தவொரு பூங்காவே உன்பார்வை
பேருந்து தல்என் பொழுதுக்கும் – நீரின்றி
போனாலும் நீந்துகின்ற மீன்தான்நான் நீயின்றி
போனாலோ ஆவேனே வீண்

ஞால இரவிச்சந்திரன்

.

மலரே உனைநான் மனதில் நினைந்து
பலநாளாய் வாடுகிறேன் பாராய் – பலமெனக்
காதலைநீ தந்திட்டால் காலமெலாம் காத்திடுவேன்
ஆதலால் சொல்துணிந்து ஆம்.

குளோரிசக்தி, கரூர்.

.

காமம் எனைத்தீண்ட காதலால் நோயுறவும்
சாமத்தில் உன்நினைவு சாகடிக்க – பூமகள்
முள்ளாகக் குத்திட முற்றிலும் வீழ்ந்தேனே
கள்ளியே நீயறிவாய் காண்.

அழகிய மானே அகத்தில் புகுந்து
மழலை மொழிதான் மணமாய் – கழலும்
ஒலித்திட கண்மணி யுன்றன் வளையல்
மெலியுமடி ஏற்பாயே மேல் .

காதலும் தீயாகிக் கட்டுடலைப் பற்றிட
நோதலும் இற்றைநாள் நோகடிக்க – சாதலும்
வேண்டாமே என்னுயிரே வேண்டுவேன் நின்றனின்
மாண்பான காதல் மலர்ந்து .

ஒருதலைக் காமம் ஒருமித்துக் கொல்ல
இருதலைக் கொள்ளி எறும்பாய் – மருட்கை
விடுத்து மலர்வாய் வியன்கூந்தல் மேகப்
படுக்கை உறக்கம் பறந்து .

அணைப்பாயே ஆருயிரே ஆரத் தழுவி
இணைப்பாயே மார்பில் இறுக்கிக் – கணையாழி
உன்றனுக்கு யாந்தருவேன் உத்தமனும் நானடி
என்முகம் பாராயோ என்று .

இளம்பெண் ஒருத்தி இதயத்தில் நின்று
விளம்புகின்ற காதல் விதியால் – உளத்தை
உருக்கிட ஓடிவா உன்னெழில் தீண்ட
விரும்புகின்றேன் காளை விரைந்து .

தூக்கம் மறந்தேன் துயிலெழத் துன்பமும்
ஏக்கத்தால் வந்தே எனைக்கொல்ல – வாக்கு
தருவாயோ வெண்மதிநீ தாவி அணைக்க
கரும்பாய் இனிக்குமடி காண் .

அச்சம் தவிர்ப்பாய் அகத்தில் இணைந்துநீ
இச்சையுடன் முத்தத்தை இன்னமுதே – உச்சமாய்த்
தந்திட உன்மத்தம் தத்தையால் மேவிட
செந்தேன் பருகுவேன் சென்று .

சென்ற விடமெல்லாஞ் செல்லமே உன்நினைவால்
வென்ற உலகினின் வெற்றியை – என்றும்நான்
தேடுகிறேன் சொல்லிடத் தேகமும் வாட்டுதடி
ஓடுகின்ற நெஞ்சத்தின் ஒப்பு .

ஒப்பில்லாக் காதல் ஒருதலை யாகினால்
எப்படி யானும் எடுத்துரைப்பேன் – செப்பிடு
வித்தையெல்லாம் நானறியேன் விற்புருவம் கொல்லுதடி
அத்தை மகளே அறி .

சரஸ்வதி பாஸ்கரன்

.

உன்னோடு வாழ்வதற்கே உள்ளிருக்கும் வேட்கையில்
பின்தொடர்ந்து வந்தபின் பித்தானேன் – புன்னகையும்
கண்ணும் புலரவைக்கும் காதலே நின்பொருளைப்
பண்ணிசைத்துச் சொல்வாயோ பின் .

துள்ளும் பருவம் துடிப்புடன் ஓர்வகுப்பில்
பள்ளியில் நாமும் பயின்றோமே – உள்ளம்
அலைபாய்ந்தும் ஊரார் வகுப்பென்னும் வாதம்
கலைத்தனர் காதல் கனவு

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

மனதில் நினைவுகள் மங்கா திருக்க
கனவில் எனக்குள் கவியாய்க் – கனன்று
சனங்கள் உலகினில் சங்கதி பேச
வினவ விடயமே வீண்.

இந்திராணி தங்கவேல்.

.

சின்னவய சில்நீ திறந்தகத வோரமாக
நின்றென்னைப் பார்த்த நினைவெல்லாம் – இன்றும்
மலராத பூக்களாக வாழ்ந்துகொண்டே போகும்
நிலவேயென் அன்பாக நீ/

ஸ்ரீ தரன்

.

விழியினில் நீநுழைய விட்டிலென ஆனேன்
மொழியை இழந்து முடங்கி – வழிகள்
மறந்துநான் வாடிடுமுன் வந்திடு இல்லேல்
துறவியாய் போவேன் துணிந்து

உணவு மறக்க உறக்கம் தொலைக்க
கணங்கள் வலியில் கடக்க – மணக்கும்
நினைவால் நிழலாய் நிதமும் தொடர
மனைக்கு வருவாளோ மாது

கைக்கிளை கொண்டுனைக் கைத்தலம் பற்றிட
வைக்கின்ற அன்பினால் வையத்தில் – தைக்கின்ற
மாதவனைக் கூடிடவே மாதவள் நள்ளுதலால்
ஆதவனாய் காண்பேனே ஆங்கு

ஜனனி

.

சொப்பனத்தில் கண்டுவிட்டேன் சுந்தரி உன்னையே
அப்பாவின் கட்டளைகள் அத்தனையும் – அப்படியே
விட்டுவிட்டேன் கண்ணே விடையினைக் கூறாயோ
கட்டுண்டேன் உன்விழியினில் காண்

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

.

வெண்ணிலவு போன்றவளே வீசுகின்ற காற்றினிலே
மண்வாரிங் கொட்டுதடி மான்விழியே... பெண்ணவளே
உன்னினைவால் வாடுகின்றேன் உன்மனத்தில் நல்லிடத்தை
என்று தருவாய் இயம்பு.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.



கண்ணாடி போட்ட கருப்பான என்னைப்போய்ப்
பெண்ணெங்கே பார்க்குமென பேதலித்தே – உண்மையிலே
காதலைப் பூட்டிவைத்தே காத்திருந்தக் காதலனைத்
தூதனாய் ஆக்கியதேன் சொல்?!

செ. இராசா

.

எண்ணற்ற ஏக்கங்கள் என்நெஞ்சில் கண்மணியே!
வண்ணக் கனவுகள்! வாடுகிறேன் – பெண்ணே
மனந்திறந்து பேசு மகிழ்வேனே நானே
நனவாகும் என்றே நவில்.

ஓசூர் மணிமேகலை

.

மீசை வளருமுன்னே மென்கொடியே உன்னிடத்தில்
ஆசை வளர்ந்ததடி அந்நாளில் – நேசத்தைச்
சொல்லவுன் முன்வந்தேன் சொல்லுமுன் அச்சத்தால்
சொல்லாமல் பின்வந்தேன் சோர்ந்து.

ஜாய் சத்தியா

.

பலநாளாய்க் காத்திருந்து பாவையுனைப் பார்க்க
சிலநொடி புன்னகை சிந்தி – விலகுகிறாய்;
எப்பொழுது வந்துநீ என்னிடம் பேசுவாய்?!
தப்பாமல் சொல்லொன்று தா

மலர்மைந்தன், கல்பாக்கம்

.

இடையெழி லாலெனக் கின்னல் விளைத்து
விடையிலாக் காதலாய் வீற்றாய் – கொடையாய்
எனக்களித்தாய் ஏமாற்ற ஏக்கத்தை நீயும்
மனக்கண்ணால் சொல்லியுளம் மாறு !

பாவலர் கோவதன்

.

நண்பனின் தங்கையென்னை நாடுதல் தப்பென்று
கண்படா தூரம் கடந்துசென்றார் – வெண்படர்ந்த
கூந்தலுடன் என்மனத்துக் கோவலனைக் காண்பதற்கே
ஏந்திநின்றேன் என்னுயிரை யே!

எம்.ஆர்.தனசேகரன், ரவாங், மலேசியா.

.

சொல்லாம லேங்கிச் சுடுமிதயம் ஆற்றிடப்
பொல்லாத கண்ணோக்கிப் பொங்கியெனைக் – கொல்கின்ற
உள்ளூறும் ஆசையினை உள்ளபடி நாவுரைக்கத்
தள்ளாடிப் போனேன் தவித்து

உற்றெனைக் காண்பாளோ? உள்வாங்கிக் கொள்வாளோ?
நெற்றி சுருக்கி நெருங்காது – பற்றின்றி
வெற்றென எண்ணி விலகிச்செல் வாளோகைப்
பற்றிநகைப் பாளோகண் பார்த்து?

ஆனந்த் சுந்தரராமன்

.

அன்பே அமுதே அழகின் மணியேதான்
உன்பால் என்றன் உயிரையும் வைத்ததால் – கண்போலக்
காத்திடுவேன் காதலைக் கண்ணாக ஏற்றிடுஏ
மாத்திட மாட்டேன் மறுத்து .

கவிஞர்.அ.முத்துசாமி, தாரமங்கலம் .

.

கள்ளமற்ற நெஞ்சத்தில் காதல் கணையெறிந்தாள்
உள்ளத்தைக் கிள்ளி உணர்வினை – அள்ளினாள்
அப்பாவி நெஞ்சை அழச்செய்து சென்றாளே
எப்போ வருவாள் எழில்?

வா.சண்முகம்

.

காதல்தேன் என்றேன்நான் காஞ்சிரங்காய்த் தந்தாயேன்?
சாதலில்லை காதலின் சாதனை – சோதனை,
சூழ்ச்சிகள் வந்துநமைச் சூழ்ந்தாலும் வெல்வோமே
வாழ்ந்துநாம் காட்டுவோம் வா!

பசுங்கிளி மணியன்

.

உள்ளமதில் வந்துதித்த உண்மையான காதலைத்
துள்ளலுடன் சென்று துணிந்துசொன்னேன்! – எள்ளலுடன்
பேசாமல் நின்றவன்கண் பேசும் நொடிவரை
பேசா மடந்தையே நான்.

மாலதி. திரு

.

மாலை வெயிலெதிரெ வான்மழை நீர்பூத்தால்
கோலவிற் தோன்றுசிறு கோலம்போல் – வாலைப்
பருவத்தில் கண்சிமிட்டிப் பார்க்கையிலே நீங்கும்
ஒருதலைக் காதலும் ஓர்

வள்ளி முத்து

.

நில்லாம லென்மனது நீள்வலியா லேங்கியழச்
சொல்லாமல் சென்றா ளொருநொடியில் – கள்ளியவள்
வில்லா யுடைத்தவள் வீணாக்கிப் போவாளோ?,
கொல்லாமல் கொன்று புதைத்து

சுதேன் சுதேகி

.

தொட்டுவிட ஏங்கும் தொலைதூர மேகமாய்ப்
பட்டுந்தன் பேரழகைப் பார்த்திருக்க – வெட்டிடுப்பு
வார்ப்பினைக் கண்டதும் வார்த்தையும் இல்லாமல்
மூர்ச்சை யடைந்தேனுன் முன்

சொட்டும் மழையும் சுடுகிறது நெஞ்சமோ
தொட்டு நடக்கத் துடிக்கிறது – விட்டு
விலகாத உன்பார்வை விண்ணோடு சேர்க்க
உலகம்நா னானேன் உருண்டு

மாண்பிழந்து என்காதல் மண்டியிட்ட(து) உன்னிடமே
காண்டினை ஏற்றாமல் காதலியே – வேண்டியதைத்
தந்துவிட வீணான தர்க்கத்தை விட்டுவா!
சிந்து படிக்கலாம் சேர்ந்து

என்றுனைக் கண்டேனோ என்னன்பே அன்றுமுதல்
என்னுயிரும் உன்னோடு இணைந்ததே – என்றாவ(து)
என்நிலை நீயறிவாய் என்றநம் பிக்கையில்
உன்னைத் தொடர்கிறதென் ஊன்

ஊன்மெலிந்து போகிறது! ஒவ்வொரு நாளும்தான்
தேன்காய்ந்து தீய்கிறது! தேயாத – வான்நிலவே
வாராயோ வான்விட்டு வந்திறங்கி இன்முத்தம்
தாராயோ சொல்லிவிட்டு போ

வே.செந்தில்குமரன்

.

சந்தனத் தேன்கலசம் சாயாத கோபுரத்தை
முந்தானை மேகத்தால் மூடிவரும் – சுந்தரியே
ஆலய வாசலில் அன்பிற்காய் ஏங்குமென்
கோலத்தில் நல்லருளைக் கூட்டு !

பாவலர் கருமலைத்தமிழாழன், தமிழ்நாடு

.

மடித்துவைத்தக் காதல் மடலைத்தான் நீயும்
படிக்கத் தரமுயன்று பார்த்தேன் – விடிவும்
வரவில்லை மோகம் விடவில்லை தானே
விரக்தி யிலாழ்ந்தேனே விட்டு

தன்ராஜ் பாப்பணன்

.

பார்த்துதான் நாளாச்சு பாவிமனம் பித்தாச்சு
கார்த்திகை மார்கழியும் கண்டாச்சு – நேர்த்திக்
கடனெல்லாம் நேற்றே கழிச்சாச்சு புள்ள
உடன்வருமா காதல் உனக்கு

கவிதா சீனிவாசன்

.

எண்ணத்தில் நீயடி ஏக்கம் எடுத்துரைக்க
அண்டி வருவேன் அகன்றிடுவேன் – திண்ணிய
நெஞசமிலி பாவி நெருங்கி வருவேனா
வஞ்சியே உய்த்துணர்ந்து வா

இரா இரத்தினகுமார்

.

தூக்கம் இழந்தேன் துயருற்றேன் என்மனத்தின்
ஆக்கம் இழந்தேன் அறிவிழந்தேன் – ஏக்கமுடன்
காக்கும் பொழுதெல்லாம் காதலியே உன்நினைவே
தாக்கம் தணிக்குங்கண் தா.

கவிஞர் இரா.ச.பத்மநாபன், தஞ்சாவூர்

.

கண்ணுற்ற நாள்முதல் கண்ணுறக்கம் போனதே
எண்ணத்தில் நீதானே எப்போதும் – புண்படுமோ
என்றே பொறுத்திருந்தேன் என்காதல் நீயறிய
இன்றேனும் சொல்லிடுவேன் யான்

செல்லமுத்து பெரியசாமி

.

கண்டு மயங்கியேக் காதல் வயப்பட
பெண்ணின் மனமோ ஒதுக்கிட – மண்ணில்
அலைந்து முயன்றும் அவளோ வெறுக்கக்
கலைந்த ஓவியமாய்க் காண்

கல்லூரி வாழ்வில் கருவானக் காதலோ
சில்லாக நொறுங்கிச் சிதைந்திட – சொல்லாமல்
கல்லாகிப் பேதலித்து கலங்கித் திரிந்திட.
இல்லமே நிற்கும் இழந்து

கவிஞர் கவி நிலா மோகன் , தஞ்சாவூர்.

.

திருவிழாக் காலத்தில் தேவதையைக் கண்டேன்
ஒருகணம் நானே ஒழிந்தேன் – தெருவெங்கும்
தேடினேன் பெண்பூ தெரியவில்லை அங்குமிங்கும்
ஓடினேன் உள்ளம் உடைந்து.

தமிழ்க்கீரன், ஈழநாடு.

.

கல்லூரிக் காலத்தில் காதலித்தேன் தோழியை
வல்லூறு போல வலம்வந்தே – சொல்ல
கருவாயா நோக்கெலாம் காதலாடா என்றாள்
கருவில் கலைந்ததென்கா தல்.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

வண்டுண்ணாத் தேன்சிந்தி வாடுமென் தேகத்தைக்
கண்ணோக்கா தென்னவோ கட்டழகா? – தண்ணொளி
வீசி விழிகளில் விண்ணப்பம் நான்தந்தும்
வாசிக்கா தேனானாய் வாத்து!

.

கோவை லிங்கா

.

கொத்து மலர்களைக் கொண்டையில் சூடிய
வித்தகியை ஈன்றிட்ட வீரியத்தாய் – எத்திசையில்
யாரென்று கண்டிட்டால் யான்வந்து பெண்கேட்பேன்
கூர்விழியில் சொல்வாய் குறிப்பு.

வானதி சந்திரசேகரன்

( இரு விகற்ப நேரிசை வெண்பா )

செல்லும் வழியெங்கும் சேர்ந்திடும் கண்களுந்தான்
மெல்லமாய்க் கொன்றிடும் மென்விசமா – சொல்லாத
அன்பென்னைச் சுற்றி அழுத்த அழுகின்றேன்
அன்பனே கேளென் கதை.

கு. கமலசரஸ்வதி

உற்றறிந்து வா உயிரே !
(அந்தாதி – பதிகம்)

உன்னையே என்னுள் உயிராய் வரித்துள்ளேன்
முன்பின் துணையாய் முகிழ்த்தவள்நீ – என்றெண்ணிக்
காலம் கடக்கின்றேன் காதல் கனியாதோ?
கோல எழிலாள் குளிர்!.

குளிரில் வதைத்தல்போல் கொல்நினைவே நித்தம்
ஒளியாய் வளியாய் உணர்வாய் – தெளிவாய்
நிறைந்தாய் நிதியாய் நிழலின் அடியாய்
முறையாய் வரலென்றோ முன்?

முன்னாலே காணுங்கால் முள்போலக் குத்துகிறாய்
தன்னாலே என்னுள் தளிர்க்கின்றாய் – புன்னகை
தங்கம்போல் காணத் தகதகக்கத் தன்னாலே
பொங்கிவரல் எந்நாளோ பூத்து?

பூப்போல் மணக்கின்றாய் புல்லாங் குழலிசையாய்க்
காப்பாய் விளங்கும் கலம்போன்றாய் – பூப்படையாய்
என்மனம் எண்ணாமல் ஏனோ தவிர்க்கிறாய்
ஒன்றாகும் நாளை உரை.

உரைக்கும் பொருளானாய் உள்ளும் புறமாய்ப்
பரந்தென்னில் தானே படர்ந்தாய் – புரவிபோல்
எண்ணவான் மீதிலே எங்கும் இனிதுநாம்
மண்ணில் வரும்நாள் மதி.

மதியொளி நீயாய் மலர்அல்லி நானாய்
புதிய உலகில் புகுவோம் – விதிசமைப்போம்
ஓடி ஒளியாமல் உள்ளம் அறியாமல்
வாடி வதைக்காமல் வா.


வாழை வனப்பாக வண்டு மலராகத்
தாழை மணம்போலத் தாங்குவோம் – பாழகந்தை
விட்டு வருவாயா ? வேட்டாய்ச் சிதைப்பாயா?
பட்டறிந்து வந்தால் பழம்.

பருவப் பயிர்வளர்த்தாய்ப் பண்ணிசையாய்ப் பாய்ந்தாய்
கருவில் திருவாய்க் கனிந்தாய் – வருத்தவே
சிட்டாய்ப் பறக்கின்றாய் சிந்தை எரிக்கின்றாய்
பட்டாசுப் போலேன் பகர்.

பண்பால் நிலவாய்ப் படர்வான்மண் ஆழியாய்
எண்ணில் விரிந்தே இருப்பானாய் – மண்ணவளே
தாமரை நீராகத் தானேன் இருக்கின்றாய்?
நாமலர்ந்து வாடி நயந்து.

நகக்கன்று போலும் நகையணி போலும்
பகரும் படிவாழப் பற்று – தகவில்லார்
உற்ற பொருளாய் உலகத்தில் ஏனின்னும்?
உற்றறிந்து பார்ப்பாய் உனை.

படைக்களப் பாவலர்



# வெண்பா போட்டி (பயணம்)

## போட்டியின் கால அளவு : செப்டெம்பர் 01 முதல் 12 வரை 2024

இம்மாத போட்டி.....

.

நாம் அன்றாடம் சாப்பிடும் சைவ மற்றும் அசைவ உணவுகளில் உடலுக்கு தேவையான நிறைய மருத்துவ குணங்கள் உள்ளன.....
அவற்றில் ஏதேனும் ஒரு உணவைப் பற்றியும் அதன் மருத்துவ குணங்கள் பற்றியும் ஒரே வெண்பாவில் சொல்வதே இம்மாதப் போட்டியின் விதியாகும்.

செய்யுளின் தலைப்பாக நீங்கள் தேர்ந்தெடுக்கும் உணவின் பெயரை வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்....




இதோ எ-கா வெண்பா

**நண்டு ரசம்**

நில்லா சளியிருந்தால்; நீங்காத காய்சலுற்றால்;
கொல்லும் பசியின்மைக் கூடிவிட்டால் - நெல்வயலில்
கண்டு வளைபிடித்துக் கார மிளகிட்ட
நண்டுரசம் தாரும் நலம்.

பொதுவான விதிகள் : -

ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :-
தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

https://www.facebook.com/profile.php?id=100030084520602

# அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்பதைப் போல
# பாஷோவும் பல நூறு சீடர்களும் இருந்தார்கள்

கவிஞர் பாடலாசிரியர்
Ilango Krishnan

முன்பு ஒரு காலம் இருந்தது. தமிழில் கவிதை எழுதும் கூட்டம் தனித் தனித் தீவுகளாக இருந்தன. நமது ஏழரைக் கம்பன்கள், எட்டே முக்கால் ஒட்டகூத்தன்கள், வெண்பா புலிகள், வண்ணச்சரபங்கள் எல்லாம் தனியாகத் தமிழ்க் கம்பு சுழற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என தமிழ் மன்றம், பூங்காற்று, சங்கப்பலகை போன்ற இதழ்கள் இருந்தன.

இன்னொரு பக்கம் ஓ கவிஞர்கள் கூட்டம்...

ஓ இளைஞனே, ஓ மனிதனே... ஓ உலகமே என எப்போதும் புரட்சிக்கான வைப்ரேஷன் மோடில் தனித் தவில் வாசித்துக்கொண்டு இருந்தார்கள். அவர் களுக்கு ஆகாயப்பட்சி, அன்னப்பறவை, தமிழ்கோட்டான் போன்ற இதழ்கள் இருந்தன.

இன்னொரு பக்கம் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்பதைப் போல பாஷோவும் பல நூறு சீடர்களும் இருந்தார்கள். ‘தொட்டுப்பார்த்தேன் / சூடாயிருந்தது / ஏ.சி மெஷின்... என்றும் பேட்டை ரவுடிக்கு / பிடித்தது / சாது பீடிகள் என்றும்... காண்பதை எல்லாம் ஹைக்கூவுக்குள் போட்டு திணித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் கையில் சிக்கிய உலகம் மூன்று வரிகளுக்குள் மூச்சுத் திணர, கண் பிதுங்க அமர்ந்திருந்தது. இவர்களுக்கும் நூலாம்படை, கரண்டு கம்பிகள் போன்ற இதழ்கள் இருந்தன.

இன்னொரு பக்கம் சுத்த ரத்த நவீன இலக்கியவாதிகள் தாம்தான் நயம் லேகிய வியாபாரிகள் என இசப் பேச்சில் தமிழ் ரசம் வடித்துக்கொண்டிருந்தார்கள். அரவங்களின் நாவில் பிங்கல மொழி பயிலும் கார் உவா காலங்களில் பிரக்ஞையின் தைல வண்ண நினைவுகளில் இருந்து தங்கள் பச்சையத்தை உருவாக்கிக்கொண்டிந்தார்கள்.

இவர்களுக்கு இடையில் நாட்டு மாட்டுக்கும் ஜெர்ஸிக்கும் கிராஸானது போல சுத்த ரத்த நவீன இலக்கியத்துக்கு புதுக்கவிதை பார்ட்டிகளுக்கும் இடையில் ஒரு பிண்டம் பிறந்தது. மயிலின் கழுத்து, பசுவின் கால், சிங்கத்தின் தலை என விசித்திர தோற்றத்தில்... இவர்கள் டைரி யில் நேற்று சினிமாவுக்குப் போனேன். அவள் வரவில்லை என்பதையும் ரேஷன் கடையில் அரிசி இல்லை என்பதையும் இணைத்து ரசபாச கவிதை வடித்தார்கள். மறுபுறம் நீ... நீ... என தன் நண்பனை பகைவனாய் பாவித்து சிகரெட் கொடுக் காத சண்டையை தத்துவ விசாரமாக்கி னார்கள்.

இந்த நல்ல பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் கொலைவெறியில் இருந்தார்கள். மரபின் ஆணிவேரில் பழுத்த தமிழ்

பழங்கள் புதுக்கவிதை கூட்டத்தை வெஜிடபிள் பிரியாணி என்றும் கோவேறு கழுதை என்றும் வைதுகொண்டிருந்தது. புதுக்கவிதை எழுத வந்த பேனாவை பல்லில் கடித்து போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் கவி பிரம்மாக்கள் நவீன லேகிய கோஷ்டியை பூர்ஷ்வா என்றும் அராஜகவாதிகள் என்றும் புரட்சி மோடில் எகிறினார்கள்.

இருப்பதிலேயே சாதுவான ஹைக்கூ கோஷ்டி பெரும்பாலான சமயங்களில் புதுக்கவிதை கோஷ்டியுடன் ஒட்டிக் கொண்டு நவீன கவிதையை நையப்புடைப்பதும், பேனா நட்பில் பேணிய நட்பை காதலாக்க கடும் தவம் இருப்பதுமாய் இருந்தார்கள்.

சும்மா இருக்குமா நவீன கவிதை? தங்களது கிரந்தம், ஓட்டம், எட்டாம் நோக்கு போன்ற இதழ்களில் புதுக்கவிதை பிரம்மாக்களின் தலையைக் கிள்ளி தவில் வாசித்தார்கள். தாங்கள்தான் கவிகள் என மொழிப்பூணூல் பூண்டார்கள்.

பிறகு ஒரு காலம் வந்தது முகநூலில் தமிழின் தனித்துவமான நவீன கவிஞனும் வண்ணச்சரபமும் புன்முறுவலுடன் சந்தித்து பரஸ்பரம் லைக் மொய் செய்யத் தொடங்கினார்கள்.

இலக்கியக் கூட்டங்களில் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி நூல் விம்சனம் (?) செய்யத் தொடங்கினார்கள். தொகுப்பு வந்துள்ளது ஸ்டேஸுக்கு ஹார்ட்டின் இட்டும், வாழ்த்து சொல்லியும், யாரும் படிக்கவில்லை ஸ்டேஸ்க்கு சோக முகம் காட்டியும் கட்டிப்பிடி வைத்தியத்தில் இறங்கினார்கள். கல்யாண வீட்டையே கட்டிக்கொண்டு அழும் கூட்டம் இழவு வீட்டில் சும்மா இருக்குமா? எல்லோருக்கும் பொது எதிரியான அரசியல் வாதிகளை பொதுமக்களை கொத்துக் கொத்தாய் ஸ்டேடஸ் வீசி கொன்றுகொண்டிருக்கிறார்கள்.

சாம்பாரை எடுத்து சிக்கன் குழம்பில் ஊற்றி புளிக்குழம்பு சேர்த்து பிரியாணியில் கலக்கி தயிர் வார்த்து நெய் சேர்த்து சர்க்கரை பொங்கலைப் போட்டு வடைகறி ஊற்றிக் கலந்து இலையில் வைத்தது போல இலக்கியக்கூட்டமே கமகமக்கிறது.

------

பதிவாளரின் அனுமதி பெற்று பதிவிட்டது. பதிவு ஆண்டு 2017

---

## புத்தனின் கொலை.

பலமுறை கெஞ்சி மன்றாடுகிறேன்
அவர்கள் புத்தனின் தியானத்தை கலைக்கவே
முயற்சி செய்கிறார்கள்.

ஆழ் தியானத்தில் இருந்த புத்தனை
நெம்புகோல் கொண்டு அகற்றி
பலரும் சுமக்க ஆரம்பிக்கின்றனர்.

பிரபஞ்சத்துள் அதிர்வுகளை உணர்கிறேன்.

அங்கே வேலிகள் தகர்க்கப்பட்டு
அதிகார பயிர்கள் படர்ந்திருந்தன.

அங்கு கருத்திடுவதற்கு,
உரிமைகளை பேசுவதற்கென
அனைத்தும் இரும்பு கம்பிகளால்
நெருக்கப்பட்டிருந்தன.

பாவம் புத்தன்.

பெரும் சிரமத்திற்கு மத்தியில்
அப்புது வெளியில் இருத்தப்படுகிறான்.

இனி ...

மாரிமுத்து சிவகுமார்,

# மௌனம்

என்னுள் சூடும் மௌனம்
என்னுள் பேரிரைச்சலை தந்த
வண்ணம் இருக்க..

பொல்லா மௌனத்தினுள்
வெல்லாத தோற்றத்தின் தாக்கம்

கோபம் பெறும் குமுறலை
விளைத்து கொண்டு
அதையும் இதையும்
மீள ஒத்திகைக் கொடுத்து
பேரிரைச்சலை தருகிறது.

இறைவா!
ஏனிந்த அவல ஓலம்
ஓரம் கட்டி சென்றாலுமே..
பிரளயமாய் வெடித்து
சிதறக்காத்துக்கிடக்கிறது ..

ஆழ் மனதறிந்து
மௌனத்தை கலைத்து..
கண்ணியம் தொலைத்து…
என் இயல்பின் அங்கீகார
தோற்றம் பிழையாகி ..
எல்லாமே மோசநிலையாகுதே ..

ஏனிந்த தேவையில்லா
மௌனஓலம்
பேரிரைச்சல் அடங்காதோ..
மனக்குமுறல் தீராதோ ..
தீர்ந்திடா தீர்வைத்தேடி
மௌனம் ஓலமின்றி
அமைதி சூழ்வாயோ …

சஹ்னாஸ் பேகம்
முதலைப்பாளி, புத்தளம்



# ஊறைபுன்

ஆஸ்திரேலிய நாட்டைப் பூர்வீகமாகக்
கொண்ட யாழ்ப்பறவை நிலத்தில் கூடு
கட்டி வாழக்கூடியவை. யாழைப் போன்ற
வாலமைப்பை உடைய இப்பறவையினம்
அந்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரைப்பகுதிக்
காடுகளில் அதிகமாக காணப்படுகிறது. எந்தவொரு
சத்தத்தையும் கேட்டு அதேபோல் ஒலியெழுப்பும்
ஆற்றல் இதன் தனித்துவம்.

பிற பறவைகளின் சத்தம், குழந்தையின் அழுகுரல்,
லேசர் ஒலி,புகைப்பட மெடுக்கும் ஒலி, மகிழுந்து
அலாரம் போன்றவற்றை பிரதிபலிக்கும் சிறப்பு
கொண்டவை. இதையே ஒரு ஹைக்கூ வடிவில்
காண்போம்

யாருமற்ற முல்லை
கேட்கும் குழந்தையின் அழுகுரல்
தேடுகையில் அட! யாழ்ப்பறவை..



ஸ்ரீவி.முத்துவேல்
துபாய்

# ரெண்டு காலையும் தூக்கிட்டு எப்படி நிக்க முடியும்?



கபாலி : அப்பா உன்னை கணக்கு டீச்சர் பார்க்கணுமாம்.. நீ ஸ்கூலுக்கு வரணும் '

அப்பா : எதுக்குடா என்னை வரச் சொல்றான் ?'

கபாலி : அப்பா ஸ்கூல்ல டீச்சர் ஒரு கேள்வி கேட்டாங்க..

9 ஐ 7 ஆல் பெருக்கினால் என்ன வரும்னு..?
63 ன்னு சொன்னேன் ..

அப்பா : சரி அப்புறம்...

கபாலி : 7ஐ 9 ஆல் பெருக்கினால் என்ன வரும்னு கேட்டாங்க ..

அப்பா : அதே எழுவு தானேடா. வரும்... சரி நீ என்ன சொன்ன.. ?

கபாலி : அதே எழவு தான டீச்சர் வரும்னு சொன்னேன்.. உன்ன வந்து பார்க்கச் சொல்லிட்டாங்க '

அப்பா : சரி ,சரி நாளைக்கு வரேன் '

அடுத்த நாள்,

கபாலி : அப்பா, ஸ்கூலுக்கு வந்து டீச்சரைப் பார்த்தியா ?'

அப்பா : இல்லடா நாளைக்கு வரேன்..

கபாலி : சரி நாளைக்கு கணக்கு டீச்சரை பார்த்துட்டு அப்படியே பி.டி. சா ரையும் பார்த்துடு..

அப்பா : எதுக்குடா ?

'கபாலி : rill இருந்தது .. முதல்ல வலது கையத் தூக்கச் சொன்னாரு செஞ்சேன் ..

அப்புறம் இடது கையத் தூக்கச் சொன்னார். செஞ்சேன்.. ரெண்டு கையயும் தூக்கிட்டே வலது கால தூக்கச் சொன்னாரு தூக்கினேன்..

அப்புறம் இடது காலை தூக்குன்னு சொன்னாரு .

அப்பா : ரெண்டு காலையும் தூக்கிட்டு எப்படி நிக்க முடியும்? லூசா அவன்?.. சரி நீ என்ன பண்ணுன..?

கபாலி : ரெண்டு காலையும் தூக்கிட்டு எப்படிடா நிக்க முடியும் லூசாடா நீன்னுதான் சொன்னேன்.. உங்கப்பாவை கூட்டிட்டு வான்னு சொல்லிட்டாரு ..

அப்பா : சரி சரி நாளைக்கு வந்து பார்க்கிறேன் '

அதற்குஅடுத்த நாள்,

கபாலி : இன்னிக்கு ஸ்கூலுக்கு போனியாப்பா..

அப்பா : இல்லடா நாளைக்கு வரேன் .

கபாலி : நீ போக வேணாம்பா...

அப்பா : ஏன்டா?

கபாலி : ஸ்கூலேர்ந்து என்னை டிஸ்மிஸ் பண்ணிட்டாங்க...

அப்பா : ஏன்டா..? என்னாச்சுடா?'

கபாலி : ப்ரின்சிபல் ரூமுக்கு வரச் சொன்னார் .. அங்க கணக்கு டீச்சர், பி.டி. சார், சயின்ஸ் டீச்சர் மூனு பேரும் இருந்தாங்க '

அப்பா : சயின்ஸ் டீச்சரா... அந்த நாய் ஏன்டா அங்க இருந்தாங்க ?

கபாலி : அதைத்தான்பா நானும் கேட்டேன் .
டிஸ்மிஸ் பண்ணி வீட்டுக்கு அனுப்பிட்டாங்க '

பெற்றோரிடம் கற்றபடியே பிள்ளைகளும் வளர்கிறார்கள்...

பெற்றோரிடம் கேட்டதையே பிள்ளைகளும் பேசுகிறார்கள்...

பெற்றோகளே குழந்தைகளுக்கு பள்ளி பாடம் சொல்லி கொடுக்க முடியவில்லை என்றாலும் கல்வி போதிக்கும் ஆசிரியர்களிடம், குடும்ப பெரியவர்களிடம், வெளி மனிதர்களிடம், நண்பர்களிடம் குறிப்பாக பெண்களிடம் எப்படி மரியாதையாக பேச வேண்டும், பழக வேண்டும் என்ற அடிப்படை விஷயங்களிலாவது கவனம் செலுத்துங்கள்.


**ரெ. முரளி**

ஆசிரியர் - இலக்கியச் சாரல்
சமூக நல ஆர்வலர்




# அவன் இவன்

அவன் பசியோடு இருந்தான்
இவன் ருசியோடு உண்டான்
அவன் தனித்து இருந்தான்
இவன் தனிமையில் இருந்தான்
அவனுக்கு உறக்கத்திற்கு பஞ்சமில்லை
இவனுக்கு உறக்கம் என்பதேயில்லை
அவன் நோயற்று இருந்தான்
இவன் நோயோடு இருந்தான்
அவனுக்கு மகிழச்சியே எல்லை
இவனுக்கு மகிழ்ச்சியே இல்லை
அவன் எளிமையாய் இருந்தான்
இவன் எளிமையின்றி இருந்தான்
அவனிடம் இருந்தது வறுமை
இவனிடம் இருந்தது வளமை
அவன் இலக்கோடு இருந்தான்
இவன் இலக்கின்றி இருந்தான்
அவன் உழைப்போடு இருந்தான்
இவன் உழைப்பாளியோடு இருந்தான்
அவன் கடினங்களை கடந்தான்
இவன் கடினங்களை கடிந்தான்
அவன் எதிர்பார்ப்பின்றி இருந்தான்
இவன் எதிர்பார்ப்போடு இருந்தான்
அவனுக்கு மாற்றம் வேண்டும்
இவனுக்கு மாற்று வேண்டும்
அவன் சாதிக்கத் துடிக்கிறான்
இவன் சாதித்தலை படிக்கிறான்
அவன் சிகரம் எட்டுவான்
இவன் சிகரம் காண்பான்


**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# ஏட்டேறியது எண்ணம்

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை



இரண்டு கைகளையும் தலையணை யாக்கி அதில் முழுதாக தலையை சாய்த்து முகட்டை பார்த்தவாறு மல்லாக்க படுத்துக் கொண்டிருந்தான் அஷ்மல். சூரிய வெளிச்சத்திற்காக வீட்டுக் கூரையின் நடுவே போடப்பட்டிருந்த சிறு கண்ணாடித் துண்டின் மூலமாக நிலவொளியின் மங்கிய வெளிச்சம் உள்நோக்கிப் பட, மூடாத கண்களை மூட வைப்பதற்காக வெகு நேரம் சிரமப்பட்டு தோற்றவன், என்ன இது வாழ்க்கையென கொஞ்சம் சத்தமாகவே அங்கலாய்த்துக் கொண்டான்.

'மகன்.. நீங்க இன்னும் தூங்கலையா?' எனக் கேட்ட தாயின் குரலில் மெல்லமாய் நாக்கை கடித்துக்கொண்டவன்,

'இதோ தூங்கிட்டேன் மா' என்றவாறு தாய்க்கு முன்பு வழமை போல் அன்றும் நடிக்கத் தொடங்கினான், தான் நிம்மதி யாகவும் சந்தோஷமாகவும் இருப்பதைப் போன்று.

இத்தனைக்கும் அஷ்மல் அவ்வளவு வறுமையான குடும்பத்தை சேர்ந்தவனில்லை தான். இருந்தாலும் ஏதோ அன்றன்றைக்கு உழைப்பதை

அன்றன்றைக்கு உண்டு வாழும் ஒரு சாதாரண குடும்பம் அவனது தந்தை வெளிநாடு சென்று குடும்பத்தைப் பார்ப்பதற்காக உழைத்து உழைத்துக் களைத்து, பணத்தை இவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்த போதுதான் ஒரு தடவை யாரும் எதிர்பாராதது போல் மாரடைப்பு வந்து அங்கேயே மரணத்தை எய்தினார்.

'அஞ்சு வருஷம் தான் உங்களுக்கான நேரம். அதற்குள்ள உழைக்கிறத உழைச் சிட்டு வந்துருங்க. பிள்ளைகளை தனியே இருந்து என்னால பார்க்க முடியாது' என அவரிடம் கண்டிப்பாக சொல்லி அனுப்பிய மனைவிக்குத் தெரியுமா இனி ஒரு போதும் மீள முடியாத மரணத்தை அவர் எங்கேயோ பல மைல் தூரமிருக்கும் இடத்திலிருந்து சுவைப்பாரென.

விம்மி அழுத தாயை ஆறுதல் படுத்துவதா அல்லது தன்னுடைய தங்கையைத் தேற்றுவதா எனத் தெரியாது திண்டாடிப் போனான் அஷ்மல். உண்மையில் அவனைத் தேற்றுவதற்கே யாரேனும் ஒருவரின் உதவி தேவைப்பட்டது. பெண்ணாய் பிறந்திருந்தால் வீட்டோடும் தாயோடும் தானும் தன் பாடுமென வாப்பாவோ அல்லது சகோதரனோ உழைத்து தருவதை வைத்து, வீட்டு செலவுகளை சமாளித்துக் கொண்டு எப்படியோ வாழ்ந்துவிடலாம். அப்படித் தான் முடியாது போனால் வீட்டோடு ஏதேனும் சிறு தொழில் செய்து வருமானம் பெற முயற்சிக்கலாம்.

ஆனால் ஆணாகப் பிறந்தால் உண்மையில் எத்தனை தடைகளைத் தாண்ட வேண்டும். எத்தனை சிரமங்களை பொறுத்திட வேண்டும்.

தந்தை உழைத்த போது செல்லப் பிள்ளையாக இருந்து விட்டு திடீரென்று தந்தை இறந்து போன பின்னர் மொத்த குடும்பப் பொறுப்பையும் தானே ஒருவனாய் சுமப்பதென்பது அத்தனை இலகுவான விடயமா என்ன?

சுமார் 23 வயது மட்டுமேயுடைய அஷ்மலை தந்தையின் இழப்பு எந்தளவுக்கு தாக்கியதென்பதை அதே வயதில் தந்தையை இழந்த மகன்மாரைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார்கள்.

அந்தளவிற்கு மனதளவிலும் உடலளவிலும் உடைந்து நொறுங்கி அடுத்த கட்டம் என்ன செய்யப் போகிறேன், எப்படி குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறேனென்ற துளியளவு முடிவோ எண்ணமோ இன்றி பித்து பிடித்தவன் போல் யோசித்து யோசித்து பல போதுகளில் களைத்துப் போனான் அஷ்மல்.

'மச்சான்.. எதையும் யோசிச்சு மனசை குழப்பிக்காதடா. எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழி கட்டாயம் பிறக்கும். நீ ஏன் ஒங்கட தங்கச்சிக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சு வைக்கக் கூடாது? ஒங்கட குடும்ப சுமையாவது குறையுமே என்ற தன் தோழனை ஒருவித சோகத்தோடு பார்த்த அஷ்மலின் கண்கள் கலங்கிப் போயின.

'ஏன்டா அழுவுற?' என்று கம்மிப்போன குரலில் கேட்ட தன் நண்பனை நோக்கியவன், 'வாப்பா இருக்கும் வரைக்கும் அன்றன்றைக்கு சமைத்து சாப்பிட்டுட்டு சந்தோஷமாகத் தாண்டா வாழ்ந்தோம். வாப்பாட சேமிப்பில் பணம் எப்பவுமே இருந்ததில்ல. அங்க வேலை செய்ற நேரத்துலயும் வாப்பா அவ்ளோ பெரிய சம்பளம் எடுக்கல. இருந்தாலும் அல்ஹம்துலில்லாஹ்னு வாழ்ந்துட்டு போனோம். ஆனா இப்ப

இப்படி திடீரென்று நடந்த வாப்பாட மரணத்தால எனக்கு எதுவுமே செய்ய முடியாமலிருக்குடா. எனக்கு என்ன செய்யறதுண்டு விளங்கல்ல' என தவித்துப் போன அஷ்மல் அப்படியே தன் தோழனின் தோளில் சாய,

'ஒன்றும் யோசிக்காதடா அல்லாஹ் எல்லாத்துக்கும் ஒரு நல்ல வழியை காட்டுவான்.' என்றவனை ஒருவித ஆறுதலுடன் பார்த்தான் அஷ்மல்.

அதன்பின் தன் படிப்புடன் சேர்த்து ஒரு தொழிலை தேடுவதில் சிரமத்தை உணர்ந்தவன் படிப்பை அடியோடு நிறுத்திவிட்டு வேலையொன்றை தேடத் தொடங்கினான். யாருடைய எண்ணங் களைத்தான் உடனடியாகவும் முழுமையாக இந்த வாழ்க்கை நிறைவேற்றியது.

அப்படித்தான் ஒரு எண்ணம், தேவை நிறைவேற வேண்டுமானாலும் எத்தனை பெரிய சவால்களையும் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் சிரமங்களையும் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது இந்த வாழ்விலென தன்னை நொந்து கொண்டவனுக்கு இறைவனின் அருள் படி ஒரு கம்பெனியில் தட்டச்சு வேலை செய்வதற்கான வாய்ப்பொன்று வந்தது.

இப்போதைக்கு இதுவே பெரிதுதா னென அதில் இணைந்து கொண்டவன் ஒவ்வொரு மாதமும் சம்பாதித்து அதன் மூலம் தன்னையும் தன் தாயையும் சகோதரியையும் பார்த்துக் கொண்டான். தன் தந்தை இருக்கும் போது இருந்தது போலொரு வாழ்வை அவனால் ஈடு செய்ய முடியாது போனாலும் வறுமையின் பிடியில், வாழ்வதற்கு சிரமப்படுகிறோமெனும் இடத்திலிருந்து ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனுமளவிற்கு தன் குடும்பத்தை முன்னேற்றிக் கொண்டான்.

இருந்தும் இரவுகளிலும் பகலிலும் அவனை அவஸ்தைப்படுத்திக் கொண்டு தூங்கவிடாமல் செய்து கொண்டிருந்த ஒரே ஒரு சிந்தனையென்றால் அது அவனுடைய சகோதரியின் திருமண வாழ்க்கை பற்றியது தான். என்னதான் ஆயிரம் பேர் ஆறுதல் சொன்னாலும், எல்லாம் சரியாகிவிடுமென தூர நின்று சொல்லி விட்டு நகர்ந்தாலும் யாருமே தோள் தூக்கி விடுவதற்கோ கைதந்து உதவுவதற்கோ அவனுக்கு இருக்கவில்லையென்றே சொல்லலாம்.

என்ன உலகம் இது!

ஒரு பெண் பிள்ளையை பெற்றெடுத் தால் எத்தகைய சிரமங்களை அனுபவிக்க வேண்டி இருக்கின்றதென்பதை தெளி வாகக் காட்டியது அவனுடைய அந்த யதார்த்தம் நிறைந்த அன்றாட வாழ்வு. தன்னுடைய சகோதரியை, தான் எப்படியேனும் கரை சேர்த்து விட வேண்டுமென அவன் எடுத்த முயற்சிகள் ஒன்றா இரண்டா. அவையோ ஏராளம்.

தன்னுடைய நண்பர்கள் தொடக்கம் ஏனையோர் வரை அத்தனை பேரிடமும் அவன் இது பற்றி பேசாத நாட்களே இல்லை.

'என்னுடைய தங்கைக்கு மிகப் பொருத்தமான ஒரு மணமகனை தேர்வு செய்து தந்தால் மிகவும் உதவியாக இருக்குமென அவன் ஜாடை மாடையாக எத்தனைபேரிடம் சொன்னாலும்ஏதேதோ காரணங்கள் சொல்லி ஒவ்வொருவராக விலகத் தொடங்கினார்களே தவிர இல்லாதோரையும் சிரமப்படுவோரையும் அன்றன்றைக்கு உழைத்து உண்போரையும் யார்தான் இங்கு விரும்புவார்களென்பதை அவன் உணரத் தொடங்கினான். ஒரு

சொந்தமான வீடு தன் தங்கைக்கென்று கட்ட முடியாததாலும் ஏனைய வசதிகளும் சீதனங்களும் அவனால் கொடுக்க முடியாததாலும் உண்மையில் திண்டாடித் தான் போனான் அஷ்மல்.

புதிதாய் ஒரு வீடு கட்டி அதன் மூலம் தன் தங்கையை திருமணம் செய்து கொடுப்பதற்கு உண்மையிலேயே இன்னும் பல வருடங்கள் போகலாம். அதுவரைக்கும் தன் தாயின் கண்ணீரையும் தன்னுடைய மகள் இப்படி திருமண வயதை அடைந்த பின்னும் தனியாக திருமணமாகாமலே இருக்கின்றாளேயென்ற விரக்தியும் அவரை ஏதாவது செய்து விடுமோவென பயந்த அஷ்மல் என்ன செய்வதென சிந்தித்த வண்ணமே இருந்தான்.

ஒரு நாள் தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேலைக்கு செல்வதற்கான நேரம் நெருங்கியதை அறிந்து அலுவலகம் நோக்கி விரைந்தவனது கண்களில் நீண்ட நாட்களில் பின் தென்பட்டான் ஹகீம். ஹகீம் அவனுடைய பால்ய காலத்து நண்பன். ஹகீம் தரம் ஏழில்தான் அஷ்மலுடைய பாடசாலையில் வந்து இணைந்து கொண்டாலும் சுமார் ஆறு வருட நட்பு அவர்களது.

ஹகீம் உண்மையிலேயே ஒரு வசதியான குடும்பத்தை சேர்ந்தவன். இருந்தாலும் அவனுக்கு ஏனோ அவனுடைய இயல்புடைய நண்பர் களைத்தான் அதிகம் பிடித்துப் போனது. குறிப்பாக அவனுக்கு அஷ்மல் என்றால் மிகவும் பிடிக்கும். எதையும் அவனோடு பேசி எதையும் அவனோடு பகிர்ந்து கொண்டு எப்போதும் ஒரே மாதிரி இருக்கக்கூடிய ஒரே நண்பனென்றால் அவனுக்கு அது அஷ்மல் மாத்திரம் தான்.

அதனால் தான் அவனோடு தன்னு

## ◆ நடந்ததை
## ◆ நடப்பதைத்
## ◆ தெரிந்துவை

சீர்மிகும் சிந்தைக்கு
அறிவாலே விருந்துவை
உலகினில் நடந்ததை
நடப்பதைத் தெரிந்துவை

உறவுக்கு உதவிசெய்
தனிமையை தள்ளிவை
தேசத்தில் அரங்கேறும்
வன்முறைக்கு கொள்ளிவை

குடும்பங்கள் சீரழியும்
மதுவினை ஒதுக்கிடு
சகோதர அன்பினால்
புதுயுகம் செதுக்கிடு

இல்லையெனும் இல்லாத
நிலையினை நிறுவிடு
மனங்களை உழுதிடு
நேசத்தால் நிறைத்திடு

பெண்ணடிமை களைந்திடு
பாசத்தால் உரமிடு
மண்ணுரிமை அடைந்திடு
மனிதத்தில் உயர்ந்திடு

பின்வரும் சந்ததிக்கு
நல்வாழ்வை வழங்கிடு
அனைவரும் சமமெனும்
ஆணையை முழங்கிடு

லீ. லியாகத்அலி

டைய வாழ்வின் எல்லா துன்பங்களையும் பகிர்ந்து கொண்டு சுமார் ஆறு வருடங்கள் நெருங்கிய நண்பர்களாக அவர்கள் வாழ்ந்த காலம் கண் முன் துளிர் விட,

'டேய் ஹகீம். அஸ்ஸலாமு அலைக்கும்' என்றவாறு போனவனை உடனே அடையாளம் கண்டு கொண்ட ஹகீம் தன்னுடைய வாகனத்தில் இருந்து இறங்கி ஓடி வந்து கட்டி அணைத்துக் கொண்டான்.

'எப்படி இருக்க டா மச்சான்?. உன்னைத்தான் நான் சந்திக்கணும்னு இருந்தேன்' என்று கேட்டவனை புருவம் சுருக்கிப் பார்த்த அஷ்மல்,

'ஏன்டா என்னை சந்திக்க நெனச்சாய்? நீதான் இப்ப பெரிய பார்ட்டியே' என வழமை போல் நக்கல் செய்தவனது தோளில் தட்டிக் கொடுத்த ஹகீம்,

'டேய் உண்மையாவே என் வாழ்க்கையில உன்னை நான் மறக்கவே மாட்டேன். எவ்வளவு தான் வசதி வாய்ப்புகள் உடையவங்களாக நாங்க இருந்தாலும் ஒரு தடவை ஸ்கூலுக்கு நான் ஃபோன் கொண்டு வந்ததை டீச்சர் பார்த்து எங்கட வாப்பா கிட்ட சொல்லி என்னை ஸ்கூல விட்டு விலக்கிறதாக சொன்னப்ப நீ டீச்சர்ட கெஞ்சிப் பேசி எனக்காக மன்னிப்பு கேட்டு அந்த பிரச்சினைய சரி செஞ்சி என்னோடயும் பேசி அந்த ஃபோனை நான் ஸ்கூலுக்கு கொண்டு வராத மாதிரி ஆக்கின. அதைவிட பெரிய ஹெல்ப், எனக்கு இருந்த போதை வஸ்து பாவனைய நீ இல்லாமலாக்கினது தான்.

ஒரு தடவை நான் அடுத்த ஃப்ரண்ட்ஸ்மாரோட சேர்ந்து சிகரெட் புடிச்சத நீ கண்டு என்னோட கொஞ்ச நாள் பேசாம இருந்தடா, அந்த நேரத்துல தான் நான் உண்ட உண்மையான நட்பை மிஸ் பண்ணினேன். அதற்கு பிறகு தான் நான் உனக்கு சத்தியம் செஞ்சு இனிமேல் இந்த மாதிரி சிகரெட் எதையும் எடுக்க மாட்டேன் என சொன்னப்ப நீ என்னை நம்பினடா.. அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யக் கூடா என்றதுக்காக உண்மையாகவே நான் அதற்குப் பிறகு ஒரு நாள் கூட அந்த பக்கம் போறதே இல்ல.

இப்ப என்னோட, நீ இல்ல. நான் சிகரெட் குடிச்சாலும் அதை காண்றதுக்கு நீ இல்லடா. இருந்தாலும் என்ன வழி நடத்தி என்ன திருத்தின ஒரே உண்மையான நண்பன்னா அது நீதாண்டா.

அதோட நான் உன்கிட்ட ஒரு விஷயம் கேட்கணும்' என்றவாறே அது வரை ஒரு வேகத்தில் பேசிக் கொண்டிருந்த ஹகீம் சிறிது தடுமாறத் தொடங்கினான்.

'ஹகீம் என்னடா எனட்ட பேசுறதுக்கு தடுமாறிட்டு இருக்காய். என்னன்னு சொல்லு' எனக் கேட்ட அஷ்மலிடம்,

'டேய் உனக்கொரு தங்கச்சி இருந்த தானே. அவங்கள எனக்கு உன்னோட படிக்கிற காலத்தில் இருந்தே விருப்பம்டா. ஆனா நீதான் ரொம்ப ஸ்ட்ரிக்கான ஆளாச்சே. ஒரு சிகரெட் பிடிச்சதுக்கு என்னோட பேசாம இருந்துட்டாய். உங்க தங்கச்சியை நான் விரும்புறேன்னு சொன்னா நீ ஏத்துப்பியா.. அதனாலதான் எத்தனையோ தடவை இதை உன்கிட்ட சொல்ல வந்தாலும் நான் சொல்லலடா..

ஆனா இப்ப நான் வெளிநாட்டுக்கு போய் உழைச்சு ஏதோ ஒரு நல்ல நிலைமையில் இருக்கேன். அதனால தான் இப்ப இருந்த தைரியத்தை எல்லாம் வர வெச்சு கேக்கறேன். அந்த புள்ளைய எனக்கு திருமணம் செய்து தர உனக்கு

சம்மதமா? எனக்கு எதுவுமே வேணாம் டா உங்க தங்கச்சியை மட்டும் நீ தந்தால் போதும். மத்த எல்லா செலவுகளையும் மற்ற எல்லா விஷயங்களையும் நானே பார்த்துக்கிறேன். ப்ளீஸ் டா'என்றவாறு அவன் முகம் பார்க்கத் தயங்கி கீழே பார்த்து பேசிய நண்பனை அப்படியே கட்டி அணைத்துக்கொண்ட அஷ்மலுக்கு மாலை மாலையாக கண்ணீர் வடியத் தொடங்கியது.

உண்மையில் எத்தனை நாளைய ஏக்கம் இது! எத்தனை நாட்கள் இதற்காக தஹஜ்ஜத்திலும் ஏனைய பொழுதுகளிலும் பிரார்த்தனை செய்து அழுது களைத்துப் போயிருந்தான் அவன்.

அப்போதுதான் அவனுக்கு ஒன்று மட்டும் நினைவுக்கு வந்தது.

நாம் ஒருவருக்கு கொடுக்கும் எந்தவித நன்மையையும் அல்லாஹுத்தஆலா ஒரு போதும் வீணாக்க மாட்டானென்பது.

'டேய் அழுதது போதும். வாடா உங்க உம்மாவை சந்திச்சு நான் முறையாக பெண் கேட்கப் போறேன்.' எனக் கூறியவாறு நண்பனின் கைகளைப் பிடித்துக் கொண்டு நகர்ந்தவனை பெருமிதத்துடன் பார்த்த அஷ்மல் மனதார புகழத் தொடங்கினான் இறைவனை!

---

1

**மலைத்தாய்மை**

எழும்பிய கரங்கள்
வழிந்திடும் மேகம்
ஏந்திடும் மண்

2

**அரசியல்**

கிழிசலைக் கண்டும்
சும்மா இருப்பதில்லை
வேலியோர முட்கள்

3

நீட்டிய தவங்கள்
வளர்ந்திடும் வரம்
நிம்மதியில் தாய்மை

4

சமையலறைப் பக்கம்
ஒதுங்காதவனுக்கு
வாய்த்து விடுகிறது
எப்போதும் ஒரு வாய்ச்சோறு
குறைகளைப் பெரிதாக்கி
வசவுகளை வழங்கும்
அவனின் வார்த்தைகளுக்குள்
அமிலத்தின் வீச்சம்
பாராட்டுக்கு ஏங்கும்
சமைத்தவள் மனதில்
பாறாங்கல்லின் அழுத்தம்
ஒருமுறையாவது
தன்னைப் பெண்ணென
எண்ணாதவன் ஒருபோதும்
சமைப்பதன் வலியை
உணர்வதே இல்லை.

5

**ஜனநாயகம்**

கவனமாகப் பார்த்தும்
கடமையை மறவாதும்
தேவையைப் பூர்த்தி செய்தும்
பக்குவமாய் வளர்த்தாலும்
பூச்செடிகளை முந்திக் கொண்டு
தலை நீட்டுகின்றன
களைகள்.

**இளையவன் சிவா**



சகோதரிகளே! கொலு வைக்கப் போகிறீர்களா? மிக்க மகிழ்ச்சி உங்களுடைய வீட்டில் மிகவும் அழகாக நவராத்திரி கொலு அமைத்து, மகிழ்ச்சியாக கொண்டாடி, அம்மனின் அருளை சகல சௌபாக்கியத்துடன் பெறுங்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள். அதற்கு முன்னால் அனுபவம் தந்த பாடமாக நான் சில விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே கொலு வைத்துக் கொண்டிருப்பவர்களானால் அந்தக் காலத்தில் முதலில் நாம் எல்லாம் கொலு ஆரம்பிக்கும் பொழுது பெட்டிகள், டின்கள் இன்னும் அங்கிங்கே இருக்கும் டேபிள் இதெல்லாம் வைத்துதான் படி என்று கட்டுவோம். அதில் வைத்து விட்டு, திரும்ப எடுத்து எல்லாவற்றையும் பத்திரப்படுத்தி விடுவோம். மேலே போட இருக்கவே இருக்கிறது கணவரின் வெளுத்த வேஷ்டிகள். இப்போது அதெல்லாம் நிறைய மாறிவிட்டது.

முதலில் கொலு எங்கிருந்து ஆரம்பிப் பீர்கள்? வீட்டில் ஒரு மாதம் முன்னாடி இருந்தே ஒட்டடை அடித்து ஃபேன் எல்லாம் துடைத்து அதன் பிறகு சாமான் லிஸ்ட் போடுவீர்கள். பத்து



நாளைக்கு தேவையான சுண்டலுக்கு தான்ய வகையறா, அதன் பிறகு அன்றாடம் வாங்க வேண்டியவை என்ற தலைப்பில் வெத்தலை, பாக்கு, பழம், தேங்காய், பூ இவை எல்லாம் வரும். அதன் பிறகு இப்போதெல்லாம் எல்லோரும் எல்லோருக்கும் கிப்ட் வைத்துக் கொடுக்கிறார்கள். இந்த கால வழக்கப்படி இல்லாவிட்டாலும் ஒரு ரவிக்கை துணியாவது வருபவர்களுக்கு வைத்து கொடுக்க வேண்டும், அதை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்வீர்கள். ஆக இவை எல்லாம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதும், பணம் போதுமான அளவும் சரி செய்து விடலாம்.

ஆனால் கடைகண்ணிக்கு போய் வாங்கி வருவது யார்? அங்கு தான் பிரச்னை ஆரம்பிக்கிறது. நமக்கு நேரமே இருக்காது. ஏனென்றால் இவையெல்லாம் முன்பே வாங்கி சேர்த்து ஒரு இடமாக எத்தனை ஒழுங்காக வைத்துக் கொண்டாலும், அந்த சமயத்தில் நாலு பேர் ஒன்றாக வந்துவிட்டால், தடதடவென்று நமக்கு கைகால் ஆடிப் போய்விடும். சரி, இதில் நாமும் காலையில் பூஜை செய்ய வேண்டும். நைவேத்தியம் செய்ய வேண்டும். சாயந்திரம் ஐந்து மணிக்குள் தயாராகி வருபவர்களை 'வா' என்று கூப்பிட ரெடியாக இருக்க வேண்டும். 'நான் கொலு வைத்திருக்கிறேன்' என்று வீட்டில் எல்லாரும் மூன்று வேளையும் பட்டினியா கிடக்க முடியும்? சமையல் சாப்பாடு வழக்கம்போல் நடக்கத்தான் வேண்டும். இத்தனையும் நடக்க வேண்டுமே?!

பத்து நாள் பண்டிகை இது. கடைசி நாள் வாகன பூஜை எல்லாம் முடியும் வேளைக்கு நமக்கு உடம்பு அப்பாடா என்று அலுத்தே போய்விடும். திரும்பவும் இவை அத்தனையும் சரி செய்து அவை அவை இருந்த இடங்க்களுக்குப் போக வேண்டுமே! நினைத்தாலே மலைப் பாகத்தான் இருக்கும்.

சரி, இதெல்லாம் போக அன்றாடம் நாமும் நல்ல புடவை கட்டிக்கொண்டு வெளியே போய் நாலு பேர் வீட்டில் தாம்பூலம் வாங்கிக் கொள்ள வேண்டும். நம் வீட்டுக்கு வருபவர்களுக்கும் கவனித்து வெற்றிலை பாக்கு கொடுக்க வேண்டும். எல்லாம் இருக்கிறது. சந்தோஷமாக செய்தாலும் முன்னே அளவு உடம்பு எல்லோருக்கும் இடம் கொடுக்கிறதா வேலை செய்ய? கொஞ்சம் சந்தேகமாகத் தான் இருக்கிறது. முன்பெல்லாம் பெரிய பெரிய கூட்டு குடும்பங்கள். அதனால் ஆண்களும் இந்த வேலைகளில் பங்கெடுத்துக் கொள்வார்கள். படி கட்டுவது, மேலிருந்து பொம்மைகளை இறக்குவது, அதன் பிறகு மேல் தட்,டுகளில் பொம்மைகளை அடுக்குவது, இதெல்லாம் அநேகமாக அவர்கள் வேலையாக இருக்கும். கொஞ்சம் தொலைவில் இருக்கும் வீடுகளில் கொலுவுக்கு கூப்பிட்டிருந்தால் அவர்கள் தான் கூட்டிக் கொண்டு போவார்கள். இப்போது முதலில் வீட்டில் இருப்பதே கணவன் மனைவி. அடுத்தாற்போல் மிஞ்சினால் இரண்டு குழந்தைகள். இவர்களை வைத்துக்கொண்டு இத்தனை வேலையும் செய்வதென்பது எத்தனை நாள் முடியும் நம்மால்? இதெல்லாம் யோசிக்க வேண்டி இருக்கிறது. சரி, நல்லபடியாக வருஷக்கணக்காக செய்து வருகிறீர்கள் என்றால் உங்களை அதைரியப்படுத்த நான் விரும்பவில்லை. நல்லபடியாக வைத்து மகிழுங்கள்.

அதற்கு அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது புதிதாக கொலு ஆரம்பிப்பவர்களுக்கு. இப்போதும் உங்களுடன் கலந்து பேச நிறைய விஷயங்கள் இருக்கின்றன. கொலு ஆரம்பிப்பது இந்த காலத்தில் சுலபம். ஏனென்றால் முந்தைய நாட்களை விட இப்போது பணப்புழக்கம் அதிகம். அதனால் வாங்கணும் என்று நினைத்த மாத்திரத்தில் போய் மளமளவென்று பொம்மைகள் நிறைய வாங்கிக் கொண்டு வந்து விடலாம். படியும், ரெடிமேடாக எத்தனையோ சைஸ்கள் எத்தனையோ விதங்களில் கிடைக்கிறது. அதுவும் வாங்கிவிடலாம். அடுத்தபடியாக துணி கூட தைத்தே விற்கிறார்கள் படிக்கு மேலே போடுவதற்கு. இதை வாங்கி அடுக்கி முதல் வருஷம் ஆரம்பிக்கப் போகிறோமா? எல்லோரும், கணவனும் சரி, குழந்தைகளும் சரி கொஞ்சம் அதிகமாகவே இன்ட்ரஸ்ட் காண்பிப்பார்கள். அதனால், அந்த அக்கறையில் எல்லோருமாக நன்றாக வாங்கி வைத்து விடுவோம். இது வைத்த பிறகு அந்த வருடம், அடுத்த வருடம், ஏன் அதற்கடுத்தாற்போல் ஒரு இரண்டு வருடங்கள் வரை கூட குழந்தைகளும் செய்வார்கள். இன்னும் கேட்க போனால் முன்னால் செய்த மாதிரி பார்க், மலை, குளம் என்றெல்லாம் கட்டுவார்கள். இப்போது வீட்டுக்கு வீடு நிலைமை என்ன தெரியுமா? குழந்தைகள் பெரிய படிப்பு, வேலை என்று போய்விடுகிறார்கள். "உனக்கு வேற வேலை இல்ல. முன்னே அப்பா செஞ்சாருன்னா அவங்களுக்கெல்லாம் பிடிச்சது. இப்போ எல்லாம் எங்களுக்கு அந்த அளவுக்கு இன்ட்ரஸ்ட் இல்ல. முதலில் நேரமும் இல்லை. இதுதான் அவர்களுடைய பதில். அதிலும் பெண் குழந்தைகளும் பெரிய படிப்பு எல்லாம் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள், அவர்களுக்கு அப்போது தான் டெஸ்ட் இருக்கும். அவர்களை 'அங்கே போ! அவர்கள் வீட்டில் வெத்தலை பாக்கு வாங்கிக்கோ! இவர்கள் வீட்டில் வெத்தலை பாக்கு வாங்கிக்கோ!" இதெல்லாம் சொல்லி நடக்கவே நடக்காது. அதற்கும் நாம் தான் முடிந்தால் போக வேண்டும். முக்கியமானதை சொல்ல மறந்து விட்டேனே! நம்முடைய ஏரியாவில் நல்ல கோவில்கள் இருக்கும். அந்த கோவில்களில் 'இன்றைக்கு மீனாட்சி அலங்காரம் என்பார்கள், நாளைக்கு காமாட்சி அலங்காரம், அடுத்த நாள் விசாலாட்சி அலங்காரம் என்றெல்லாம் ஒவ்வொருவரும் வர்ணிப்பதை கேட்கும் பொழுது நமக்கும் போக வேண்டும் என்று இருக்கும்.. அந்தக் காலத்தில் தஞ்சாவூர் மாதிரி ஊர்களில் அதெல்லாம் நடந்தது. இப்போது முடிந்தால் ஒரு நாள் இரண்டு நாள் கோவிலுக்கு கிட்ட இருக்கிறவர்கள் போகலாம். மற்றவர்களால் போக முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஏரியாவில் இருக்கிறார்கள். 'ஒரு வெத்தலை பாக்குக்காக வா' என்று கூப்பிடுவதே கூட நமக்கே ஒரு மாதிரி இருக்கிறது.

இதெல்லாம் போக முக்கியமான ஒரு பாயிண்டுக்கு வருவோம். எல்லோரும் இந்த கிப்ட் வைத்துக் கொடுப்பது என்று ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள் இது பூவாகி காயாகி கனியாகி என்கிற மாதிரி ஒரு ரவிக்கை துணி வைத்துக் கொடுப்பதுதான் சம்பிரதாயம்.. சரி அதோடு வெற்றிலை பாக்கு பழம் அதெல்லாம் சொல்லவே வேண்டியதுஇல்லை. தேங்காய் வரைக்கும், அதற்கு மேல் கொண்டு ஒரு கிப்ட் ஐட்டம் கண்டிப்பாக கொடுக்க வேண்டும். அது வழக்கத்தில் வந்திருக்கிறது. அதுவும் சில பேர் நல்ல வசதி உள்ளவர்கள் புடவை கூட வாங்கி கொடுத்து விடுகிறார்கள்.

ஒருவர் புடவை வாங்கி மற்றவருக்கு கொடுத்தால் அந்த மற்றவர் திரும்ப இவருக்கு செய்ய வேண்டாமா என்று தோன்றுகிறது. அப்புறம் ஒருத்தருக்கு மட்டும் வாங்கி கொடுத்தால் அதுவும் பிளாட்டில் நிறைய பேர் இருக்கும் இடங்களில் ஒருத்தருக்கு மட்டும் வாங்கி கொடுத்தால் எப்படி? அதனால் எல்லாரும் எல்லோருக்கும் புடவை வாங்கி கொடுத்து பீரோ கொள்ளாத புடவைகள். அதுவும் கொஞ்சம் சுமார் விலையில். (இது போன்ற கிப்ட் என்ன பத்தாயிரம் ரூபாய்க்கா வாங்க முடியும்?) பளபளவென்று பட்டை பட்டையாய் ஜரிகை போட்ட புடவைகள் திரும்பிப் பார்ப்பதற்குள் எக்கச்சக்கமாக சேர்ந்து விடும். அதையெல்லாம் எங்கே கட்டிக் கொண்டு வெளியே போவது? யார் வீட்டுக்கும் கட்டிக் கொண்டு போக முடியாது கசகசா என்று மார்க்கெட் போன்ற இடங்களுக்கும் அவையெல்லாம் சரிப்பட்டு வராது. மொத்தத்தில் இது ஒரு பெரிய வேஸ்ட் அதற்கு மேலும் 'என்ன புடவை வாங்கி கொடுத்திருக்கிறாள்' என்பது போன்ற கமெண்ட்ஸ். வரலாம். அதையும் கேட்டுக்கொள்ள நாம் தயாராகத் தான் இருக்க வேண்டும். இது அவசியமா? அதற்கு பதில் இப்போது வேற எத்தனையோஅழகானவேலைபாட்டுடன் சின்னப் பொருட்கள் அழகான சாமான்கள் ஷோகேஸில் வைக்கக் கூடியவை கிடைக்கின்றன. அதுபோல் வாங்கி கொடுக்கலாமே! இப்போதே பெண் குழந்தைகளுக்கு எல்லாரும் சின்னதாக நெக்லஸ் மணிமாலை போன்றவற்றை வாங்கி கொடுக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் போனால் ஸ்கூல் டப்பா, டிபன் டப்பா, பென்சில் பேனாவில் புது ரகம் அப்படியெல்லாம் வாங்கி கொடுக்கிறார்கள். இது இப்படி நீண்டு கொண்டே போனால் எங்கே போய் முடியும்? முடிந்தவர்களுக்கு சரி. அதாவது பண விஷயத்தில் எல்லாரும் இதே போல் செலவு பண்ண முடியுமா?

உடனே தீபாவளி வேறு வரும். அவரவர்கள் கூடப் பிறந்தவர்களுக்கும் செய்ய வேண்டும். வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் செய்ய வேண்டும். எப்படி எல்லாராலும் முடியும் என்று தெரியவில்லை. ஆகையால் எந்த செலவு செய்கிறோமோ அது சாஸ்திர பூர்வமாக நம் பெரியவர்கள் சொல்லி இருக்கும் ஒரு ரவிக்கை துணி வெத்தலை பாக்கு பழம் வளையலோடு நிறுத்திக் கொள்ளலாம். கண்ணாடி சீப்பு அது வைத்து கொடுப்பதும் வழக்கம்தான். அதோட நிறுத்திக் கொள்வது உச்சிதமாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஒரு முறை ஆரம்பித்து விட்டால் நடுவில் நிறுத்தக்கூடாது என்ன செய்வது என்று அப்புறம் கவலைப்படுவதை விட முதலிலேயே சின்னதாக ஒரு டேபிளிலோ அல்லது பூஜை அறையில் இரண்டு பொம்மைகளை வைத்தோ பூஜை செய்து விடலாம் அல்லவா? பாட்டுகள் பாடி பிரார்த்தனை ஸ்லோகங்கள் சொல்லி, அம்மனுக்குப் பிடித்தவற்றைச் செய்து, சௌபாக்கியவதிகளாக தோழியர் அனைவரும் பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்



**மைதிலி சம்பத்**,
செகந்திராபாத்

# இது போதும்!

கிறிஸ்டி நல்லரெத்தினம்



பனிக்குளிருக்கொரு பட்டுப்போர்வை போதும்!
முழுக்குருடனுக்கு முழக்கோல் ஒன்று போதும்!
முற்றிப் பழுத்த பழம்; அணிலுக்கு அது போதும்!
காதலன் கண்ணுக்கு அவள் கரு நிழல் காணல் போதும்!
அந்தக் காதல் கனிந்து வர காமனின் துணை போதும்!
அழுத மழலைக்கு அன்னையின் அணைப்பு போதும்!
முல்லைக் கொடிக்கு பாரியின் பெருந்தேர் போதும்!
முற்றும் துறந்த முனி வேண்டிய வரம் போதும்!
பற்றும் தீ அணைய ஒரு குடம் நீர் போதும்!
பார்த்த விழி நிலம் பார்க்க மன்மதனின் கணை போதும்!
பாசத்தால் கண் நனைய பண்பான செயல் போதும்!
சீதைக்கும் ஆசை வர மாயமான் அது போதும்!
நெற்றிக்கண் திறந்தெரிக்க கவியில் ஒரு பிழை போதும்!
நீலவானம் கறுத்து வர மழை மேகம் துணை போதும்!
முதுமைக்கு முடிவு சொல்ல கடைமூச்சு அது போதும்!
நாடி அடங்கியதும் நாலு பேர் துணை போதும்!
காதலன் தான் எனக்கு உன் கண் ஜாடை ஒன்றே போதும் அன்பே!






வீசி எறியப்பட்ட காற்றில்
வீரியமற்று விழுந்தது
அந்த சிறிய ஓடையில்
சீக்காளி சிற்றெறும்பு…!
ஜீவன் தொலைத்த இலையொன்று
சருகாய் மிதந்துவர
எறும்பு எட்டிப் பிடித்து
இளைப்பாற நினைத்த தருணத்தில்தான்
எச்சமிட்டுச் சென்றது
ஏதுமறியாத பறவை ஒன்று..!
நீருக்குள் மூழ்கி
மேலே மிதந்தபோது
அந்த சருகில்
எச்சமும் இல்லை
எறும்பும் இல்லை..!
காற்றிடமிருந்து தப்பிய எறும்பிற்கு
பறவையின் எச்சதால் மரணம்
என்பது எழுதப்படாத விதி..!

பாத்திமா நளீஃபா



## பிரியமுடன் ஒரு பிரயாணம்

தொலை தூரப் பயணத்தில்
தொலை விடாமல்
தொடர்கின்றது - மனது

ஆமாம் அது தான்
ஆத்மார்த்தமான சந்திப்பென்பதை
ஒவ்வொரு நொடிப் பொழுதும்
உணர்கின்றேன் - கனத்து

பாசத்தை பகிர்வதற்கு
பாவையிவள்
பாஷைகளையும்
தேடுகிறாள் - நினைத்து

மௌனித்து நிற்கும்
தருணங்களையும் களைக்க
விரும்புகின்றேன் - புதைத்து

சந்திக்கும் பொழுதினில்
சாட்சிகள் எதுவுமில்லை
நேசத்தின் சாதனை தான்
இதுவுமென்று - உணர்ந்து

அசாத்தியங்களுக்கு
முற்றுப் புள்ளி - வைத்து
சத்தியங்களையும்
சாத்தியமாக்குபவன்
என்றும் இறை(அ)வன்
மட்டுமே …

முபீதா அமீன்
அக்கரைப்பற்று

# சிலிர்க்க வா

கன்னம் மின்னும்
தங்கக் காட்சி
கண்ட தெண்ணிக்
களிக்கவா !
பொன்னும் வைரம்
போன்ற நின்றன்
போக்கைப் போற்றிப்
புகழவா !
மின்னல் போலும்
மேன்மைப் பின்னல்
மேலும் பின்ன
மிதக்கவா !
என்றும் பெண்நின்
இன்பம் பற்றி
இட்டும் தொட்டும்
இயம்பவா !

பால்போல் தேன்போல்
பாரின் பத்தின்
பாங்கைப் பற்றிப்
படரவா !
நூல்போல் நுட்ப
நோக்க ஊசி
நூற்றுத் தைத்தல்
நுவலவா !
வேல்போல் வெற்றி
வேண்டத் தந்த
வேள்வி என்னே
விளக்கவா !
சால்பாய் நாளும்
சார்ந்த தெல்லாம்
சாற்றிப் போற்றி
வியக்கவா !

வானம் போலத்
தந்த தெல்லாம்
வாழச் சூழ்ந்தே
வளர்க்கவா !
மானம் மிக்க
மாட்சி தன்னை
மண்விண் காண
மலர்த்தவா !
மோனம் போக்கி
முத்தம் தந்த
மொத்தம் எண்ணி
மொழியவா !
ஊனம் போக்கி
ஊக்கம் தந்த
உண்மை அன்பால்
உயிர்க்கவா !

ஆற்றல் தந்தே
ஆண்டு வந்த
ஆக்கந் தன்னை
அளக்கவா !
தோற்ற போதில்
தூண்டி விட்ட
சொல்லின் மேன்மை
துலக்கவா !
ஊற்றுக் கண்ணாய்
உள்ள உன்றன்
ஒப்பில் உள்ளம்
உணர்த்தவா !
தேற்றி நாளும்
தேர்ந்த நின்றன்
திண்மை சொல்லிச்
சிலிர்க்கவா !

- படைக்களப் பாவலர்

துரை.மூர்த்தி

## பெண்ணின் பெருமை

வாழ்கின்ற பூமியிலே வல்லவளம் நீதானே!
சூழ்கின்ற இன்பத்தின் சுந்தரம் நீதானே!
நீள்கின்ற வாழ்க்கையின் நேயமும் நீதானே!
ஆள்கின்ற துன்றன் அழகு!

வளமான வாழ்வில் வசந்தம் தவழும்!
நலமான நம்பிக்கை நாளெல்லாம் வாழும்
உளமார உன்னதங்கள் உன்கையில் பெண்ணே!
பலமாகும் கற்கும் படிப்பு!

பாவலர்மணி

நகுலா சிவநாதன்



# எருமையின் மகிழ்ச்சி



## உமையவன்

எருமை ஒன்று இருந்தது
தான் கருப்பு என்று வருந்தியது
நிறத்தை மாற்ற நினைத்தது
என்ன செய்யலாம் யோசித்தது

பசுவினைப் போல நாமமே
இல்லை என வருந்தியது
எருமை யாகப் பிறந்ததால்
தன்னை சிறுமையாக நினைத்தது

கருமையாக இருப்பதால்
பிறர் இகழ்வதாக நினைத்தது
கருமை நிறத்தை மாற்றவே
எருமை ஆழ்ந்து யோசித்தது

செம்மண் சேற்றில் ஆடியே
கருப்பு நிறத்தை மறைத்தது
இரவில் மழையும் பெய்யவே
செம்மண் மழைநீரில் கரைந்தது

மழையும் நம்மைச் சோதிக்கிறது
எருமை எண்ணி வருந்தியது
நிறத்தை உடனே மாற்றவே
என்ன செய்யலாம் யோசித்தது

காகம் ஒன்று வந்து
எருமையின் முதுகில் அமர்ந்தது
கருப்பாக உள்ளதால் உனக்குக்
கவலை இல்லையா எனக்கேட்டது

கருமையே என் அடையாளம்
கவலை எனக்கில்லை என்றது
காகத்தின் பதிலைக் கேட்டு
எருமை திகைத்து நின்றது

தனக்கும் கருமையே அடையாளம்
எருமை உணர்ந்து கொண்டது
எதுவுமே இங்கு குறையில்லை
எருமை நினைத்து மகிழ்ந்தது

---

## தேர்தல்

வெண்ணிற மணியும் வெம்புலி விடங்கள்
வேலையில் மேவிடுங் காலம்
பண்மொழி பேசிப் பாங்குற நடித்துப்
பதுக்கலில் நாடிடுங் காலம்
மண்தனைக் காக்கும் மன்னனாய்க் காட்டி
மதியினை மயக்கிடுங் காலம்
கண்ணிய மில்லாக் காலரை யொழிக்கக்
கருவியாய் வந்தநற் காலம்.



- தமிழ்க்கீரன்
ஈழநாடு.

# பாரிசு

ஜூனியர் தேஜ்

"இருவரிடமும் குறையில்லை. குழந்தை பிறக்கும். அதிகாலை வேளையில் அரச மரத்தைச் சுற்றி வந்து அந்தக் காற்றை சுவாசிக்கும் பெண்களுக்குப் பல சுரப்பிகள் தூண்டப்பட்டு, கருப்பை பிரச்னைகள் சீரடையும், கருவுறும் வாய்ப்புகள் நிறைய இருக்கு. இது விஞ்ஞானபூர்வமா நிரூபிக்கப் பட்ட உண்மை." என்ற மருத்துவர் சற்றே நிறுத்தினார்.

"...................."

"அதே சமயம் ஆன்மீகத்தில் நம்பிக்கையே இல்லாத உங்க மனைவியை அரசமரம் சுற்றச் சொன்னால் கேட்கவா போறாங்க?" என்று பெருமூச்சோடு சொன்னார், பிரபல மகப்பேறு மருத்துவரும், நண்பருமான டாக்டர் சொக்கலிங்கம்.

×××

"................"

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.

ஒரு கனத்த மௌனம் நிலவியது அங்கே.

"எனக்கு ஒரு ஐடியா தோணுது, சரிவருமா யோசிங்க பிரசாத்.." என்றார் மருத்துவர்; முகத்தில் ஒளிர்ந்த புன்னகையுடன்

"சொல்லுங்க டாக்டர்...!"

ஐடியாவைச் சொல்லச் சொல்ல, பிரசாத்தின் முகத்திலும் நம்பிக்கை ரேகைகள் கிளைத்தன.

தொழில் சார்ந்த பேச்சுக்கள் முடித்த பின், சாதாரணமான குசல விசாரிப்புகள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிரசாத்தும் டாக்டர் சொக்கலிங்கமும்.

தற்போது குடி இருக்கும் வீட்டை காலி செய்துவிட்டு வேறு வீடு மாறுமாறு சொன்னதோடு, அவருக்குத் தெரிந்த ஒரு வீட்டு ஓனர் விலாசமும் தந்து, "போகிற வழிலதான் இருக்கு வீடு, பார்த்துட்டுப் போயிடுங்க.." என்றும் ஊக்கப்படுத்தினார் மருத்துவர்..

டாக்டர் சொக்கலிங்கம் பரிந்துரைத்த அந்தப் புது வீடு, அது இருந்த சூழல் அனைத்தும் பிரசாத்தின் மனசுக்குப் பிடித்திருந்தது.

×××

"ஏங்க இவ்ளோ லேட்..? டாக்டர் என்ன சொன்னாங்க?" ஆர்வமாகக் கேட்டாள் பிரசாத்தின் மனைவி நந்தினி.

"நம்ம ரெண்டு பேருக்கும் குறையேதும் இல்லைனு சொல்லிட்டாரு."

"அப்படியா.. ரொம்ப சந்தோஷம்.. குறை ஏதும் இல்லைன்னா ஏன் பூச்சி வைக்க மாட்டேங்குது. ஏதாவது டிரீட்மெண்ட் சொன்னாரா? மருந்து மாத்திரை எழுதித் தந்தாரா..?"

"இப்போது மருந்து மாத்திரை எதுவும் வேண்டாம்னு சொல்லிட்டாரு. விடிகாலைல குறைந்தபட்சம், ஒரு முக்கால் மணி நேரம் வாக் போகச் சொன்னாரு.

வெளீல போக முடியலைன்னா வீட்டு மொட்டை மாடீல வாக் போனாலும் போதும்னு சொன்னாரு.."

"அப்பறம் வேற என்ன சொன்னாரு?"

"ரெண்டு சைக்கிள் பாருங்க. அதுக்குப் பிறகும் கன்சீவ் ஆகலைன்னா ரெண்டு பேரும் வாங்கனு சொன்னாரு.. டாக்டர்.."

"அடடே.. நம்ம ஃப்ளாட் ஓனர், மொட்டை மாடீல தகரக் கூரை போட்டு அடைச்சி, குடோனுக்கு வாடகைக்கு விட்டுட்டாரே...?" உரத்த முணு முணுப் புடன் கவலைப் பட்டாள் நந்தினி.

"அதையெல்லாம் மனசுல வெச்சித்தான் நான் ஒரு வீடு பாத்தேன் டார்லிங். முதல் ஃப்ளோர்ல வீடு. சூப்பர் மொட்டை மாடி..."

×××

நந்தினிக்கும் வீடு பிடித்துவிட்டது .

புது வீட்டு மொட்டைமாடியில் விடி காலை நடைப் பயிற்சி இருவருக்கும் உற்சாகத்தைத் தந்தது.

ஒரு மாதம் விட்டு, அடுத்த மாதம் நாள் தள்ளிப் போக, ப்ரக்னென்சி டெஸ்டில் பாஸிடிவ் வந்தது.

வீட்டின் முன் பிரம்மாண்டமாகக் கிளைபரப்பி நிற்கும் பிரும்மாண்டமான அரசமரத்தடி வினாயகருக்குத் தன் மனைவிக்குத் தெரியாமல் வந்து சிதறுகாய் போட்டான் பிரசாத்.



×××

## வழிவெடுத்தேன் உனக்காக வாராயோ மன்னவனே

வஞ்சியிவள் நெஞ்சினிலே
குடியிருக்க வந்துவிடு

தஞ்சமானேன் உன்னிடம்
தவிக்க விடுகிறாயே

கெஞ்சும் விழிகளால்
காத்திருக்கிறேன் கண்ணாளா

கொஞ்சிட மனமின்றி
விலகிச் செல்கிறாயே

மஞ்சமும் அனலாகிட
வெந்தணலாய் துடிக்கிறேன்

வாஞ்சையோடு நானிருக்கிறேன்
அரவணைத்து மகிழ்ந்திடு

கனவுலகில் சஞ்சரித்து
சஞ்சலமானேன் நினைவுகளாலே

நேரினிலே வந்தென்னை
கரமதைப் பற்றிடு

உள்ளத்தில் உருகியே
நானிங்கு மருகுகிறேன்

உணர்வுகள் உறங்காது
உன்னையே நினைக்கிறது

நேசத்தைத் தந்து
காதலால் கனிந்திடு

வடிவெடுத்தேன் உனக்காக
வாராயோ மன்னவனே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்

# வளமனைத்தும் தந்திடவே
# வா.. வா தாயே!

வளமனைத்தும் தந்திடவே வா வா தாயே!
வற்றாத புகழினையும் வரமாய்த் தா..தா!
களம்காணும் போட்டிகளில் நிறைவாய் வெல்லக்
கனிவுடனே அருள்தந்து காப்பாய் நீயே!
தளமெங்கும் தமிழ்பாடித் தழைக்க நீதான்
தன்னருளைத் தருவாயே தமிழே வாழி!
உளமார வேண்டுகிறேன் உன்னை எண்ணி!
உயர்வடையச் செய்திடுவா யுலகில் என்னை!

கவிபடைக்கும் ஆற்றலினைத் தருவாய் அம்மா!
கற்றவர்கள் அவைதனிலே முதன்மை யாக்கிப்
புவிபோற்றும் பெருமைதனை அளிப்பாய் தாயே!
புனைகின்ற கவிதையிலே உறைவாய் நீயே!
தெவிட்டாத தமிழமுதைப் பருகி நானும்
திறனோடு தடம்பதிக்க உதவும் தாயே!
நவில்கின்ற கருத்துகளை இளையோர் ஏற்க
நல்வாழ்த்தை அளிப்பாயே பணிந்தேன் உன்னை!

ஆசிரியர் வழித்தடத்தில் நடப்பே னம்மா!
அகம்நிறைவாய்க் கற்றவற்றைத் தொடர்வே னம்மா!
காசினியில் என்கவிதை நிலையாய் நிற்கக்
கருத்தாகச் செறிவாகப் படைப்பேன் தாயே!
மாசின்றிப் படைத்திடவே வழியைக் காட்டும்
மாண்புடைய ஆசானின் பெருமை காப்பேன்!
வீசுகின்ற தென்றலதின் இனிமை போலே
வீசட்டும் வாசிப்போர் மனத்தின் உள்ளே!

ஓசூர் மணிமேகலை





# பிறவி ஊமைகள்

ஒன்றா இரண்டா
ஒருநூறு கவிதைகள்
அவள் அதரங்களில்
அசைந்து குவிகின்றன.

அவனால் அன்றி
அன்னியன் ஒருவனால்
அவற்றை அணுவளவும்
உணர முடிவதில்லை.

அவன் அள்ளியணைத்து
அவளை முத்தமிடும் போதெல்லாம்
அவளது விழிநீர் இப்போதெல்லாம்
அவ்வளவாகச் சுடுவதில்லை.

இனத்தோடு இனத்தை
இணைத்து வைக்கும்
இறைவன் இவர்களுக்கிட்ட பெயர்
பிறவி ஊமைகள்.

எஸ். ஏ. கப்பார்
(இலங்கை)

# தெய்வம்

**ஆர்.சாந்தி**, தூத்துக்குடி

திருநெல்வேலியிலிருந்து சென்னை சென்று கொண்டிருக்கும் விரைவு ரயில்.

'காஃபி காஃபி டீ டீ சார்....' காஃபிக்காரரின் குரலும்,

'மல்லிப்பூ.. பிச்சிப்பூ.. ஃப்ரெஷ் -ஆ இருக்கும்மா... நூறு பூ முப்பது ரூபா... வாங்கிக்கோம்மா..' பூப்போல மலர்ந்த முகத்தோடு கூவிய பூக்காரப் பெண்ணின் குரலும், ரயிலில் தொடர்ந்து கேட்டது.

சென்னையிலிருக்கும் அக்கா வீட்டுக்கு, அர்ச்சனா தனது கணவன் ராகவன், குழந்தை வந்தனாவோடு சென்று கொண்டிருந்தாள். மயக்கும் மாலை நேரம்.. மங்கிய இளஞ்சூரியனை மறைத்தும், மறைக்காமலும் விரைந்த மேகத் திட்டுகள், சன்னல் வழியாக வந்த மழைக்காற்று, ரோட்டோர மரங்களில் கொஞ்சிக் கொண்டிருக்கும் பறவைக் கூட்டமெனத் துள்ளிக் குதிக்கும் இயற்கையை ரசித்துக் கொண்டே வந்தாள் அர்ச்சனா.

இடையிடையே, மடியில் தூங்கிக் கொண்டிருந்த தனது செல்ல மகளின் முகத்தையும் ரசித்துக் கொண்டாள். குண்டுக் கன்னம், கூர்நாசியென அழகே யுருவாகப் பிறந்தவள் வந்தனா. அழகாக இருப்பதால் மட்டுமல்ல.. பெண் குழந்தைகளென்றாலே பெற்றவர்களுக்கு பிரியம் அதிகம்தானே....? ராகவ னும், அர்ச்சனாவும் வந்தனாவை உயிராக நேசித்தனர்.



ட்ரெய்ன் விருதுநகர் சந்திப்பில் நின்றது. ரயில் பயணம் என்றாலே இரண்டாம் வகுப்பில் பயணம் செய்வது அர்ச்சனாவிற்குப் பிடிக்கும். விருதுநகர் ஸ்டேஷனில் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டேயிருந்த அர்ச்சனா திரும்பிப் பார்த்தபோது அனைத்து இருக்கைகளும் நிறைந்து விட்டதைக் கண்டாள்.

அப்போது தனியாக ஒரு பெண் வந்து எதிர் ஸீட்டில் உட்கார்ந்தாள். பார்த்த நொடியிலேயே அந்தப் பெண்ணை அர்ச்சனாவிற்குப் பிடிக்கவில்லை.

'என்னங்க, நீங்க சன்னலோர சீட்டுக்கு மாறி உட்காருங்க.. வந்தனாவை மடியில வச்சிக்கோங்க..' இவ்வளவு நேரம் நார்மலாக பேசிக் கொண்டு வந்த அர்ச்சனா வின் முகம் திடீரென மாறியதைக் கண்ட ராகவன் யோசித்தான்.

'என்னாச்சுப்பா..? திடீர்னு ஏதோ போலப் பேசற...?' மெதுவாகக் கேட்டான்.

'ஒண்ணுமில்லைங்க, நீங்க படுங்க... இந்தப் பொண் வந்த நேரத்திலேருந்து உங்களை அடிக்கடி பாக்கறா... சே...'

'அவ பார்த்தாப் பார்க்கட்டும். நான் எந்தப் பொண்ணையும் பாக்க மாட்டேன்டா..' அர்ச்சனாவின் இடுப்பைக் கிள்ளினான் ராகவன்.

'ம்ம்.. இதென்ன விளை யாட்டு..? நீங்க சாப்பிடுங்க..' பார்சலைப் பிரித்தாள் அர்ச்சனா. அப்போது அர்ச்சனாவின் தண்ணீர்ப் பாட்டில் கீழே

விழுந்தது. பாட்டிலை எடுக்க ராகவன் குனிந்தபோது, பாட்டிலை எடுத்து நீட்டினாள் எதிர் ஸீட்டுக்கு புதிதாய் வந்த பெண்.

'தேங்க்ஸ்..' அவளிடம் பாட்டிலை வாங்கிய ராகவன், அப்போதுதான் அந்தப் பெண்ணைப் பார்த்தான். முதன்முறையாகப் பார்க்கும் பெண்ணிடம் ஏன் அர்ச்சனா கோபப்படறா..' ராகவன் யோசித்தான்.

சாப்பிட்டுப் படுக்கத் தயாரானபோது,

'என் பேரு சங்கீதா. செக்ரட்டேரியட்ல வேலை பாக்கறேன்.. நீங்க...?' அர்ச்சனா விடம் தானாகவே வலிய வந்து அறிமுகப்படுத்திக் கொண்டாள் எதிர் சீட்டுப் பெண்.

'இவ ஏன் என்கிட்டப் பேசறா..?' எரிச்சலோடு பார்த்த அர்ச்சனா,

'நான் அர்ச்சனா... ஹோம் இன்ஜினியர்..' வெடுக்கென சொல்லிவிட்டு,

'ஏங்க, படுங்க..' ராகவனை அதட்டினாள்.

'இல்ல அச்சுமா, இப்போதான சாப் பிட்டேன்... உடனே படுக்க முடியா தேப்பா..' ராகவன் மொபைலை எடுத்தான்.

'அர்ச்சனா, நான் கொஞ்சம் லேட்டா தூங்கலாம்னு நெனைச்சேன். தப்பா நினைக்காதீங்க. உங்களுக்கும் தூக்கம் வரலைன்னா, நாம கொஞ்ச நேரம் பேசிட்டுருக்கலாமா...?' சங்கீதா கேட்க,

'இப்போ பேச்சு ஒண்ணுதான் குறைச்சல்.. அதும் உன்கூட....' கடுப்பானாள் அர்ச்சனா.

அதற்குள் சங்கீதா, வந்தனாவிடம்,

'ஹாய் செல்லம், உங்க பேரென்ன...?' கையை நீட்டினாள்.

'எம்பேரு வந்தனா.. உங்க பேரென்ன ஆன்ட்டி...?' மழலையில் கொஞ்சியது வந்தனா.

'மூஞ்சியைப் பாரு... செல்லமாமே...' கடுப்பான அர்ச்சனா

'வந்தனா, அப்பாகூடப் போய் உட்காரு..' குரலை உயர்த்தினாள். அவளது எரிச்சலைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத சங்கீதா,

'அர்ச்சனா, எனக்கு அம்மா மட்டும் தான்.. எங்கப்பா நான் சின்னப்பிள்ளையா இருக்கும்போதே இறந்துட்டார்.. கஷ்டப் பட்டுப் படிச்சி இன்னைக்கு இந்த நிலைக்கு உயர்ந்திருக்கேன்.. கடவுள் ஆசீர்வாதம்தான்.. சரி.. நீங்க ஏதும் ஆன்லைன் வேலை பாக்கறீங்களா....?'

'என்ன இவ, பெர்சனல் மேட்டர்லாம் கேட்டு அனாத்தறா...?' பதில் சொல்லாமல் அர்ச்சனா யோசிக்க,

'அர்ச்சனா, அவங்க உன்கிட்டத்தான் கேக்கறாங்க... நீ பேசாம இருக்க..?' சங்கீதாவைப் பார்க்க பாவமாக இருந்ததால், ராகவன் கேட்க, அர்ச்சனா அவனை முறைத்துப் பார்த்தாள்.

'எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு.. கொஞ்சம் அமைதியா இருங்க.' அர்ச்சனா, சங்கீதாவின் முகத்திலடித்தாற்போல பேசினாள். முகம் வாடியது சங்கீதாவிற்கு. தனக்கான பெர்த்தில் படுத்தாள் சங்கீதா. அர்ச்சனா படுத்தபின்னும், எதிர் பெர்த்தில் படுத்திருந்த சங்கீதாவை அடிக்கடி எழுந்து

பார்த்தாள்.

'டமார்..' பயங்கரமான சத்தம்.
'ஐயோ அம்மா, காப்பாத்துங்க...'
'கடவுளே முருகா..'
எங்கும் கூக்குரல்..

தூங்கிக் கொண்டிருந்த பயணிகள் நிதானிப்பதற்குள், எங்கும் மரண ஓலம்.. தாம்பரம் அருகே ட்ரெயின் சென்றபோது தண்டவாள விரிசலில் ஏற்பட்ட விபத்து. தூக்கி வீசப்பட்ட பயணிகள், ஒரே களேபரம்.

யாரோ தன்னைத் தூக்கி வீசியதைப் போல உணர்ந்த அர்ச்சனா அந்நொடியே மயங்கி விட்டாள். அதே வேகத்தில் விழுந்தான் ராகவன்.. ஆனால் மயக்க மடையவில்லை. கைகால்களை அசைக்க முடியவில்லை. ஆனால் நொடியில் சுதாரித்துக் கொண்டு,

'ஐயோ, அர்ச்சனா, என் பிள்ளை வந்தனா..' கதறினான். சிறிது தூரத்தில் விழுந்து கிடந்தாள் வந்தனா பாப்பா.

'வந்தனா, எஞ்செல்லமே..' பிடிமானம் தேடி, அவனது கைகள் துழாவியது. அருகில் கிடந்த உடல்களையும், மற்றவர்களின் கதறலையும் பார்க்கையில் தலை சுற்றியது.

அதேநேரத்தில்,

'ஐயோ, அம்மா..' கத்திக் கொண்டே மெதுவாக அசைந்த அர்ச்சனா, 'அம்மாடி, ஆக்சிடெண்ட்டா, ராகவன் எங்க...? ஐயோ எம்பிள்ளை.. வந்தனா.. வந்தனாவைக் காணோமே...' அலறிக் கொண்டே எழுந்து கொள்ள முயற்சித்தவளை நோக்கி, ஒரு கை நீண்டது. அந்தக் கைக்குச் சொந்தக்காரரைப் பார்ப்பதற்குள் மீண்டும் மயக்கமானாள் அர்ச்சனா.

இதற்குள் ஆம்புலன்ஸ், போலீஸ், தன்னார்வலர்கள், மீடியா என நகர இடமில்லாமல், அப்பகுதியே நிரம்பி வழிந்தது. மருத்துவ உதவியாளர்கள் உதவியோடு அர்ச்சனாவை ஆம்புலன்சில் ஏற்றிய சங்கீதா, அடுத்து ராகவனையும், வந்தனாவையும் தேடினாள். பதட்டத்தோடு தேடியபோது, குழந்தை வந்தனா கண்ணில்பட்டது ..

'பாப்பா, ஆண்டவா, குழந்தைக்கு ஏனிந்த சோதனை..?' பதறிக் கொண்டே வந்தனாவைத் தூக்கினாள். குழந்தையின் கால் எலும்பு முறிந்தது போலத் தொங்கியது. குழந்தைக்குக் மூச்சுத் திணறலும் இருந்தது. அவளையும் ஆம்புலன்சில் ஏற்றினாள்.

'ஐயோ, அர்ச்சனாவோட வீட்டுக் காரரைக் காணோமே.. அவருக்கு என்னாச்சோ..' ராகவனைத் தேடிக் கண்டு பிடித்துச் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தாள் சங்கீதா.

அர்ச்சனா குடும்பத்தைக் காப்பாற்று வதில் அக்கறை காட்டியதில் தன்னை மறந்து விட்ட சங்கீதா, இந்த நொடியில் தான் தன்னிலை உணர்ந்தாள். காலில் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. கைகால் மூட்டு, கன்னங்களில் சிராய்ப்பு.. ஆனால் எனக்கு சின்னக் காயம்தான்.. இங்கே நிறையப் பேர் உயிருக்குப் போராடறாங்களே... அவங்களை யெல்லாம் காப்பாத்தறது முக்கியமாச்சே.. உயிருக்குப் போராடும் மற்ற பயணிகளைக் காப்பாற்ற ஆரம்பித்தாள் சங்கீதா.

'மேடம், உங்க கால்ல ரத்தம் கொட்டுது. வாங்க, நீங்களும் ஆம்புலன்ஸ்ல ஏறுங்க... உங்களுக்கும் ட்ரீட்மெண்ட்

கொடுக்கணும்...' நர்ஸ் சங்கீதாவை அழைத்தாள்.

அரசு மருத்துவமனை அல்லோகல்லப் பட்டுக் கொண்டிருந்தது. சிகிச்சை எடுத்துக் கொண்ட சங்கீதாவின் மனம் ஏனோ அர்ச்சனாவைத் தேடியது. 'பாவம் அர்ச்சனா, குழந்தையைப் பார்த்தாங்களோ என்னவோ, அவங்க வீட்டுக்காரர் எப்படி இருக்காரோ..'

அதற்குள் ரயில் விபத்து பயணிகளின் பெயர்ப் பட்டியலை வார்டுகளில் ஒட்டும் பணியில் மருத்துவமனை ஊழியர்கள் ஈடுபட்டனர். தகவலறிந்து அவரவரின் உறவினர்கள் வந்து சேர்ந்ததால், மருத்துவ மனையில் கூட்டம் வழிய ஆரம்பித்தது.

அர்ச்சனாவின் கணவர் பெயர் தெரியாததால் அவனை ஒவ்வொரு வார்டாகப் போய்த் தேடிய. சங்கீதா, கடைசியாக ராகவனையும், குழந்தைகள் வார்டில் வந்தனாவையும் கண்டு பிடித்தாள்.

'சங்கீதா, நீங்க நல்லாருக்கீங்களா...? என்னோட அர்ச்சனா, என் குழந்தை யாரையாவது பார்த்தீங்களா...?' வலியோடு ராகவன் பேச,

'சார், அர்ச்சனா, குழந்தை ரெண்டு பேரையும் சிகிச்சைக்குச் சேர்த்தாச்சு. அவங்க நல்லாருக்காங்க. உங்களையும் பார்த்திடலாம்னுதான் தேடி வந்தேன் '

'ரொம்ப நன்றிங்க.. என் உயிருள்ள வரைக்கும் இந்த உதவியை மறக்க மாட்டேன்.. நீங்க மட்டும் உதவி செய்யலைன்னா, நாங்க என்னா யிருப்போமோ...' கும்பிட்டான் ராகவன்.

'ஏன் சார் ரொம்பப் பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க...? மனுசனாப் பொறந்திட்டா, நாலு பேருக்கு உதவி செய்ற மனசு வேணும்.. அதுவும் ஆபத்துக் காலத்தில, இதுபோன்ற நேரத்தில கூட உதவி செய்யலைன்னா எப்படி..? நான் வேணா நர்ஸ் கிட்ட சொல்லி அர்ச்சனாவைப் பார்க்க உங்களைக் கூட்டிட்டுப் போகட்டுமா...?'

'இல்லை சங்கீதா, பேஷண்டைத் தனிப்பட்ட முறையில கூட்டிட்டுப் போகச் சம்மதிக்க மாட்டாங்க...' ராகவன் சொல்லியும்,

சங்கீதா நர்ஸிடம் சாமர்த்தியமாகப் பேசி, ராகவனை வீல்சேரில் வைத்து முதலில் வந்தனாவையும், அடுத்து அர்ச்சனாவையும் பார்க்க ஏற்பாடு செய்தாள். அர்ச்சனாவிற்கு சிறிதளவிலான காயமென்பதால் சிகிச்சை பெற்றுப் படுத்திருந்தாள்...

ராகவனைப் பார்த்தவுடன்,

'என்னங்க... நல்லா இருக்கீங்களா...? பாப்பாவைப் பாத்தீங்களா...? நல்லா இருக்காளா...? நான் உடனே பாப்பாவைப் பாக்கணும்ங்க...' அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையிலும், அவனைப் பார்த்த சந்தோசத்திலும் படபடத்தாள் அர்ச்சனா.

'கவலைப்படாதப்பா... நம்ம புள்ளைக்கு ஏதும் ஆகல. அவளும் ட்ரீட்மெண்ட்ல இருக்கா.. ஆண்டவனாப் பாத்துத்தான் சங்கீதாவை நமக்கு ஹெல்ப் பண்ண அனுப்பியிருக்கான். இவங்கதான் நம்மளையெல்லாம் காப் பாத்தியிருக்காங்க.. இப்பவும் என்னை வந்து பார்த்திட்டு, அப்படியே உன்னைப் பார்க்கக் கூட்டிட்டு வந்தாங்க...

இவங்களுக்குத்தான் நன்றி சொல்லணும்…'

அங்கு சங்கீதா நிற்பதையே அப்போது தான் பார்த்தாள் அர்ச்சனா.

'ஆக்சிடென்ட் நடந்த கொஞ்ச நேரத்துக்குள்ள நான் எழுந்திட்டேன் அர்ச்சனா… எனக்கு பெரிசா அடியேது மில்ல.. அதனால எல்லாரையும் காப்பாத்த ஆரம்பிச்சேன். உங்களைத் தேடினேன்… கடவுள் புண்ணியத்தில் உங்க மூணு பேருக்கும் ஏதும் ஆகல..'

"என்னை மன்னிச்சிடுங்க சங்கீதா… உங்களைத் தப்பா நினைச் சிட்டேன். நீங்க 'திருநங்கை' என்பதை உங்களைப் பார்த்தவுடன் புரிஞ்சிக்கிட்டேன். திருநங்கைன்ற ஒரே காரணத்துக்காகத்தான் உங்களோடு பேச எனக்கு விருப்பமில்லை. ஆனா, நான் கோபப்பட்டுப் பேசியதையெல்லாம் மனசில வச்சுக்காம, எங்க எல்லோரையும் காப்பாத்திருக்கீங்க. உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு எனக்குத் தெரில"

"மன்னிப்பெல்லாம் கேட்காதீங்க அர்ச்சனா… விடுங்க… நீங்க மட்டும்னு இல்லை… சமுதாயத்திலே நிறையபேர் இப்படித்தான் நினைக்கறாங்க.. திருநங்கைன்னா அப்படி, இப்படிதான் இருப்பாங்கன்னு சிலர் நினைப்பாங்க. என்னதான் நாங்க படிச்சி முன்னேறி இருந்தாலும், எங்களுக்கான அங்கீகா ரத்தைத் தரமாட்டாங்க… ஆனா, எங்களையும் ஆண்டவன்தானே படைச் சிருக்கான்.. எங்களுக்குள்ளும் ஈர மனசு இருக்கு. குடும்பம்னா என்ன, அதுல இருக்கற கஷ்ட, நஷ்டம்னா என்னன்னு எல்லாமே எங்களுக்கும் தெரியும். ஏன்னா நாங்களும் நல்ல குடும்பத்தில நல்லமாதிரி பிறந்ததுதானே இப்படியான உடல் மாற்றத்துக்கு ஆளாகறோம்.. ஆனா நான் இதை ஒரு குறையாவே நினைக்கல… எம்பிஏ முடிச்சிட்டு செக்ரட்டேரியட்ல வேலை பாக்கறேனா…? அதனால முடிஞ்சவரை எங்களை போல உள்ள வங்களுக்கு தேவையான உதவி செய் றேன்… அவ்ளோதான்… ஓகே அர்ச்சனா, நான் வந்தனா பாப்பாவைப் பார்த்திட்டுக் கிளம்பறேன். உங்க உடம்பைக் கவனிச் சுக்கோங்க…'

"ஸாரி சங்கீதா.. உங்ககிட்ட நான் அவ்ளோ வெறுப்பா பேசிருக்கக் கூடாது. தயவு செய்து நான் உங்ககிட்ட நடந்துக்கிட்டதையெல்லாம் மனசில வச்சிக்காதீங்க… உங்க நம்பர் கொடுங்க… அடிக்கடி நாம பேசுவோம்.. நல்ல பிரெண்ட்ஸ்ஸா இருப்போம்… நானும் உங்க சமூகத்துக்கு தேவைப்படற உதவிகளையெல்லாம், முடிஞ்ச அளவு செய்றேன்…. அதுக்கு எனக்கு அனுமதி கொடுங்க சங்கீதா" கண்ணீர் வழிய, வார்த்தைகளைக் கோர்த்தாள் அர்ச்சனா.

'ஓ அப்படியா..? ரொம்ப சந்தோசம் அச்சுமா…' சங்கீதாவின் பதிலில் மனம் நிறைந்தது ராகவனுக்கு.

இதற்கிடையில், விபத்தில் சிக்கிய நிறைய பயணிகளைக் காப்பாற்றத் சங்கீதா துடிப்புடன் செயல்பட்டதை அறிந்து சங்கீதாவைப் பேட்டி எடுக்க மீடியாத் தோழர்கள் அவளைச் சூழ்ந்தனர். சங்கீதாவைப் பார்க்கும்போது கோவிலில் தெய்வத்தைப் பார்ப்பது போலிருந்தது அர்ச்சனாவிற்கு.. அதை ஆமோதிப்பது போல எங்கோ கோவில் மணி ஒலித்தது.

# நினைவுகள்

உடைந்த கதவைத்
திறக்கலாம்.
காற்றும் லேசான
வெப்பமும் தூசியும்
புழுக்கை நாற்றமும்
தவிர,
வேறெதுவுமில்லை.
என்பது சரியில்லை.

என்றோ செத்துப்போன
அம்மாவின்
கருப்பு வெள்ளைப்
படம்கூட
உளுத்துப்போய்
உயிரற்றுக் கிடந்தது
மூலையில்.

அப்பா -
அறிந்தவரை அப்பாவாய்
இருந்ததில்லை.
எனினும்
சிங்கத்தின் கர்ஜனை
எல்லாமிழந்த பின்னும்
மெலிதாய் இருப்பதில்லை.

கடைசிவரை
முடங்கிக் கிடந்த
பாட்டியின் முனகல்
இன்னும் கேட்கிறது
வாஞ்சையாய்-

அண்ணனுக்குப் பயந்து
ஒளிந்துகொண்ட
கூடத்துத் தூண்கள்
சிதிலமானாலும்
நேசமும் அறிந்நிருந்தது.

கிழக்குச் சுவர்
இரண்டாகப் பிளந்து
கிடந்தது.

அதன்மேல் ஏறித்தான்
அடுத்தவீட்டுக்
கொய்யா திருடியது.
பின்னாளில்
பத்மாவிற்காய்த்
தாண்டிக் குதித்து
சிராய்த்துக் கொண்டது.

இன்னொருநாளில்
முத்தமிட்டு முயங்கிப்
புதுப்பாடம் கற்ற
கிணற்றடி
உருக்குலைந்த
பரிதாபம்
சொல்லிமாளாது.

அவிழ்ந்த கூந்தல்
பூவாசக் கிறக்கம்
இன்னபிற
இன்னும் உலவும்
அதிசயம்-

பேசாமல் திருப்பிவிட
முடிந்ததில்லை
குரல்களும் வாசமும்
துரத்தித் துன்புறுத்தும்
கடல்தாண்டியும்.

நா.விச்வநாதன்

**தாபம் தாபம் தாபம்**

விம்மிப் புடைத்த
தண்முலைக்காய்
ஏங்குவதில்லை-
மெல்லிய காமம்கூட
இல்லை.
மனைவியிடம்
சம்போக சுகம்
வைத்து
நெடுங்காலமாயிற்று-

அடிக்கடி
கண்களால் அழைக்கும்
எதிர்வீட்டு தேவகிமேல்
தாபமில்லை-
நேற்றிரவு பார்த்த
நீலப் படத்தில்
இதுவரை கண்டிராத
வக்கிரக் கோணங்கள்
அலைக் கழித்ததில்லை-

ஆண்டாள் சூடிய
மாலைக்காய் ஏங்கிய
கண்ணனின் காதல்
காவியங்களில் பேசப்படும்-
பக்தியாய்க் கோயில்களில்
பேணப்படும்.

இந்த ஓடலும் தேடலும்
யோசித்துப் பார்த்தால்
அற்பமாய் தெரிகிறது.

புணர்தல் புரிந்தவர்க்கு
இறகுகள் போதும்
வருட-
,,,

நா.விச்வநாதன்.

# காலமே கனகம்

காலத்தை கையாண்டால் காலமே கனகம்!
காலத்தை தொலைத்தால் காலமோ கடனாம்!
காலமிது நமக்கெனவே காலத்தை போற்றிடின்
காலமே நம்மை கைதூக்கியே போற்றிடும்!

காந்தியின் இடையுடன் காலமும் நடந்தது!
கால்களுடன் காலத்திற்குப் போட்டியும் இருந்தது!
கருமமே கண்ணெனக் காலத்தினை மதித்தார்!
கருத்தினில் நிலைத்திடும் காலமாகி (நி)(வெ)ன்றார்!

எவ்வினை உலகில் எதிர்வரும் நிலையிலும்
அவ்வினை முடித்திட அவசியம் காலமே!
காரியம் யாவுமே காலத்தின் கைகளில்!
காலத்தோடு செய்திடில் வாகையோ நம்மில்!

ஓயாது உழைப்புடன் ஓடிடும் கடிகாரம்!
தேயாத நிலவாய் உயரத்தில் நின்றிடும்!
கவனிக்கும் வகையில் கடிகாரத்தின் இடம்!
அவனிக்குச் சொல்லும் காலமும் உழைப்பும்!


மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.




# போற்று...!

இயற்கையைப் போற்று!
இயற்கையைப் போற்று!
இன்பமாய் உலகில்
வாழ்ந்திடவே!
செயற்கையில் வீழ்ந்து
செகத்தை அழிந்திடச்
சிந்தனை என்றும்
கொள்ளாதே!

மலையினைக் காத்து
மழையினைப் பெறவே
மரஞ்செடி கொடிகளை
வளர்த்திடுக!
விளைநிலம் காத்து
விளைச்சலைப் பெருக்கி
மக்களின் பசியினைப்
போக்கிடுக!

ஆற்றுநீர் தன்னை
அனுதினம் காக்க
ஆற்று மணலினை அள்ளாதீர்
காற்றினை மாசுக்கள்
செய்யாமல் இருந்திட
கனரக வாகனம் குறைப்பீரே!

வயலினை அழித்தே
மனைகள் கட்டிட
வளநிலம் கணமும்
அழிக்காதீர்!
புயலின் மழையோ
புகுமிடம் தன்னைப்
புவியோர் வாழிடம் ஆக்காதீர்!

இயற்கை தன்னை
என்றுமே மக்காள்!
கெடவே நீங்கள் செய்யாதீர்
இயற்கை யோடு
இணைந்த வாழ்வே
என்றென்றும் புவியில்
நிலமாக்கும்!


கெங்கை பாலதா
(எ) வ.பாலகிருஷ்ணன்,
கோதைமங்கலம் - 624 618,

# வாழ்க்கை... ஒரு வழிப் பாதை

**புதுவைத்தமிழ்நெஞ்சன்**

மனதுக்குள் இருள்
எப்படி வரும்
வாழ்க்கையில் பரிதி?

வெளிச்சத்தை
நாட்டில், வீட்டில் தேடாதே
உனக்குள் தேடு

வானத்தில் மின்னலாய்
பரிதி, நிலா,
விண்மீன்கள்

மனதுக்குள்
அன்பு,அறிவு
அதுதான் வெளிச்சம்

• • •

நீ...
புத்தனைப் போல

நான்...
சித்தனைப் போல

மக்கள்
பித்தனைப் போல

நீ
நான்
மக்கள்
எல்லோரும் சேர்ந்ததுதான்
இந்த வாழ்க்கை.

• • •

இந்த
வாழ்க்கை
ஒரு வழிப் பாதை தான்..

திரும்பிப் போக முடியாது.
வழியும் கிடையாது.

எதையும்
நேருக்கு நேர்
சந்தித்துக் கொண்டே போ.
எல்லாவற்றையும்
சுவைத்துக் கொண்டே செல்.

நாளை
நாளை என்று
நாளை தள்ளிப் போடாதே!

இன்று என்பது எதிர்காலம்
இப்போது என்பதே நிகழ்காலம்
அதுவே,
நமக்கான நேரம்.

ஏனெனில்?
இந்த வாழ்க்கை
ஒரு வழிப் பாதை

• • •

எல்லாச் சொற்களும்
என்னிடம் இருந்தன
சில பேசின
சில நடித்தன
சில உறங்கின
சில விழுந்திருந்தன.

ஒரே ஒரு செயல்
எல்லாச் சொற்களையும்
வீழ்த்திவிட்டு
வெற்றிக் கொடி நாட்டியது
தன்னை உலகிற்கு
யார் எனக் காட்டியது

• • •

கடல் நீராய்
நீ

தாகத்தோடு
நான்

• • •

நிழலில்
பதுங்கிக் கொள்கிறது
வெய்யில்

கனவில்
விழித்துக் கொள்கிறது
ஆழ்மனம்

இருள்போர்வைப்
போர்த்திக் கொள்கிறது
பரிதி

இமைக்கதவை
சாத்திக் கொள்கிறது
நெஞ்சம்

• • •

என்
விருப்பத்திற்கு மாறாக
வேறாக
எதையும்
சொல்லி விடாதே!

என் வாழ்வில்
கொள்ளி இடாதே!

உடைந்து விடுவேன்
நான்



# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (8)



**அன்பு செல்வி சுப்புராஜூ**
தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
பட்டாபிராம், சென்னை

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.**

குறள்

*பெறத் தகுந்த செல்வங்களில், அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளை விட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை. உலகத்தின் இன்பத்தை மொத்தமாக அள்ளிக் கொடுத்தாலும், குழந்தைகளின் வழியாகக் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடிணை கிடையாது. வரமாம் அத்தகுக் குழந்தைகளைப் பற்றி எண்ணாதவர்கள், பேசாதவர்கள் எவருள்ளர்?*

*குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட 2021 ஆம் ஆண்டு, குழந்தைகளைக் கொண்டாடும் விதமாக, தொன்னூறு படைப்பாளர்கள் எழுதிய மழலையர் குறித்த தன்முனைக் கவிதைகளைத் தொகுத்து 'இங்காவின் ஆலாபனைகள்' (தொகுப்பாசியர்கள் அன்புச் செல்வி சுப்புராஜூ, கன்னிக்கோவில் இராஜா) புத்தகம் அழ.வள்ளியப்பா ஐயா அவர்களின் பிறந்தநாளாம் நவம்பர் ஏழாம் தேதி நூலேணி பதிப்பகம் வழியாக வெளியீடானது. குழந்தைகளைக் கொண்டாடுகிற இத்தொகுப்பில் இருந்து சில கவிதைகள் உங்களுக்காக...*

முன்னும் பின்னும் ஆடி
அன்பை நெய்கிறது
அம்மா ஆட்டும்
ஆனந்தத் தொட்டில்

**- அமுதா தமிழ்நாடன்**

எவ்வளவு நீள உலகம்
எவர் அளந்தார்
பிள்ளையின் கைகள்
பூமியை அளப்பதற்கு முன்..

**- ராசி அழகப்பன்**

கன்னம் தொட்டு
பறக்கிற பட்டாம்பூச்சி
அங்கும் இங்கும் அலையும்
குழந்தைகளின் கண்கள்

**- இளையபாரதி கந்தகப்பூக்கள்**

குழந்தைகள் பேச
எப்போதும் சலிப்பதில்லை
நாம் தான்
சலித்துக் கொள்கிறோம்

**-அனுராஜ்**

*குழந்தைகளின் உலகை பெரியவர்கள் உணர்ந்து, படைத்த திகட்டாத தீஞ்சுவைக் கவிதைகள் வாசிக்கும் பொழுதே தித்திப்பாய் நெஞ்சம் நிறைகிறது அல்லவா?*

குழந்தைகளே தன்முனைக் கவிதைகள் எழுதினால் அவ்வின்பத்தினை பகிர்வதற்கு சொல்லேது?

**தம்மின் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

தன்னை விடத் தனது குழந்தைகள் அறிவு பெறுவது உலகின் அனைத்து உயிருக் கும் இனிமையானதாகும்.

'அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்' வழியாக குழந்தைகளுக்கு கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு ஆகிய என்னால் தன்முனைக் கவிதைகள் எழுதுவதற்கான பயிற்சி 2021 ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அளிக்கப்பட்டு வந்தது. அன்புநிறை குழந்தைகளின் உலகமானது மிகவும் தனித்துவமானது. ஒவ்வொரு குழந்தையிடமும் ஒவ்வொரு உலகம் பொதிந்து இருக்கிறது. பயிற்சியின் பொழுது, கூர்நோக்குடன் வித்தியாசமான கருத்துகளுடன் எழுதிய குழந்தைகளின் கவிதைகளின் தொகுப்பே 'அ' - அன்பின் அரிச்சுவடி' நூலாக 2022 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வெளிவந்தது. இந்நூலில் மொத்தம் 25 இளம் படைப்பாளர்களின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன.

**காக்கை குருவிகள்**
**எங்களின் நண்பர்கள்**
**படங்களில் மட்டும் பார்ப்போமா**
**அச்சத்துடன் நாங்கள்**

**-சு.பிரவந்திகா**

குழந்தைகளின் இயல்போடு, எதிர்காலம் குறித்து விழிப்புணர்வு ஊட்டும் பிரவந்தி காவின் கவிதை ஒருவிதம் எனில் நாள் முழுவதும் ஓய்வே இல்லாமல் உழைக்கும் தாயைக் குறித்து பா. அனிஸ்குமார் எழுதியுள்ள கவிதை அன்பின் அச்சாரம்.

**ஓய்வின்றி உழைக்கிறாள்**
**இல்லத்தில் அம்மா**
**ஊதியமாகக் கேட்கிறாள்**
**எங்களின் அன்பு**

**-பா. அனிஸ்குமார்**

மழை பொழிவது என்பது சிலருக்கு மகிழ்ச்சி. சிலருக்கு அவலம். சாலை மற்றும் பேருந்து வசதிகள் சரிவர செய்யப்படாத இடங்கள் இன்னுமே உள்ள சூழலில், மாண வர்களின் நிலை மழை பொழிந்தால், பள்ளி செல்லவும் இயலாது தவிக்கும்படியே உள் ளது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது பா.பு. சரவணபாண்டியனின் கவிதை

**பொழியும் மழை**
**ஆறாய் ஓடுகிறது**
**பள்ளிக்கு செல்லத்**
**தவிக்கும் மாணவர்கள்**

**-பா.பு.சரவணபாண்டியன்**

**கண்ணில் தூக்கம்**
**தூக்கமாக வருகிறது**
**பணி முடித்து**
**எப்போது வருவாய் அம்மா?**

ஷமீஹா ஷம்ரீன் எழுதியுள்ள இக்கவிதை பிரதிபலிக்கும் விடையறியா உணர்வுகளுக்கு வடிகால் அளிப்பது யார்?

**வகுப்பு மாறிச்**
**சென்றும் மாறவில்லை**
**மேசையில் செதுக்கிய**
**என் பெயர்**

ஷஸ்மியா யாகூப் எழுதியுள்ள கவிதையுடனேயே நாமும் நமது குழந்தைப் பருவத்திற்கு பயணப்படுகிறோம்.

விரும்பியதை எல்லாம்
வாங்கித் தருவதில்லை
வேண்டிமதை மட்டும்
வாங்கித் தருகின்றனர்

-தோ.ம. மோனிகா

*எழுதியுள்ள கவிதை பெரியவர்களின் மனக் கண்ணாடியை விரித்துக் காட்டுகிறது.*

புத்தகங்களை வாசிக்க
மட்டுமே எடுத்தேன்
வைக்க இயலாமல்
நேசிக்கத் தொடங்கினேன்

**-க.ம.அல் வாஃபிகா**

*புத்தகங்கள் வாசிப்பது அருகி வருகிறது என்பதை மறுத்து, வளரும் தலைமுறை யினரிடையே வாசிப்பை நேசிப்பது பெருகி வருகிறது என்கிறார்.*

மாட்டுப் பொங்கல்
கோலாகலக் கொண்டாட்டம்
இறைச்சிக் கடைகளில்
அலைமோதும் கூட்டம்

*-தா.உ. ஜான்வீயின் கவிதை நடைமு-றை வாழ்வியலை கண் முன்னே நிறுத்துகிறது. இயற்கையின் மீதான குழந்தைகளின் பார்வையும், பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வமும் வளர்ந்து வருகி றது என்பதற்கு பின்வரும் கவிதைகளே உதாரணம்.*

குப்பை மேட்டில்
முளைத்தச் செடிகள்
பொக்கிசமாய் பாதுகாத்து
பராமரிக்கும் தாத்தா

**தா.உ. பூர்வி**

வானில் மகிழ்வாய்
பறக்கும் பறவை
தன் எச்சத்தால்
உருவாக்கியது காட்டை...

**- செ.ப. கமல்சங்கர்**

மண்ணைத் தொடும் மழை
தாகத்தைப் போக்கும்
சிக்கனம் தேவை
மனிதனுக்கு இக்கணம்.

**-செ.ஸ்ரீலேகா**

மரங்களை வளர்த்து
மண் அரிப்பைத் தடுப்போம்
மழையினைப் பெற்று
மகிழ்வுடன் வாழ்வோம்

**-அ. தமிழ் இனியன்**

சன்னலைத் திறந்தேன்
மின்மினிப் பூச்சி பறந்தது
மண்ணில் நட்சத்திரங்களைப்
பார்த்து வியந்து நின்றேன்

**-ஆ. ஹெர்மஸ் ஜெஸ்வின்**

*குழந்தைகள் உலகம் குறித்து பெரியோ-ர் களும், இன்றைய உலகைக் குறித்த குழந்தைகளின் பார்வைகளையும் இந்த இரண்டு நூல்களின் வழியாகக் கண்டோம். தன்முனைக் கவிதை வரலாற்றில் ஒரு குழந்தை வெளியிட்ட தனி நூல் குறித்து அடுத்த கட்டுரையில் காண்போம்.*



# சிறுவர் சங்கமம்





## சிங்கத் தம்பி

**ஜீ.மைத்ரேயி,** வந்தவாசி



ஊட்டத்தூரில் மூன்று தலை முறை யாக வாழ்ந்து வந்தார்கள் துளசி குடும்பம். அவர்களின் அப்பா மணி, அம்மா உமா, தாத்தா குப்புசாமி, பாட்டி குப்பம் மாள் என்று ஒரு அழகிய குடும்பம் மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையுடனும், பாசத்து டனும் வாழ்ந்து வந்தார்கள்.

துளசி இரண்டாம் வகுப்பு ஊரிலிருந்து அரசாங்க பள்ளியில் படித்து வந்தாள். அவளுக்கு நிறைய நண்பர்கள் இருந்தன. அதில் ஒருத்தியான கலைக்கு நேற்று தம்பி பிறந்தான் எனப் பள்ளியில் மகிழ்ச்சியாக கூறி அனைவருக்கும் இனிப்பு கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது துளசிக்கு கொடுத்துவிட்டு நான் இனிமேல் பள்ளி விடுமுறை நாளில் உன்னுடன் விளையாட வரமாட்டேன், என்னுடன் விளையாட என் தம்பி இருப்பான் எனக் கூறிக் கொண்டே சென்றாள்.

அதைக் கேட்ட துளசி மிகுந்த வருத்தத்துடன். மாலை வீட்டுக்கு வந்ததி லிருந்து யாருடனும் பேசாமல், தாத்தா பாட்டியுடன் கதை கேட்காமல், கடைத் தெருவுக்கு அழைத்துச் செல்லாமல். தோட் டத்திற்கு சென்று மாமரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தாள். யாருடனும் வெகு நேரமாகியும் பேசவில்லை.

உமா அம்மா, அம்மா என்ன வார்த் தைக்கு 300 தடவை கூப்பிடுவாள். இன்று என்ன நடந்தது என பாட்டியும், அம்மாவும் பேசிக்கொண்டே தோட்டத்திற்குச் சென்றார்கள். மெல்லத் துளசியிடம் பேசத் தொடங்கினார்கள்.

அப்பொழுது அழுது கொண்டே எனக்கு உடனே தம்பி வேண்டும் என உரத்த குரலில் அழத் தொடங்கினாள். அதைக் கேட்ட தாத்தா பயந்து போய் வந்து, என்ன... என்ன என்று கேட்கத் தொடங்கினார். அப்பொழுது தான் கலை கூறியதைக் கூறி மறுபடியும் வேகமாக அழத் தொடங்கினாள்.

அதற்கு பாட்டி 'இவ்வளவு தானே, உனக்கு ஊரில் சித்தப்பா பையன் கண்ணன் இருக் கிறான். அத்தை ம கள் ராணி, மாலா என இரண்டு பேர் இருக்கிறார்கள். நாளைக்கு விடுமு-றை தானே நாம போலாமா? இல்லை அவங்களை இங்க வர சொல்லவா?' எனப் பாட்டி கேட்டார்.

அதற்கு துளசி 'இல்லை பாட்டி, யாரும் வர வேண்டாம். எனக்கு நம்ம வீட்டில் எனக் கென எப்பொழுதும் தம்பி வேண்டும்' என கூறத் தொடங்கினாள். 'சரி... சரி அவ் வளவு தானே, உனது அடுத்தப் பிறந்த நாளுக்கு உன்னுடன் சிங்கம் போலத் தம்பி இருப்பான்' எனக் கூறி பாட்டி

சமாதானம் செய்தார்கள்.

அழுவதை நிறுத்தி 'எனக்கு இப்பொழுது தானே போன புதன் கிழமை தானே பிறந்த நாள்' எனக் கேட்டாள். 'ஆமாம், ஆமாம். அடுத்த ஆண்டு வருமில்ல, அப்பொழுது' எனக் கூறினார்கள்.

உமாக்கு என்ன சொல்வது, செய்வது என தெரியவில்லை. பாட்டி அதற்கு தான் சீக்கிரம் அடுத்த குழந்தை பெற்றுக்கோ என சொல்லும் போது கோபப்பட்டாய். இப்போது பார்த்தாயா என பாட்டி சொல்வது போலவே பாட்டியின் பார்வை உணர்த் தியது உமாக்கு.

துளசி படித்துவிட்டு சாப்பிட அழைத்த போது அப்பாவிடம் 'அப்பா, அப்பா எனக்கு சிங்கத்தம்பி வரப் போறான்' எனக் கூறினாள். ஒன்றும் புரியவில்லை அப்பாக்கு. பாட்டி தான் சொன்னார். 'அம்மா எதைக் குழந்தையிடம் கூறுவது என உனக்குத் தெரியாதா?' என கடிந்து கொண்டார் மணி.

அப்பொழுது தான் மாலை நடந்தவை அனைத்தும் கூறி பெரும் மூச்சு விட்டார் அம்மா உமா. தூங்கச் சென்றவுடன் கதை கேட்காமல் இன்று வரப் போகின்ற தம்பியை பற்றி கேட்டுக்கொண்டே இருந்தாள். 'அது என்ன சிங்கத்தம்பி. எனக் கேட்டாள் தாத்தாவிடம்.

'காட்டுக்கு இராஜா யார்? 'சிங்கம்'. நம் வீட்டுக்கு ஆண் குழந்தை பிறந்தால் அதுதான் இராஜா' எனக் கூறினார். அப்பொழுது உடனே துளசி 'அப்பொழுது நான் யார்' என அப்பாவியாக கேட்டாள். 'நீதான் இந்த வீட்டின் மகாலட்சுமி, குட்டி தேவதை, இளவரசி, செல்லக் குழந்தை' என அடுக்கிக் கொண்டே போனார்கள். 'சரி... சரி தம்பியை மட்டும் சிங்கம்' என மறுபடியும் தொடங்கினாள்.


'மணி அப்பா, நீ சொல்லு' எனக் கேட்டாள்.

'சரி, சொல்கிறேன் கேள். சிங்கம் காட்டின் ராஜா மிகவும் வலிமையுள் ளதாகவும், கம்பீரமாகவும் வலம் வரும். அதன் முகத்தில் உள்ள தாடி முடி கிரீடம் போல் காட்சி தரும். அனைத்து விலங்குகளையும் வேட்டையாடி உண்ணும். சிங்கம் ஒரே நேரத்தில் 20 மணி நேரம் தூங்கும்.

ஆண் சிங்கத்தை 'அரிமா' என்று அழைக்கலாம். பெண் சிங்கங்களே வேட்டையாடும். சிங்கத்தின் கர்ஜனை 8கிலோ மீட்டர் கேட்கும். சுமார் அதன் எடை 250 கிலோ இருக்கும்.

13 அடி நீளம் கொண்டு வால். அனைத்து செயல்களை பொறுமையாக முடிவு எடுக்கும். யாருக்காகவும் படிந்து செல்லாது தவறு என்றால் தவறுதான். நேர்மையாக நடந்து கொள்ளும்.

ஆகவேதான் தாத்தாவும் உனக்கு தம்பி பாசமாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பதால் உனக்கு சிங்கம் போல தம்பி பிறப்பான் எனக் கூறினார்' என்றார். 'சரி அப்பா', எனச் சொல்லிக் கொண்டே உறங்கினாள்.



# கல்வியின் பரிமாண வளர்ச்சி

கல்வி கற்பது முடியுறா பயணம்
நாம் அதில் சுற்றுலாப் பயணிகள்
துறைகள் ஒவ்வொன்றிலும்
அவரவர் திறமையை
வெளிப்படுத்தும் தடங்களாய்...
தடம் பதிப்போம் தடைகளை
தகர்த்து மாமனிதர்களாய்..
கற்களைக் கொண்டு செதுக்கினால் சிலையாகும்
கல்வியைக் கொண்டு செதுக்கினால்
ஆயக்கலைஞன் ஆவாய்..
காகிதத்தை படி
வாழ்வில் வெற்றி பெறுவாய்..
உனக்கு தேவை  பட்டறிவு
காகிதத்தை படி பகுத்தறிவு பெறுவாய்.
ஒரு நாள்  சமுதாயமே திரும்பிப் பார்க்கும்
உன்னை நீ  உணரும்   தருணத்தில்..
ஆண்டவனைக் அனுபவத்தால்  காண்பாய்
கணினியில் கற்றால் ஏற்படுவதோ கண்கோளாறு
தொலைபேசியில்  படித்தால் ஏற்படுவதோ ம
னக்கோளாறு
இரண்டும் சரிசெய்யவே தேவைப்படுவதோ
புத்தகக் கோனாறு.
கற்பதால் கிடைப்பதோ மன வளர்ச்சி
நமக்கு ஏற்படாது மன தளர்ச்சி
படிக்க படிக்க எண்ணத்தில் ஏற்படுவதோ
மனவெழுச்சி.அதுவே கல்வியின் பரிமாண வளர்ச்சி



**ஆண்டாள் ரங்கநாயகி**
கோயம்புத்தூர்





**வே. க. ரோஹரின் கவீ**
திருப்பூர்



**லா. சாப்ரின் செர்லினா**
மஞ்சம்பட்டி





## அழக்கூடாதென்றுதானே இருந்தேன் ?

விடைபெறுகையில் அழுகையோடிருந்த
எங்கள் முகங்களைப்
பாவமாய் நோக்கி நின்ற
அவன் அழகு முகத்தை
மீண்டுமொருமுறை உச்சி
முகர்கிறேன் நெஞ்சுக்குள்ளே.
அங்கிங்கு கிடக்கும் அவன்
விளையாட்டுச் சாமான்களை
எடுத்து அடுக்கினேன்
வெட்டிப்போட்ட காகிதத்
துண்டுகளையும் சிறுமேசையில்
சிதறிக் கிடக்கும் வண்ணப்
பென்சில்களையும் ஒதுக்கினேன்
பிள்ளை உடுத்துக் களைந்த
சட்டையையும் கால்சட்டையையும்
துவைக்கப் போட்டேன்
கொடியில் விரித்துக் கிடந்த
அவன் தலைதுவட்டும் துண்டையும்தான்.
மனம் போனபடி வரைந்து அவன்
சுவரில் ஒட்டி வைத்திருக்கும்
படங்களையும் பார்த்துக் கொண்டேன்.
பிள்ளையின் ஓட்டத்துக்கும்
சாட்டத்துக்கும் இடம் போதாதிருந்த வீடு
இப்போது மட்டும் ஹாவெனக்
கிடப்பதை நோட்டமிட்டேன்
விட்டுப்போன குட்டி சாக்ஸை
அலமாரியில் வைத்தபோதும்
குடித்து மீதமிருந்த அவன் தண்ணீர்
பாட்டிலைக் கையில் எடுத்த போதும்
அழக் கூடாதென்றுதான் இருந்தேன்.
படுக்கையில் என்னருகே கிடக்கும்
பிள்ளையின் போர்வையைத்
தழுவுகிறது கை.
அழக்கூடாதென்றுதானே இருந்தேன் ?

ரமீலா ராஜிக்

## தகனன்

பிணத்தை எரிப்பவனும்
ஒருநாளில் சாவான்
அவனையும் சாம்பலாக்க
அடுத்தவனும் வருவான்

பிறரின் அழுகையிலே
வெட்டியானின் மகிழ்வு
ஒருவரின் இறப்பினிலே
மற்றவர்க்கு வாழ்வு

விதியென வைத்திருக்கும்
நிலையினைப் பாரு
மண்ணில் நமக்கு
இடமேது கூறு

உணர்ந்து நடப்பவர்க்கு
உலகம் வசமாகும்
அறியாதா மனிதருக்கோ
அமுதமும் விசமாகும்

கருணையற்ற தொழிலாலே
குடும்பத்தை காக்கும்
இறந்தவரை கடவுளாக்
கண்களில் பார்க்கும்

உடலெரிக்கும் தகனனின்
அடுப்பெரியுது வீட்டிலே
மாண்டவன் வேகுறான்
அந்தோ சுடுகாட்டிலே

லீ. லியாகத்அலி

**கவிஞர் சீ. பாஸ்கரின்**

# விழியின் ஓசை

*கவிதை நூல் விமர்சனம்*




நூலின் பெயர் : விழியின் ஓசை
நூலாசிரியர் : கவிஞர் சீ. பாஸ்கர்
வெளியீடு : மௌவல் பதிப்பகம்
தொடர்பு எண்: 9787709687 / 9941147699

நூல் விமர்சனம்: **கவிஞர். காசாவயல் கண்ணன்**

தன்னை தையல்காரர் மகன் என அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள பாஸ்கர் ஒரு ஆசிரியர். தந்தை துணிகளை இணைத்து ஆடைகளைத் தந்தவர். இவர் வாழ்வியலை அனுபவங்களை தொகுத்து கவிதையாகத் தந்திருக்கின்றார்.

கவிதையெழுதுகிறேன் பேர்வழியென உருவம் உத்தி,வடிவம் சொற்செட்டு என தலையைச் சுற்றி மூக்கைத் தொடாமல் எந்தப் பம்மாத்தும் பண்ணாமல் தான் வாழ்கின்ற சமூகத்திலிருந்து மனிதர்களிடமிருந்து கவிதைகளை சமைத்திருக்கின்றார்.

தொகுப்பு முழுக்க நட்பையும் உறவையும் நாணாக்கி கவிதைத் தேரை கனிவோடு இழுத்து வருகின்றார்.

"எல்லோரையும் அழவைத்துவிட்டு
சிரித்துக்கொண்டிருக்கிறார்அப்பா
கண்ணீர் அஞ்சலி போஸ்டரில்"

என அப்பாவுக்கான உருக்கமான கவிதை சொன்ன பாஸ்கர்

"அன்னையர் தினம் பற்றி அறியாத அம்மாவுக்கு
வாழ்த்துகள் சொன்னேன்
அதெல்லாம் இருக்கட்டும்
நேரமாச்சு வந்து சாப்பிடு என்றாள்"

என்று நம்மையும் உச்சுக்கொட்ட வைக்கிறார் அம்மா கவிதையில்.

“கிராமங்களில் குழந்தைகள் பிறந்தால் அப்படியே அப்பத்தாவை
உரிச்சு வச்சு பொறந்திருக்காள்”

என்று சொல்கிற வழக்கம் உள்ளது. அம்மா இல்லாத வீடு கவிதையில் பாஸ்கர் இன்னும் ஒருபடி மேலே போய்

”பெரியவள்
பெரியவளான பின்புதான்
இன்னொரு அம்மா உருவாகிறாள்
இல்லத்தில்”

மகள்களின் அம்மாக்களில் நகல்களானதை அம்மா இல்லாத வீடு கவிதையில் அழகாய்ச் சொல்கிறார்.

பக்கத்து வீட்டுக் காரனைக்கூட இந்தியா பாகிஸ்தான் பகைபோக எண்ணி முறைத்துக்கொண்டிருப்பதை பல இடங்களைப் பார்க்கின்றோம். முற்றுப்புள்ளியே இல்லாமல் பகை வளர்ந்துகொண்டே போகுமே... ஆனால் மனித மனங்களைவிடவும் மரஞ்செடி கொடிகள் மனமொத்து இருப்பதை கவிதையாக்குகிறார் இப்படி.

“அடுத்த வீடுகளில்
வசிக்கும் நபர்கள்
மனக்கசப்பில் பேசாமிலிருக்க
அவர்கள் வீட்டு
வேப்பமரத்தின் வேர்களோ
கசப்பை மறந்து
கைகுலுக்குகின்றன”

வறுமையின் ஆகக் கொடிய அவதாரம் பசி. இரண்டே இரண்டு எழுத்து தான். ஆனால் நாம் எத்தனை எழுத்துக்களை எத்தனை யுகங்களாய் எழுதினாலும் ஏழைகளுக்குள் மட்டும் ஒற்றுமையா இன்னும் வாழ்கிறது. அந்த அவஸ்தையை அழகாய் சொல்கிறார் பாஸ்கர் இப்படி

“ஏழை வீட்டு வாசலில்
எளிதில் நுழைந்து விடும் விருந்தாளி
பசி”

“தப்பு செய்யாத குழந்தைகளின் வயிற்றை
மூன்று வேளையும் கிள்ளிக்கொண்டே இருக்கிறது பசி”

வறுமையை அதன் கொடுமையை வானத்தின் ஆறுதல் என்று இரண்டே வரிகளில் மிரண்டு போக வைக்கிறார்

*“கண்ணீர் துளிகள் ஆகின்றன*
*மழைத்துளிகள்*
*ஓலை குடிசைகளின் மேல் விழும்போதெல்லாம்”*

*நீங்கள் எத்தனை வசதிகளோடு வாழ்ந்தாலும் அதுவல்ல வாழ்க்கை பெரியவர்கள் முதியவர்கள் இருக்கிற வீடு எப்போதும் செழிப்பா இருக்கும்.*

*அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பாருங்கள் நீங்கள் குலதெய்வம் கோயிலுக்கெல்லாம் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது.*

*"எப்போதும் தனிமையில் பேசிக் கொண்டிருக்கிறாள் என்று*
*சலித்துக் கொள்பவர்களுக்கு தெரியாது*
*சாய்வு நாற்காலியின் பக்கத்தில் அமர்ந்து*
*அதன் இரு கைகளைப் பற்றி*
*பாட்டி பேசிக் கொண்டிருப்பது*
*இறந்து போன தாத்தாவுடன் தான் என்பது"*

*குழந்தைகளின் உலகத்தைப் பற்றி ஏகப்பட்ட கவிதைகள் இருக்கிறது. அதில் எனக்குப் பிடித்த இரண்டு கவிதைகளை தருகிறேன்*

*"குழந்தைகள் செய்த கப்பலை*
*எங்கு நிறுத்தினாலும்*
*கடல் ஆகிறது வீடு"*

*“பட்டம் விட்டு*
*விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்கள்*
*வீடு திரும்பும்போது*
*மறக்காமல் எடுத்து வந்து விடுகின்றனர்*
*அவர்களின் வானத்தையும்"*

*சலூன் கடைக்காரன் கவிதையில்... அடடா சொல்ல வைக்கும் இரண்டு வரிகள்*

*"இவன்*
*முன்னுரை எழுதாமல்*
*முடிவுரை எழுதுபவன்"*

*போதையின் பாதையை சரியாய் சொல்லும் வரிகள் இதோ*

*"பேருந்தில் செல்லும் தூரத்தில் மருத்துவமனை*
*சைக்கிளில் செல்லும் தூரத்தில்*
*பள்ளிக்கூடம்*
*நடந்து செல்லும் தூரத்தில் டாஸ்மாக்."*

வறுமையிலும்
பிச்சை எடுக்காமல்
உழைத்து தான் சாப்பிட வேண்டும் என்கிற உறுதியோடு

இரும்பு பென்சில் விற்பவரையும்
ஊதுபத்தி விற்பவரையும்
தினந்தோறும் நாம் பார்த்தே கடக்கிறோம்.

பாஸ்கரின் பார்வை நெகிழச் செய்கிறது

"பார்வையற்றவரிடம் வாங்கிய
மெழுகுவர்த்தியை ஏற்றியதும்
பிரகாசிக்கிறது கடவுளின் முகம்"

நாம் வாங்கும் ஊதுபத்தியின் குச்சிகள், அவர்கள் வாழ்க்கையை நகர்த்தும் ஊன்றுகோலாய் அமையட்டும்.

நூலை விரிக்க விரிக்க பாஸ்கரின் விழியின் ஓசை சிம்பொனியாய் நம் செவிகளை நிறைக்கிறது. மனங்களின் கணங்களை குறைத்து இலகுவாக்குகிறது.

நான் குறிப்பிட்ட கவிதைகள் மட்டும் அல்லாது தொகுப்பில் பல கவிதைகள் வாசிக்கும்போது அடுத்த வரிக்குச் செல்ல விடாமல் நேசிக்க வைக்கிறது.

வாழ்த்துகள் பாஸ்கர். ஆசிரியராய் சொல்லிக் கொடுக்கும் நேரத்தில் கூட கவிதைகளை அள்ளிக் கொடுக்கும் உங்களின் இலக்கிய ஆர்வத்துக்கு எனது அன்பு வாழ்த்துகள்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல சில கவிதைகளை மட்டும் குறித்திருக்கின்றேன்.


இன்னும் நிறைய இருக்கிறது


விழியின் ஓசை உங்களுக்கு வேறு கவிதைகளையும் காட்டும் வாசியுங்கள் .

நேசியுங்கள் பாஸ்கரின் கவிதைகளை..

வாழ்த்துகளுடன்

காசாவயல் கண்ணன்
புதுக்கோட்டை






## ‘கருப்பன்‘ நூல் அனுபவம்

*(சிறுகதை தொகுப்பு )*

பனுவலின் முகப்புப்படமாய்க் காரிரு ளில் ஒளிரும் விழிகளோடு பிறப்பிக்கப் பட்டிருக்கும் கருப்பனோவியம் மிக வடிவு.

ஓர் ஓவம் (ஓவியம்) வடித்தலும் ஒரு தியானத்தில் மூழ்கியிருக்கும் நிலை யென்பதை கண்ணுள் வினைஞர் (ஓவியர்) இயல் எனும் கோதை உள்ளத்தில் விதைக்கிறார்.

துபாயில் வாழும் மூத்தோன் தேவா சுப்பையா அவர்கள் ஏழு சிறுகதைகளால் இந்நூலை சுவடு பதிப்பகம் மூலம் வடித்திருக்கிறார்.

ஒவ்வொரு படைப்பாளியும் புது புது சொற்களால் தாய்மொழிக்கு மூலாம் பூசுகையில் எப்படி மிளிராமல் போகு மென்பதை உணர்த்தும் இந்நூற் சேயில், ஏராளமான தேன் பதங்களோடு பின்னப் பட்டிருப்பது நேர்த்தியான விடயம்.

அதே சமயத்தில் தற்காலக் கதைக் கருக்களை ஆக்கமாக்குகையில் கருவேலங் செடிகளாய் ஆங்கிலச் சொற்களும் வடமொழிச் சொற்களும் இயல்பாய் முளைத்துத் தான் விடுகின்றன. இது நம் மூத்தமொழி அதிவேகமாய்த் தேயும் அபாயமணியை ஒவ்வொரு தமிழரின் காதுகளிலும் உரக்க ஒலிக்கச்செய்கிறது.

தெம்மாங்குப்பாடல், நகைச்சுவை உணர்வு, திருப்பங்கள், புதிய உவமை, உருவகங்களென ஆசிரியர் அருமையாக காட்சிப்படுத்தும் விதத்தில் ஆழ்மயக்கம்.

மறுகாலோடும் காதலை கடிதத்தில் பெண்ணெழுவதாய் இருக்கும் கதையில் மூழ்கிப்போன நெஞ்சம் இன்னும் எழவில்லை.

சிற்றளவு நீரோடும் வழுக்குப்பாறையில் வழுக்கி விளையாடுகையில் ஊற்றெடுக்கும் இன்பம் தான் வட்டார வழக்கு சொற்களைத் தாத்தனும் அப்பத்தாளும் பேசும் காட்சிகளில் எல்லாம்.

பிறந்த பேரனுக்குக் கிணற்று நீரை சீனித்தண்ணியாய்க் கொடுக்கும் கிணற் றின் கதை மனதில் ஆணிவேர் விட்டு விட்டது.

அப்புவெனும் சிறுவன் தனது பிறந்த நாளன்று தொலைக்காட்சிப் பெட்டியை மிட்டாய் எடுக்கச்சொல்லும் காட்சி யெல்லாம் மனதிலிருந்து எப்படி அழியும்.

இந்நூலில் துபாய் பற்றித் தூறும் அனைத்து விடயத்தூறல்களுக்கும் இதயக்

குறியீடு இட்டுக் கொண்டேயிருக்கும் அளவுக்கு மெய்யே.

சில இடங்கள் சில கதாபாத்திரங்கள் இயல்பாக அல்லாமல் ஆசிரியரின் அறிவு திணிக்கப்பட்டு உப்பிப் போயிருக்கிறது. ஒவ்வொரு கதாப்பாத்திரங்களை அறிமுகம் செய்கையில் அவர்கள் கண்முன் நிற்கும் வண்ணம் உருவாக்கியிக்கும் கவிநயம் ஒரு நாவலையோ அல்லது நீண்ட சிறு கதையையோ தமிழுலகத்திற்கு எப்பொழுது ஆசிரியர் பரிசளிப்பாரென்று வினவத் தோன்றாமலில்லை.


சிறந்ததொரு நூல்சேயோடு உறவு கொண்டு சில நாட்கள் வரவு செய்ததில் மனநிறைவு.

ஒரு நூல் எவ்வளவு விடயங்களை எழுத்துகள் மூலம் எடுத்துரைக்கிறதென்று எண்ணி முடிக்கையில் நூலின் கடைசிப் பக்கம்.

நூலாசிரியர், பதிப்பாளர், ஓவியரென நூலுக்கு உழைத்த அனைத்துள்ளங்களுக்கும் மனம் பூத்த வாழ்த்து

நூற்பெயர் : கருப்பன்
படைப்பாளி : திரு. தேவ சுப்பையா
பதிப்பகம் : சுவடு
ஊக்கத்தொகை : ருபாய் 180
வகைமை : சிறுகதை
நூல் தொடர்புக்கு : திரு நல்லு லிங்கம்
+91 95510 65500

- ஸ்ரீவி.முத்துவேல்
துபாய்



# பாலையின் சாலையாகி...

மலை முகட்டில் மிதந்து தவழும்
ஈர முகில் தழுவலாக தனிமையில்
உறவாடும் நினைவலைகள்

வீசிய காற்றில் சலசலத்து
அமைதி கொள்ளும் இலைகளென
விருப்பங்களின் பாடலில்
இசைத்து அடங்கும் இதயம்

காலையின் தொடர்தலில்
மாலையும் மாலையின் அணைப்பில்
இரவும் நிகழ்தலாய் பிரபஞ்சக்
கேளிக்கைகளுள் உணரும்
இணைந்த பிரிவு

வேதங்கள், உபநிடதங்கள்
வேண்டுதல் நேரங்களில் மட்டுமேயன்றி
நிமிடங்களில் பிரமிக்கத்தக்க
மோட்சங்களடையும் உன்
சொற்பொழிவில் வாழ்வின் சாலை
அமுது நனையும்

ஒவ்வொரு நிழலாகப்
பெயர்த்தெடுக்க விளைகையில்
மௌனவெளியில்
கூண்டுக்கம்பிகளின் பொறியில்
துளாவும் கரங்களில்
துயரத்தின் சாவி

ஆதியின் கூர்மை
அடுத்தடுத்த அடிகளில்
முனை மழுங்கி சாபங்கள்
தொங்கும் வற்றிய நதியாய்
வெருண்டு கிடக்கும்

உருமாற்றம் கண்ட இதய பூமி
உணர்வுகளைக் கைது செய்த
பாவத்தில் பூக்களற்றுப் பாலையின்
சாலையாகி நெடுந்தூரம்
ஓடிக்கொண்டே இருக்கிறது

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை







Oil on canvas
Mahesh pandit



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

செப்டெம்பர் 2024

ஏற்றமே கொண்டு வாழ
எளியநல் வழியா இல்லை
மாற்றமே பெறலாம் மக்கள்
மரங்களை வளர்த்தால் போதும்!
சீற்றமே குறைந்து வானம்
சிந்திடும் மழையை எங்கும்!
சாற்றுவீர் புவியில் நன்றாய்த்
தழைத்திடும் மரங்கள் காப்பீர்!

**பாவலர்மணி தென்றல் கவி**

